SAMARASAM
# சமரசம்
மாதம் இருமுறை இதழ்
1-15 அக்டோபர் 2026 ₹25
Volume : 47 Issue : 08
www.samarasam.net

## வெளிநாட்டு முதலீடுகளின் அவசியங்களும் எதிர்பார்ப்புகளும்

கேரளத்து இயக்க வானின் நட்சத்திரம்
## மம்முனி மௌலவி இறை அழைப்பை ஏற்றார்






Leadership Excellence for Advancement and Development

## LEAD 100
## எதிர்கால மாற்றத்திற்கான தலைவர்களை உருவாக்குதல்

TRADITIONAL TRUST SINCE 1925
LKS
100 YEARS

மனிதர்களே! நிச்சயமாக, உங்கள் இறைவனிடமிருந்து ஓர் அறிவுரை உங்களுக்கு வந்துள்ளது. இது இதயங்களில் உள்ள நோய்களைக் குணப்படுத்தக் கூடியதாகவும், தன்னை ஏற்றுக் கொள்பவர்களுக்கு வழிகாட்டியாகவும் அருளாகவும் இருக்கிறது.

– திருக்குர்ஆன் 10:57

கதீட்ரல் ரோடு
L.K.S.
கோல்டு பேரடைஸ்

35. கதீட்ரல் ரோடு, சென்னை – 600 086.
போன் : (044) 2811 3611



உள்ளே...


● கடிதங்கள் ● திருக்குர்ஆன் விரிவுரை ● நபிமொழி விளக்கம் ● புதிர் போட்டி

7 சிறுமிகளைச் சீரழிக்கும் கொடூரம் முற்றுப் பெறுவது எப்போது? ● தலையங்கம்

8 ஏமன் : முடிவில்லாத போரின் பின்னணியும் தீர்வும் ● Dr. J. முஹையுதீன் MBBS MS MCh

14 மொகலாயப் பேரரசு – சில வரலாற்றுச் செய்திகள் ● சேயன் இப்ராகிம்

18 சிரித்து வாழ வேண்டும் ● மௌலவி ஹாஃபிழ் தா.முஹம்மது ஜுபைர் சித்தீகி

20 திணிக்கப்படும் இடைத்தேர்தலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் ● ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலத் தலைவர் மௌலவி முஹம்மத் ஹனீஃபா மன்பயீ

24 கேரளத்து இயக்க வானின் நட்சத்திரம் மம்முனி மௌலவி இறை அழைப்பை ஏற்றார் ● டாக்டர். ஏ.ஏ. ஹலீம்

29 வெளிநாட்டு முதலீடுகளின் அவசியங்களும்! எதிர்பார்ப்புகளும்! ● கப்ளிசேட்

34 இஸ்லாமிய எதிர்ப்பிலிருந்து இறையச்சத்தை நோக்கி..! ● யோரான் வான் கிளாவரென்

38 LEAD 100 எதிர்கால மாற்றத்திற்கான தலைவர்களை உருவாக்குதல் ● M. சாஜித்

42 நானிலத்தின் நன்மாதிரி நபிகள் நாயகம்(ஸல்): சென்னைப் பேருரைகள் ● K. ஜலாலுத்தீன்

44 இறுதி முடிவை இனிதே அமைத்துக் கொள்வோம்! ● அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது

46 நாவல் : அக்கரைப் பச்சை ● ஜரினா ஜமால்

50 ஃபலஸ்தீனுக்கு ஆதரவான யூதர்களின் குரல் ● ரியாஸ் மொய்தீன்



ஆசிரியர் - வெளியிடுபவர் : **H.அப்துர் ரகீப்**

பொறுப்பாசிரியர் : **வி.எஸ். முஹம்மத் அமீன்**

இதழ் வடிவமைப்பு : **M. முஹம்மது அபூபக்கர்**

*படைப்புகளை அனுப்ப :*
**samarasam.article@gmail.com**

*சந்தா - விநியோகப் பிரிவு விளம்பரத் தொடர்புக்கு :*
**M. அப்துல் காதர் 95661 53142**

*விளம்பரங்களை அனுப்ப :*
**samarasam.advt@gmail.com**

பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோர்: Creative Communication Chennai எனும் பெயருக்கே அனுப்ப வேண்டும்.

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு | : | ரூ.550 |
| அரையாண்டு | : | ரூ.280 |
| வெளிநாடு (ஓர் ஆண்டு) | : | ரூ.3500 |

Creative Communication Chennai
SCAN & PAY
UPI ID: creative3142@sbi

சமரசம் சந்தாக்கள்,
விளம்பரக் கட்டணங்களை அனுப்ப
QR Codeஐ Scan செய்யவும்

பொறுப்பாசிரியர், சமரசம்,
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12
● 044-2662 0091
● samarasam.article@gmail.com
● www.samarasam.net

● கடிதங்கள்




## பாதுகாக்க வேண்டிய இதழ்

காவிரி குறித்த கட்டுரை முழுமையான தகவல்களுடன் சிறப்பாக உள்ளது. இளைஞர்கள் முதல் பெரியவர்கள் வரை அவசியம் அறிய வேண்டிய, உணர வேண்டிய ஆக்கம். இங்குள்ள காங்கிரஸ்காரர்கள் நியாயத்தின் பக்கம் நின்று தங்கள் கட்சி அரசை மேகதாதுவில் அணை கட்டவிடாமல் தடுத்து நிறுத்த வேண்டும். தமிழ்நாட்டில் பாஜக உட்பட அனைத்துக் கட்சித் தலைவர்கள் MLAக்களிடமும் சமரசம் இதழ் சேர வேண்டும். நடப்பு அரசின் புதுமுக அமைச்சர்கள் உள்பட அனைவருடைய கைகளில் இருக்க வேண்டிய ஓர் ஆவணம் எனில் மிகையல்ல. பத்திரப்படுத்த வேண்டிய இதழ்.

தேசிய கௌரவ அவமதிப்பு தடுப்பு (திருத்த) மசோதா கொல்லைப்புற வழித் திணிப்பு. முஸ்லிம்களைத் தீண்டி, அரசியல் பிழைப்பு நடத்தத் திட்டமிட்டுள்ள சட்ட வடிவம் இது. அரசு மீளாய்வு செய்யும் வரை இந்தப் பிரச்னையை விட்டுவிடக் கூடாது. மது போதையற்ற தமிழ்நாடு உருவாக, படிப்படியாக டாஸ்மாக் அரசு மதுக்கடையை ஒழித்து பூரண மதுவிலக்கு நோக்கி அரசு செல்ல வேண்டியது காலத்தின் கட்டாயம்!

தமிழக சட்டசபையில் உரையாடல் கலாச்சாரம் தடம் மாறிச் செல்வது குறித்த சமரசத்தின் கவலை அர்த்தமுள்ளது. புதிய அரசில் அனைவரும் நம் முன்னோர்கள் எவ்வளவு நாகரிகமாக அறிவுப்பூர்வமாக வாதிட்டுள்ளார்கள் என்பதை சட்டசபையிலுள்ள பதிவேடுகளை வாசித்துத் தெளிவு பெற வேண்டியது மிக அவசியம்.

– S.A. சபீர் அஹ்மது,
ஆணைக்காரன்சத்திரம்

## தீமைகள் இல்லா தமிழகம் மலர..!

தலையங்கம் அர்த்தம் நிறைந்தது. தவெக அரசு இலஞ்சம் இல்லாத தமிழ்நாடு உருவாகப் பாடுபடுவது உயர்ந்த வரவேற்க வேண்டிய பணியே. அதே வேளையில் நீண்டகாலப் பிரச்னைகளாக தமிழ் நாட்டை செல்லரித்துக் கொண்டிருக்கும் போதைக் கலாச்சாரம், பாலியல் வன்முறைகள், அவற்றின் விளைவால் காவு வாங்கப்படும் உயிர்கள் பற்றி சிந்திக்க வேண்டும். மது, போதை, கொலை இல்லாத தமிழ்நாட்டை உருவாக்குவதே இந்த அரசின் முதன்மைப் பணியாகும். எவ்வளவு தான் சாதனைகளை நிகழ்த்தினாலும் மேற்கண்ட தீமைகள் மாறாத வரையில் அரசு எதிர்பார்க்கும் வெற்றித் தமிழகம் அமையப் போவதில்லை. காங்கிரஸ் கட்சி தங்கள் முன்னோர்களின் வீரியத்தை வந்தே மாதரம் பாடல் விஷயத்தில் தற்போது காட்டாததால் மதச்சார்பற்ற சக்திகளின் ஆதரவை விரைவில் இழந்து விடும் ஆபத்து உள்ளது. ராகுல் காந்தி அடுத்த பிரதமராவது கனவாகி விடும்.

– ப.சையத் அஹ்மத், துளசேந்திரபுரம்

## நெகிழ வைத்த கடைசிப்பக்கம்

பெற்றோர்கள் குறித்த வாழ்க்கைப் பாடம் மிக அருமை. தாய் தந்தையரிடம் நல்லவிதமாக நடந்து கொள்வதை மிகச் சிறப்பாக எடுத்துரைத்துள்ள ஷெய்க் அகார் முஹம்மதுக்கு வாழ்த்துகள். மதுவும், போதையும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே இருக்கின்றன. பூரண மதுவிலக்கை நடைமுறைப்படுத்தினால் மட்டுமே போதை இல்லாத தமிழ்நாடு சாத்தியம் என்பதை மிக அழுத்தமாக சமரசம் எடுத்துரைத்துள்ளது. இந்து, முஸ்லிம் பாகுபாடின்றி மாற்றுச் சிறுநீரகத்தைப் பொருத்திய செய்தி கடைசிப் பக்கமாக வெளியாகி நெகிழ வைத்தது.

– M. லைலாம்மா, S. மகுதனன்,
S. அஜித்தா, தேனி

## மனிதன் மாற வேண்டும்

கடந்த ஆட்சியில் நடந்த மது, போதை வியாபாரம் இந்த ஆட்சியிலும் தொடர்கிறது. மனிதன் போதையை வெறுக்காத வரை இந்த நிலை தொடரும். காவிரி நீரை கடைமடை விவசாயியும் அனுபவிக்க வேண்டும். சட்டமன்ற நடவடிக்கைகளைப் பேசிக்

கொண்டிருக்கும் வேளையில் நாடாளுமன்றம் முடக்கப்படுவதை சேயன் இப்ராகிம் தோலுரித்துக் காட்டியுள்ளார். சிறார் உலகத்தின் விளையாட்டுக் கவிதை சிறப்பு.

– இரா.சண்முகவேல், கீழக்கலங்கல்

## அழகிய முகப்பு

சமரசம் 1-15 செப்டம்பர் இதழ் அட்டைப் படம் சிந்தனையை கவர்ந்தது. ஒருபக்கம் தமிழ்நாடு பச்சை பயிர் செழித்து ஓங்கும் படமாகவும், இன்னொரு பக்கம் கர்நாடகா, மேகதாது வறண்டு போய் காணப்படும் படமாகவும், காவிரியும் கடைமடை விவசாயியும் என்ற கட்டுரைக்கு ஏற்றாற் போல் முகப்பு அட்டை அமைந்தது.

– ஜே.மகரூப், குலசேகரபட்டினம்

## மூடுங்கள் மதுக்கடைகளை

அறன் ஈனும், இன்பமும் ஈனும் திறனறிந்து, தீதின்றி வந்த பொருள்.

மது போதை வருமானம் இல்லாமல் அரசு இயந்திரம் செயல்பட முடியாதா? அரசுக்கே உரிய கேள்வியாகும்.

அநாவசிய செலவுகள் இன்றி, மது போதை பாதையை அடைக்க வேண்டும். பட்டிதொட்டியெல்லாம் பள்ளிச் சிறார்கள் மது, போதை தொடர்பு கொலை கவலை அளிக்கிறது.

நாட்டின் எதிர்காலம் போதை பாதையாகி விடும்! மக்கள் அழிவு ஏற்படும் அபாயம்! முதலில் அரசு மதுபானக் கடைகளை முற்றிலும் மூட நடவடிக்கை வேண்டும். இல்லையெனில் நாடு தழுவிய மது போதை ஒழிப்பு முயற்சி தானே உருவாகி விடும்.

– கவிஞர் காசீம், கடையநல்லூர்

## வருமானம் அல்ல அவமானம்!

பெற்றோர்களைத் தனிமைப்படுத்தும் பிள்ளைகளிடம் இனிமையான சொல்லை எப்படி எதிர்பார்க்க முடியும்? காவிரி நீர் விவகாரத்தில் வேற்றுமையை மறக்க வேண்டும். கடைமடை விவசாயிகளை நினைக்க வேண்டும்.

மதுவால் நாட்டுக்கு வருமானம்
வீட்டுக்கு அவமானம்
பாட்டிலைத் திறக்கும் முன் யோசியுங்கள்
குடும்பத்தை நேசியுங்கள்.

எளிமையான திருமணம் சுகமானது, சுவையானது. மதம் கடந்து மருத்துவர்களின் சேவை பாராட்டுக்குரியது.

– எம்.எஸ். பாரூக், திருப்பாலத்துறை

## மக்கள் திருந்த வேண்டும்

பத்து வகையினரை திருநபி(ஸல்) அவர்கள் சபித்த நபிமொழியை சமரசத்தில் வாசித்தேன். 1. மதுவை இறக்குவோர் 2. மதுவை இறக்க வைப்போர் 3. மதுவை அருந்துபவர் 4. மதுவை அருந்தச் செய்வோர் 5. மதுவை எடுத்துச் செல்வோர் 6. மதுவை விற்பனை செய்பவர் 7. மதுவை வாங்குபவர் 8. மதுத் தொழில் நடத்துபவர் 9. மதுவை எடுத்து வரச் செய்பவர் 10. மதுவை மற்றவருக்காக வாங்கி வருபவர். இவ்வளவு கொடிய மது அரக்கன் தேவையா?

– M. ராதாகிருஷ்ணன், வாணியம்பாடி

## செயல் வடிவம் பெறுமா?

மது தமிழ்நாட்டில் இரத்தத்தில் ஊறியது. இதைத் தடுக்க வேண்டுமானால் மிகவும் சிரமம்தான். இது வெற்றித் தமிழகத்திற்கு சாத்தியம் இல்லை. தலையங்கத்தில் தாங்கள் கூறும் வார்த்தைகள் அருமையாகத்தான் இருக்கிறது. பின்பற்றுவது, நடைமுறைப்படுத்துவது மிகவும் கடினமே. சொல்வோம் தெளிவாகக் கேட்பது கேட்காமல் இருப்பது தமிழக மக்கள்தான் முடிவு செய்ய வேண்டும். முடக்கப்பட்ட நாடாளுமன்றம் கட்டுரையின் கருத்துகள் யாவும் சிந்திக்க வேண்டியவை.

– டி.எம். பெரோஸ்கான்,
விருத்தாச்சலம்

## மதிப்பிழக்கும் அவை

காவிரியும் கடைமடை விவசாயியும் கட்டுரை பல ஆண்டுகளாக நடந்த விஷயங்களை அலசி இருக்கின்றது. எது எப்படி இருந்தாலும் தண்ணீர் கிடைக்க ஆவண செய்தால் மட்டுமே விவசாயம் செய்ய முடியும். தமிழ்நாட்டின் உரையாடல் கலாச்சாரம் எங்கே செல்கின்றது? எல்லோருக்கும் வேதனையான செய்தியாகவே இருக்கின்றது. மதிப்பு மரியாதை மிக்க அவை இன்று மதிப்பிழந்து கேலிக்குரிய உரையாடல்கள் கொண்ட அவையாக மாறி வருவது வேதனை.

நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நடைபெறும் போது சம்பந்தப்பட்டவர்கள் இல்லாமலேயே நாடாளுமன்றம் நடைபெறுகின்றது என்றால் ஆட்சி எதற்கு? ஆட்சியாளர்களைத் தேர்வு செய்வது எதற்கு? ஒரு மணி அடித்தால் சிறுகதை வித்தியாசமாக இருந்தது. சிலருடைய பகீர் அனுபவங்களையும் பிரதிபலிப்பதாக இருந்தது.

– சாந்த் உஸ்மானி, ஆலந்தூர்

## கவலை அளிக்கும் விவாதங்கள்

தமிழ்நாட்டின் உரையாடல் கலாச்சாரம் எங்கே செல்கிறது கட்டுரை படித்தேன். ஆன்றோர்களும், சான்றோர்களும் தங்கள் அறிவுத் திறனால், நாவன்மையால், சிந்தனைக்கு விருந்தளிக்கும் விவாதங்களை நடத்திய வரலாறு தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு உண்டு. தற்போது சில நேரங்களில் சட்டப்பேரவையில் நடைபெறும் தரம் தாழ்ந்த விவாதங்கள் மிகுந்த கவலை அளிப்பதாக உள்ளன.

'வெற்றி பெற்றவர் பெருந்தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்(Magnanimity in Victory) என்ற உலக அளவில் அறியப்பட்ட வாசகத்தை மறந்து சட்டப்பேரவையில் 'அப்பாவைக் காணோம்' என முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தோல்வியை தமிழக முதல்வர் விஜய் தன் உடல்மொழியுடன் நையாண்டி செய்வது, 'ஒரு மனைவி தன் கணவரை நீதிமன்றத்தில் தேடுகிறார்' என எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி, முதல்வர் விஜயை பதிலுக்கு நக்கல் செய்வது, இவை எல்லாம் எந்த வகையில் சட்டமன்றத்திற்கான கண்ணியத்தைக் காப்பவை என்பது தமிழக மக்களுக்குத் தான் வெளிச்சம்!

தான் பேசியதை அவைக் குறிப்பில் இருந்து நீக்குவதாக அவைத்தலைவர் அறிவிப்பது, தமக்கான அவமானம் என்று சட்டமன்ற உறுப்பினர்கள் கருதினாலே, கண்ணியமற்ற வார்த்தைகளுக்குச் சட்டமன்றத்தில் இடம் இருக்காது. இதனை உணர்ந்து சட்டப் பேரவை உறுப்பினர்கள் செயல்பட வேண்டும்.

– இரா.சாந்தகுமார், கூடுவாஞ்சேரி


ஒரு வாட்ஸ்அப் மெஸேஜ் போதும்!

- இலவசமாய் இஸ்லாமிய நூல்களைத் தொடர்ந்து வாசிக்கலாம்.
- இதர மத அன்பர்களின் இஸ்லாம் குறித்த தேடலுக்கான தளம்
- இது ஓர் அஞ்சல் வழி நூலகம்

உங்களின் முழு முகவரியையும், விருப்பத்தையும் 89252 16126 என்ற எண்ணிற்கு வாட்ஸ் அப் மெஸேஜ் அனுப்புங்கள். நூல்கள் வீடு தேடி வரும்.

**இஸ்லாமிக் அகாடமி**
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 12.
மின்னஞ்சல் : postallibrary@gmail.com

சரம் : 47
மலர் : 08

وَقُولُواْ قَوْلًا سَدِيدًا

சொல்வதைத் தெளிவாக - நேரடியாகச் சொல்லுங்கள்

1448 ரபியுல் ஆகிர் 19 - ஜமாதில் அவ்வல் 3 ● 2026 அக்டோபர் 1-15

# சிறுமிகளைச் சீரழிக்கும் கொடூரம் முற்றுப் பெறுவது எப்போது?

2025 அக்டோபர் 6ஆம் நாள் குழந்தை உரிமை ஆர்வலர் ஒருவர் சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தின் கீழ் உள்ள பாலியல் தடுப்புப் பிரிவில் பென் டிரைவ் ஒன்றைக் கொடுத்தார். 2019ஆம் ஆண்டு சிறுமியை பாலியல் வன்கொடுமையில் முதியவர் ஒருவர் ஈடுபடுத்தும் சிசிடிவி காட்சி அது.

சிசிடிவி காட்சி தெளிவாக இல்லை என்பதால் அதிலுள்ளவர்களை அடையாளம் காண முடிய வில்லை, சிசிடிவி காட்சிகள் ஆறாண்டுகளுக்கு முன்புள்ளதால் அதனை மீட்க முடியவில்லை, புகாரில் வலுவான ஆதாரம் இல்லை என்று கூறி 2026 பிப்ரவரியில் இந்த வழக்கை முடித்து வைக்குமாறு சிறப்பு போக்சோ நீதிமன்றத்தில் காவல்துறை இறுதி அறிக்கை தாக்கல் செய்தது. ஆனால் இதனை ஏற்க மறுத்த நீதிமன்றம் வழக்கை மீண்டும் விசாரிக்க உத்தரவிட்டது.

விசாரணை தீவிரப்படுத்தப்பட்டு ஜெம் கிரானைட்ஸ் நிறுவனர் 84 வயதான R. வீரமணி போக்சோவில் கைது செய்யப்பட்டுள்ளார். 20 ஆண்டுகளாக ஆதரவற்ற ஏழை பள்ளி கல்லூரி மாணவிகளுக்கு உதவுவது போல பங்களாவுக்கு வரவழைத்து பாலியல் வன்கொடுமை செய்துள்ளார் வீரமணி. இதற்கு உடந்தையாக இருந்த அவரது உதவியாளர் சாந்தி, ஜெம் நிறுவனத்தில் பணிபுரியும் சாந்தியின் கணவர் சிம்ஹன் ஆகியோரையும் கைது செய்து காவல் துறை விசாரித்து வருகிறது.

இந்தக் கொடூரக் குற்றத்தில் வீரமணிக்கு நெருக்கமான தொழிலதிபர்கள், அரசியல்வாதிகள், அதிகாரிகள் ஆகியோருக்கும் பங்கு இருப்பதாகச் செய்திகள் வெளிவந்து பெரும் அதிர் வலையை ஏற்படுத்தியுள்ளது. காவல்துறையைச் சேர்ந்த சில உயர் அதிகாரிகள் வீரமணியை மிரட்டி 50 கோடிக்கும் மேல் இலஞ்சமாகப் பெற்றுள்ளதாகவும், சிறையில் வீரமணியின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்றும் தொடர்ந்து செய்திகள் வெளியாகி வருகின்றன.

வீரமணியின் வீடு, அலுவலகங்களில் நடத்தப்பட்ட சோதனைகளில் 10க்கும் மேற்பட்ட சிறுமிகள் வன்கொடுமைக்கு ஆளான வீடியோக்கள், புகைப்படங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ள நிலையில் 9 பேர் தாங்கள் சிறுமிகளாக இருந்தபோது வீரமணியால் பாதிக்கப்பட்டதாக ரகசிய வாக்குமூலம் அளித்துள்ளனர்.

2003ஆம் ஆண்டிலிருந்தே இது குறித்த புகார்கள் எழுந்ததாகவும் கடந்த ஆட்சிக் காலங்களில் இந்தப் பிரச்னையில் உரியமுறையில் கவனம் செலுத்தவில்லை என்றும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. ‘குழந்தைகளின் வாழ்வைச் சீரழிக்கும் கொடூர குற்றத்தைச் செய்வது ஆதாரங்களுடன் சிக்கியும் இந்த வழக்கை முடித்து வைக்கச் சொன்னது யார்?, இதில் தொடர்புடைய குற்றவாளிகள் மீது கடந்த ஆட்சியில் உரிய நடவடிக்கை எடுக்காதது ஏன்?’ என்ற கேள்வியை இன்றைய ஆளும் கட்சி எழுப்பியுள்ளது.

பணபலம், அதிகார பலம், காவல்துறையின் ஒத்துழைப்பு இல்லாமல் இத்தகைய இழி செயல் அரங்கேறியிருக்க முடியாது. சிறுமிகளைச் சீரழித்த இந்தக் கொடூரச் சம்பவம் குறித்து விரிவான, முழுமையான விசாரணை நடைபெற வேண்டும். உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் யாராக இருந்தாலும் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும். தண்டனைகளை அதிகப்படுத்தாதவரை குற்றங்கள் குறைவதற்கு வாய்ப்பு இல்லை. அரசியல் விருப்பு வெறுப்புகளைத் தாண்டி இந்த வழக்கில் நேர்மையான விசாரணை நடத்தப்படுவது3டன் பெண் குழந்தைகளின் பாதுகாப்பையும் அரசு உறுதி செய்ய வேண்டும். ❀

## Dr.J. முஹையுதீன் MBBS MS MCh

அரேபியத் தீபகற்பத்தின் தென் மேற்கு முனையில் அமைந்திருக்கிறது ஏமன். செங்கடலையும் ஏடன் வளைகுடாவையும் இணைக்கும் பாப் அல் மந்தப் நீரிணையை ஒட்டியிருப்பதால் உலகின் முக்கியமான கடல்வழிப் போக்குவரத்துப் பாதை ஒன்றின் அருகே இந்த நாடு அமைந்துள்ளது. ஆனால் இந்தப் புவியியல் அமைப்பு அந்த நாட்டை ஒரு பெரும் மனிதாபிமான நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. உள்நாட்டு அரசியல் முரண்பாடுகள், ஆயுத மோதல்கள், உலக வல்லரசுகளின் தலையீடுகள் ஆகியவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து பல ஆண்டுகளாகச் சீரழித்துக் கொண்டு வருகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் (UN) தகவல்படி ஏமனில் நடக்கும் போரினால் 1,12,000க்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் வீடுகளை இழந்து உள்நாட்டிலேயே அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர்; சுமார் 3,000 மக்கள் போருக்குப் பயந்து பக்கத்து நாடான 'ஜிபூட்டி'க்குத் (Djibouti) தப்பி ஓடியுள்ளனர். சர்வதேசப் புலம் பெயர்ந்தோர் அமைப்பின் (IOM) கணக்கீட்டின்படி அந்நாட்டின் மக்கள் தொகையில் பெரும் பகுதியான சுமார் 2.2 கோடி (22 மில்லியன்) ஏமன் மக்களுக்கு உணவு, குடிநீர், மருந்து போன்ற அவசர மனிதாபிமான உதவிகள் உடனடியாகத் தேவைப்படுகின்றன.

ஏமன் போரை வெறுமனே சவூதி அரேபியாவுக்கும் ஹூதிகளுக்கும் இடையிலான போர் என்று கூறிவிட முடியாது. அதேபோல் ஸன்னி ஷியா மோதல் என்ற ஒரே கோணத்திலும் அதை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. ஏமனுக்குள் நீண்டகாலமாக இருந்து வந்த அரசியல், பொருளாதார, பிரச்னைகள், ஹூதி இயக்கத்தின் எழுச்சி, அரசின் பலவீனம், தெற்கு ஏமனின் அரசியல் சூழல், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், ஈரான் போன்ற பிராந்திய சக்திகளின் தலையீடுகள், அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளின் கொள்கைகள் எனப் பல அடுக்குகள் இதில் உள்ளன. இந்தப் பெரிய அரசியல் சதுரங்கத்தில் அதிக விலையைச் செலுத்தியவர்கள் சாதாரண ஏமன் மக்கள்தான்.

### எங்கே தொடங்கியது இந்த நெருக்கடி?

இன்றையப் போரை அலசும் ஊடகங்களும், அறிவுஜீவுகளும் இதனை 10 ஆண்டுகள் நடக்கும் போராக மட்டுமே பார்க்கின்றனர். ஆனால் ஹூதிகள் வருகைக்கு முன்னரே இது தொடங்கி விட்டதை மறைத்து விடுகின்றனர். 1990க்கு முன்னர் ஏமன் வடக்கு தெற்கு என இரண்டாகப் பிரிந்து இருந்தது. வடக்கு ஏமனின் அரசியல் வரலாற்றையே மாற்றிய முக்கிய நிகழ்வுகளில் ஒன்று 1962 முதல் 1970 வரை நடைபெற்ற வடக்கு ஏமன் உள்நாட்டுப் போர் ஆகும். 1962 வரை இமாம் அஹ்மத் பின் யஹ்யா என்ற ஜைதி ஷியா தலைமையில் மன்னராட்சி நடந்தது. அவர் 1962 செப்டம்பர் 19 அன்று மரணமடைந்ததைத் தொடர்ந்து, அவரது மகன் இமாம் முஹம்மது அல் பத்ர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.



ஆனால் அவரது ஆட்சி தொடங்கி ஒரு வாரத்திற்குள்ளேயே மிகப்பெரிய அரசியல் மாற்றம் ஏற்பட்டது. 1962 செப்டம்பர் 26 அன்று அப்துல்லாஹ் அல் ஸல்லால் என்ற இராணுவ அதிகாரி தலைமையில் இராணுவப் புரட்சி நடைபெற்றது. தலைநகர் சன்ஆவில் இருந்த அரச மாளிகை உள்ளிட்ட முக்கிய இடங்களைப் புரட்சிப் படையினர் கைப்பற்றினர். மன்னராட்சி அகற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டு ஏமன் அரபுக் குடியரசு உருவாக்கப்பட்டது. இராணுவ அதிகாரியான அப்துல்லாஹ் அல் ஸல்லால் அதன் தலைவரானார்.

இமாம் முஹம்மது அல் பத்ர் கொல்லப் பட்டுவிட்டதாக முதலில் கருதப்பட்டது. ஆனால் அவர் உயிருடன் தப்பி வடக்கு ஏமனின் மலைப்பகுதிகளுக்குச் சென்றார். அங்கிருந்த பழங்குடியினரின் ஆதரவைத் திரட்டி மீண்டும் ஆட்சியை நிறுவுவதற்கான போராட்டத்தைத் தொடங்கினார். இதுவே நீண்ட உள்நாட்டுப் போராக மாறியது. இந்தப் போரில் இரண்டு முக்கிய அணிகள் உருவாயின. இராணுவ அதிகாரியான அப்துல் லாஹ் அல் ஸல்லால் தலைமையில் உருவான படையினருக்கு எகிப்து பெருமளவில் உதவியது. எகிப்தின் அன்றைய அதிபர் கமால் அப்துல் நாசர் ஆயிரக்கணக்கான எகிப்திய வீரர்களை ஏமனுக்கு அனுப்பினார். ஆயுதங்கள், விமானப்படை உதவிகளும் வழங்கப்பட்டன.

மறுபுறம் ஜைதி ஷியாக்களின் மன்னராட்சிக்கு சவூதி அரேபியா முக்கிய ஆதரவை வழங்கியது. ஜோர்டானும் அவர்களுக்கு உதவியது. (இன்று ஏமனில் போராடும் ஹூதி போராளிகளும் ஜைதி ஷியா பிரிவைச் சார்ந்தவர்களே.! இன்றைய பிரச்னை ஸன்னி ஷியா மோதல் அல்ல என்பதற்கு இதுவே சாட்சி) பிரிட்டனும் மறைமுக உதவிகளை வழங்கியதாக வரலாற்றுப் பதிவுகள் குறிப்பிடுகின்றன. இதனால் ஏமனுக்குள் தொடங்கிய அரசியல் மோதல், மத்திய கிழக்கின் பல நாடுகள் சம்பந்தப்பட்ட பெரிய பிராந்தியப் போட்டியாக மாறியது.

# ஏமன்
## முடிவில்லாத போரின் பின்னணியும் தீர்வும்

மலைகள் நிறைந்த ஏமனின் நிலப்பரப்பில் போர் நடத்துவது எகிப்தியப் படைகளுக்குக் கடினமாக இருந்தது. பல ஆண்டுகள் போரிட்டும் எந்தத் தரப்பாலும் முழுமையான வெற்றியைப் பெற முடியவில்லை. 1967ஆம் ஆண்டு இஸ்ரேலுடனான ஆறு நாள்கள் போரில் எகிப்து பெரும் பின்னடைவைச் சந்தித்தது. இதனால் ஏமனில் இருந்த தனது படைகளை எகிப்து படிப்படியாகத் திரும்பப் பெற்றது. அதே ஆண்டில் இராணுவ அதிகாரியான அப்துல்லாஹ் அல் ஸல்லால் அதிகாரத்திலிருந்து நீக்கப்பட்டார்.

எகிப்தியப் படைகள் வெளியேறியதைப் பயன்படுத்தி இமாம் முஹம்மது அல்பத்ர் ஆதரவாளர்கள் தலைநகர் சன்ஆவை முற்றுகையிட்டனர். எனினும் குடியரசுப் படைகள் நகரத்தைத் தக்கவைத்துக் கொண்டன. 1968 பிப்ரவரியில் முற்றுகை முடிவுக்கு வந்தது. இறுதியில் 1970ஆம் ஆண்டு அரசியல் சமரசம் ஏற்பட்டது. சவூதி அரேபியாவும் ஏமன் அரபுக் குடியரசை அங்கீகரித்தது. இமாம் முஹம்மது அல் பத்ர் ஆதரவாளர்கள் சிலர் புதிய குடியரசு அரசியல் அமைப்பில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். இவ்வாறு எட்டு ஆண்டுகள் நீடித்த வடக்கு ஏமன் உள்நாட்டுப் போர் முடிவடைந்தது. பின்னர் வடக்கு ஏமன் தெற்கு ஏமனுடன் இணைந்து 1990ஆம் ஆண்டு இன்றைய ஒன்றுபட்ட ஏமன் குடியரசாக உருவானது.

### *யார் இந்த ஹூதிகள்?*

ஏமனில் வாழும் ஜைதி ஷியா பிரிவைச் சேர்ந்தவர்கள்தான் இந்த ஹூதிகள். இவர்கள்

1990களில் ஏமனின் வடக்குப் பகுதியில் உள்ள சாதா(Saada) என்ற மலைப் பிரதேசத்தில் உருவானார்கள். நாட்டின் ஆட்சியில் தங்களுக்கும் சமமான அதிகாரம், பங்கு வேண்டும் என்பதே இவர்களின் தொடக்க காலக் கோரிக்கையாக இருந்தது. 2011ஆம் ஆண்டு அரபு நாடுகளில் அரபு வசந்தம்(Arab Spring) என்ற பெரும் மக்கள் புரட்சி வெடித்த போது ஏமனில் சுமார் 30 ஆண்டுகளாக அதிபராக இருந்த அலீ அப்துல்லாஹ் சலே (Ali Abdullah Saleh) தனது பதவியை விட்டு விலக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவருக்குப் பின் அமைந்த புதிய அரசு மிகவும் பலவீனமாக இருந்ததால் அந்த அரசு மீது மக்களுக்கு இருந்த அதிருப்தியையும் கோபத்தையும் ஹூதிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

வியக்கும் விதமாக, முன்பு தங்களை எதிர்த்த முன்னாள் அதிபர் சலேவுக்கு ஆதரவான இராணுவப் பிரிவுகளுடன் ஹூதிகள் கைகோர்த்தனர். இவர்களின் கூட்டுப் படை 2014 அக்டோபரில் செங்கடல் பகுதியில் உள்ள மிக முக்கியமான ஹோடைடா (Hodeidah) துறைமுக நகரத்தைக் கைப்பற்றியது. அடுத்த சில மாதங்களிலேயே அதாவது 2015 ஜனவரியில் தலைநகர் சனாவில் இருந்த அதிபர் மாளிகையையே ஹூதிகள் முற்றுகையிட்டுக் கைப்பற்றினர். இதனால் பயந்துபோன அன்றைய அதிபர் அப்துர் ரப் மன்சூர் ஹாதி தெற்கு நகரமான ஏடனுக்குத் தப்பியோடினார். நிலைமை மேலும் மோசமடைந்ததால் அவர் அங்கிருந்து அண்டை நாடான சவூதி அரேபியாவிற்குத் தப்பிச் சென்றார். (2022ஆம் ஆண்டு தனது பதவியை அதிகாரப்பூர்வமாக ராஜினாமா செய்யும் வரை அவர் சவூதி அரேபியாவில் இருந்தபடியே அரசை நடத்தி வந்தார்.)



இதற்குப் பிறகுதான் ஏமன் உள்நாட்டுப் போர் ஒரு பெரிய பிராந்திய மோதலாக மாறியது. 2015 மார்ச் மாதத்தில் சவூதி அரேபியா தலைமையிலான துபாய் உள்ளிட்ட அரபு நாடுகளின் கூட்டணி, ஹூதிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது. சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஏமன் அரசை மீண்டும் அதிகாரத்தில் நிலைநிறுத்துவது இந்தத் தலையீட்டின் அறிவிக்கப்பட்ட நோக்கமாக இருந்தது. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் புலனாய்வு, ஆயுதங்கள், பிற வகையான ஆதரவுகளை வழங்கின.

இதன் பின்னர் ஏமனுக்குள் நடந்து கொண்டிருந்த அதிகாரப் போட்டி சவூதி அரேபியா, அதன் கூட்டாளிகள் ஒருபுறமும், ஈரானுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் ஹூதி இயக்கம் மறுபுறமும் எனப் பரந்த பிராந்தியப் போராக மாறியது. ஆனால் இதை முழுக்க முழுக்க வெளிநாடுகள் நடத்தும் ஒரு பிராந்தியப் போர் என்று கூற முடியாது. அப்படிக் கூறினால் அது ஏமனின் உள்நாட்டு அரசியல் சிக்கல்களை மறைத்துவிடும்.

ஹூதிகளுக்கென உள்ளூர் அரசியல் அடித்தளமும் சொந்த நோக்கங்களும் உள்ளன. அதே போல் தெற்கு ஏமனிலும் தனித்த அரசியல் இயக்கங்கள் உள்ளன. முன்னாள் அதிபர் அலீ அப்துல்லாஹ் சாலிஹின் ஆதரவாளர்களும் ஒரு கட்டத்தில் ஹூதிகளுடன் இணைந்து பின்னர் அவர்களிடமிருந்து பிரிந்தனர். தெற்குப் பிரிவினை எண்ணம் கொண்ட Southern Transitional Council (STC) என்ற அமைப்பும் தனித்த அதிகார மையமாக உருவானது. எனவே ஏமன் என்பது இரண்டு தரப்புகள் மட்டும் மோதிக் கொண்டிருக்கும் எளிய போர்க்களம் அல்ல.

### எங்கே தொடங்கியது இந்த நெருக்கடி?

ஹூதிகளுக்கு ஈரான் ஆதரவு வழங்குவதாக சவூதி அரேபியாவும் மேற்கத்திய அரசுகளும் நீண்டகாலமாகக் கூறி

வருகின்றன. ஈரானின் இராணுவ உதவி, ஆயுத ஆதரவு தொடர்பாகவும் பல்வேறு சர்வதேச அறிக்கைகள் வெளிவந்துள்ளன. அதே நேரத்தில் ஏமனின் உள்நாட்டு அரசியல் சிக்கல்களை மறைத்து விட்டு ஹூதி இயக்கத்தை ஈரானின் கட்டளைக்குச் செயல்படும் ஒரு குழுவாகச் சுருக்கி விடவும் முடியாது.

### சவூதி தலைமையிலான இராணுவ நடவடிக்கை

2015இல் ஆரம்பிக்கப்பட்ட சவூதி தலைமையிலான இராணுவ நடவடிக்கையின் முக்கிய அம்சமாக வான்வழித் தாக்குதல்கள் அமைந்தன. ஆயுத பலத்தின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய ஹூதிகளைத் தடுத்து, சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஏமன் அரசை மீண்டும் நிலைநிறுத்த வேண்டும் என சவூதியும் துபாய் உள்ளிட்ட அமீரகமும் கூறி வந்தாலும் இந்த இரு நாடுகளுக்கும் மறைமுகமான பல திட்டங்கள் இருந்து வந்துள்ளதை தற்போதைய நிகழ்வுகள் தெளிவுபடுத்தி உள்ளது.




ஏமன் போரில் ஒன்றாகச் செயல்பட்டு வந்த சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம்(UAE) ஆகிய இரு நட்பு நாடுகளுக்கு இடையேயும் திடீரெனப் புதிய விரிசல் ஏற்பட்டது. 30-12-2025 அன்று தெற்கு ஏமனில் உள்ள முக்கியத்துவம் வாய்ந்த முகல்லா துறைமுகத்தில் அமீரகத்திலிருந்து கொண்டுவரப்பட்ட ஆயுதங்களைக் குறிவைத்து சவூதி படைகள் வான்வழித் தாக்குதல் நடத்தின. சர்வதேசக் கடல் வழிகளை இணைக்கும் இந்த முகல்லா துறைமுகம், போர்ச் சூழலில் சவூதி தனது கச்சா எண்ணெயைப் பாதுகாப்பாக ஏற்றுமதி செய்ய உதவும் மிக முக்கியமான மாற்றுப் பாதையாகும்.

ஏமனின் தெற்குப் பகுதியைத் தனி நாடாகப் பிரிக்க நினைக்கும் தெற்குப் பிரிவினைவாதக் குழுவிற்கு(Southern Transitioal Council STC) அமீரகம் ஆயுதம் வழங்கி உதவுகிறது என்றும், இது தனது நாட்டின் பாதுகாப்பிற்கு விடப்பட்ட அச்சுறுத்தல் என்றும் சவூதி குற்றம் சாட்டியது. ஆனால் தீவிரவாதத்தை ஒழிக்கவும் ஹூதிகளுக்கு எதிராகப் போரிடவும் மட்டுமே தாங்கள் உதவியதாகக் கூறி அமீரகம் இந்தக் குற்றச்சாட்டை மறுத்ததுடன், தனது எஞ்சிய இராணுவ உதவிகளையும் அங்கிருந்து திரும்பப் பெற்றது. இதனைத் தொடர்ந்து சோமாலியா நாடு அமீரகத்துடனான ஒப்பந்தங்களை ரத்து செய்தது வரை பல திருப்பங்கள் நிகழ்ந்தன. இதன் மூலம் ஏமனில் அமைதியை ஏற்படுத்த வந்த கூட்டாளி நாடுகளுக்குள்ளேயே அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதில் நேரடிப் போட்டி உருவாகியுள்ளது தெளிவாகத் தெரிகிறது.

### ஆயுதங்களை வழங்கிய நாடுகளின் பொறுப்பு

ஏமன் போர் தொடர்பான மிக முக்கியமான சர்வதேச விவாதங்களில் ஒன்று, சவூதி அரேபியா உள்ளிட்ட போரில் ஈடுபட்ட நாடுகளுக்கு மேற்கத்திய நாடுகள் ஆயுதங்களை வழங்கியது பற்றியது. இந்தப் பின்னணியில் 2018இல் இங்கிலாந்தின் முக்கியச் செய்தி இதழான The Independent வெளியிட்ட செய்தியில் 2011ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற ஏமன் செயற்பாட்டாளர் தவக்குல் கர்மானின் கருத்து குறிப்பிடத்தக்கது. தவக்குல் கர்மான் குறிப்பாக பிரிட்டன், அமெரிக்கா, சவூதி அரேபியாவுக்கு ஆதரவும் ஆயுதங்களும் வழங்கிய பிற நாடுகளின் பொறுப்பை கேள்விக்குள்ளாக்கினார். அதே நேரத்தில் ஈரானின் தலையீட்டையும் ஹூதிகளுக்கான அதன் ஆதரவையும் விமர்சனத்திற்கு வெளியே வைக்கக் கூடாது என்றார்.

இது ஒரு முக்கியமான தார்மிகக் கேள்வியை உலகின் முன் வைத்தது. ஒரு நாட்டின் இராணுவ நடவடிக்கையில் மற்றொரு நாடு நேரடியாகப் பங்கேற்காவிட்டாலும் அது

வழங்கும் ஆயுதங்கள் பொதுமக்களுக்கு எதிரான சட்டவிரோத நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்டால் அந்த நாட்டுக்கு எந்த அளவுக்குப் பொறுப்பு உள்ளது? இதற்கு சர்வதேச அரசியலில் எளிய பதில் இல்லை.

ஆயுத ஏற்றுமதி செய்யும் அரசுகள் தங்கள் விற்பனை சட்டப்பூர்வமானது என்றும் பாதுகாப்புத் தேவைகளுக்கானது என்றும் வாதிடலாம். மனித உரிமை அமைப்புகளோ, ஆயுதங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பது தெரிந்த பின்னரும் அவற்றைத் தொடர்ந்து வழங்குவது குறித்து சட்ட, தார்மிகக் கேள்விகள் எழுகின்றன எனக் கூறுகின்றன.

ஆயுதங்களை வழங்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் மற்றொரு முக்கிய நோக்கமும் உள்ளது. பாப் அல் மந்தப் நீரிணை மூலமே ஐரோப்பிய நாடுகளுக்கு பெட்ரோல் முதலான வணிகம் செல்ல வேண்டி உள்ளது. ஹூதிகள் இந்தப் பகுதியைக் கைப்பற்றினால் அது மேற்குல பொருளாதாரத்தை வெகுவாகப் பாதிக்கும். உண்மையில் இவர்களின் நோக்கம் பொருள் அடிப்படையே..! மனிதாபிமானம் என்பது மருந்துக்குக் கூட இவர்களிடம் இல்லை என்பதையே இது காட்டுகிறது.

### இஸ்ரேலின் நிலை

ஏமன் நாடு வெளிநாட்டு ஆதிக்கங்களிலிருந்து விடுபட்டு ஒரு சுதந்திரமான சக்தியாக உருவெடுப்பது இஸ்ரேலுக்குப் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. உலக வர்த்தகத்தின் முக்கியக் கடல் பாதையான பாப் அல் மந்தப் நீரிணை ஏமனின் கட்டுப்பாட்டில் உள்ளதால் இஸ்ரேலின் கடல்வழி வர்த்தகத்தையும் அதன் துறைமுகங்களையும் முடக்கும் வலிமை ஏமனுக்கு உண்டு.

பல ஆண்டுகாலப் போர்களுக்குப் பிறகும் ஏமனின் ஆயுதப் படைகள் சுமார் 2,000 கிலோ மீட்டர் தூரம் வரை பாய்ந்து இஸ்ரேலை நேரடியாகத் தாக்கும் அதிநவீன ஏவுகணைகளையும் ட்ரோன்களையும் உருவாக்கியுள்ளன. பிற அரபு நாடுகள்

**ஏமன் போரை வெறுமனே சவூதி அரேபியாவுக்கும் ஹூதிகளுக்கும் இடையிலான போர் என்று கூறிவிட முடியாது. அதேபோல் ஸன்னி ஷியா மோதல் என்ற ஒரே கோணத்திலும் அதை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது.**

மவுனம் காக்கும் வேளையில் ஃபலஸ்தீன விடுதலைக்காகத் துணிச்சலுடன் களமிறங்கி இஸ்ரேலை இராணுவ ரீதியாக எதிர்க்கும் ஒரு வலிமையான ஏமன் இஸ்ரேலின் பாதுகாப்புக்கும் பொருளாதார நலன்களுக்கும் மிகப்பெரிய சவாலாக மாறியுள்ளது.

### ஏன் பாப் அல் மந்தப் அவ்வளவு முக்கியம்?

ஏமனின் தற்போதைய நிலையைப் புரிந்துகொள்ள பாப் அல் மந்தப் நீரிணையின் முக்கியத்துவத்தை அறிய வேண்டும். செங்கடலையும் ஏடன் வளைகுடாவையும் இணைக்கும் குறுகிய கடல்வழியே பாப் அல் மந்தப். சூயஸ் கால்வாய் வழியாக ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் இடையே செல்லும் பெருமளவிலான சரக்குக் கப்பல்கள் இந்தப் பாதையைப் பயன்படுத்துகின்றன. எனவே ஏமனின் மேற்குக் கடற்கரையில் யார் கட்டுப்பாட்டைப் பெறுகிறார்கள் என்பது ஏமனுக்கு மட்டும் முக்கியமான விஷயமல்ல. சர்வதேச வர்த்தகம், எண்ணெய் போக்குவரத்து, கடற்படைப் பாதுகாப்பு ஆகியவற்றுக்கும் அது முக்கியம்.

2026 செப்டம்பரில் ஏற் பட்ட புதிய மோதல்களின்போது இந்தப் பகுதியின் முக்கியத்துவம் மீண்டும் உணரப்பட்டது. ஹூதி படைகள் செங்கடல் கடற்கரைப் பகுதிகளிலும் மோகா துறைமுகம் உள்ளிட்ட முக்கிய இடங்களிலும் முன்னேற்றம் கண்டதாக அண்மைக்காலச் செய்திகள் தெரிவித்தன. இதனால் ஏமன் போர் மீண்டும் சர்வதேச வர்த்தகத்தின் பாதுகாப்புடன் நேரடியாக இணைந்துள்ளது.

(அடுத்த இதழில் முடியும்)

அல்லாஹ்வின் விருந்தாளிகளின் சேவையில்
31வது வருடம்

IATA

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# அல் அமானத் ஹஜ் சர்வீஸ்

(இந்தியா, சவூதி அரசுகளின் அங்கீகாரம் பெற்றது)

## இன்ஷா அல்லாஹ்

## 2027 ஹஜ் புக்கிங் நடைபெறுகிறது.

இவ்வாண்டு செப்டம்பர் 2026லிருந்து 2027 ரமலான் வரை ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்.

## உம்ரா குரூப்:

ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா குழு புறப்படுகிறது. உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்

முழு விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

TRUST WORTHY

**அல் அமானத் ஹஜ் சர்வீஸ் (இந்தியா) பி.லிட்.,**
B3, Bushra House, 1st Floor, Old No. 46, New No. 6, Nowroji Road,
Chetpet, Chennai - 600 031. Ph : 044-4860 5012 / 3, 28594441 / 2 / 3
Email : info@alamanathhajservice.com
www.alamanathhajservcie.com

**தொடர்பு கொள்வீர்**
சென்னை 044-28594441 / 2 / 3
95516 622 31
91 98410 786 36

**1526**ஆம் ஆண்டு இந்தியாவில் மொகலாய வம்சத்தினரின் ஆட்சி நிறுவப்பட்டது. அந்த ஆட்சி நிறுவப்பட்டு 500 ஆண்டுகள் முடிந்துவிட்டன. இந்தியாவில் மொகலாய ஆட்சியை நிறுவியவர் சுல்தான் ஸஹீருத்தீன் பாபர்.




துருக்கியிலுள்ள ஃபர்கனா என்ற ஊரில் 14.2.1483 அன்று பாபர் பிறந்தார். இவரது தந்தையார் பெயர் உமர் ஷேக் மிஸ்ரா. இவர் ஃபர்கனாவின் சுல்தானாக இருந்தார். பாபருக்கு 11 வயதிருக்கும் போதே இவர் இறந்துவிட்டார். எனவே 11 வயதே நிரம்பியிருந்த பாபர் சுல்தானாக முடிசூட்டிக் கொண்டார்.

பாபர் துருக்கி இனத்தைச் சார்ந்தவர். தாயார் மங்கோலிய இனத்தைச் சார்ந்தவர். இந்த இனக் கலப்பில் பிறந்தவரே பாபர். பாபரின் குடும்பப் பெயர் முகல். இந்தக் குடும்பப் பெயரைக் கொண்டே மொகலாயர்கள் என அழைக்கப்பட்டனர். எனினும் மங்கோலியர்கள் என்ற பெயரே திரிந்து மொகலாயர் என்று ஆனதாகவும் சில வரலாற்று ஆசிரியர்கள் கூறியுள்ளனர்.

ஃபர்கனாவின் சுல்தானான பாபர் சாமர்கண்டைக் கைப்பற்ற வேண்டும் என்ற வேட்கையில் பல தடவை அந்த நாட்டின் மீது போர் தொடுத்து இறுதியில் வென்றார். எனினும் அவரால் நீண்ட காலம் அங்கு ஆட்சி செலுத்த முடியவில்லை. உஸ்பெக் என்னும் இனத்தார் பெரும் படை திரட்டிக் கொண்டு வந்து போர் புரிந்து பாபரைத் தோற்கடித்து சாமர்கண்டைக் கைப்பற்றினர். இதனால் பாபர் சில காலம் தனது இராணுவத்தினருடன் ஒரு நாடோடியைப் போல் அலைந்து திரிய வேண்டியதாயிற்று.

இப்போது அவரது கவனம் காபூல் பக்கம் திரும்பியது. ஒரு பெரிய படையைத் திரட்டிக் கொண்டு சென்று போர் புரிந்து அதனைக் கைப்பற்றினார். தனது ஆட்சியை அங்கு நிறுவினார். பின்னர் அவரது கவனம் இந்தியா பக்கம் திரும்பியது. 1519ஆம் ஆண்டிலிருந்து நான்கைந்து முறை படை நடத்தி பஞ்சாப்பை வென்றார். அப்போது டெல்லியில் லோடி வம்சத்து மன்னரான இப்ராகிம் லோடி ஆட்சி செய்து கொண்டிருந்தார். ஆனால் இவர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பல பிரபுக்கள் இவருக்கு எதிராக இருந்தனர். எனவே இவர்கள் படை நடத்தி வந்து இப்ராகிம் லோடியுடன் போர் புரியுமாறு பாபரை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டனர். உதய்பூர் மன்னர் ராணா சங்ராம் சிங் என்பவரும் பாபருக்கு உதவி செய்வதாக வாக்களித்தார்.

இதனால் பாபர் படை நடத்திக் கொண்டு டெல்லியை நோக்கி வந்தார். பானிபட் என்ற இடத்தில் (இந்த நகரம் தற்போது ஹரியானாவில் இருக்கிறது) 21.4.1526 அன்று பாபரின் படைகளும், இப்ராகிம் லோடியின் படைகளும் மோதின. எண்ணிக்கையில் பாபரின் படையை விட இப்ராகிம் லோடியின் படை பெரிதாக இருந்தது. எனினும் பாபர் போரில் வெற்றி பெற்றார். இந்தப் போரின் போது பாபர், தன்னிடமிருந்த சக்தி வாய்ந்த பீரங்கிகளைப் பயன்படுத்தினார். இந்தியாவில் நடைபெற்ற போர்களில் பீரங்கிகள் முதன்முதலாகப் பயன்



# மொகலாயப் பேரரசு

## – சில வரலாற்றுச் செய்திகள்

**சேயன் இப்ராகிம்**

படுத்தப்பட்டது இந்த முதலாம் பானிபட் போரில்தான். இந்தப் பீரங்கிப் படையின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் இப்ராகிம் லோடியின் படைகள் சிதறி ஓடின. பாபர் வெற்றி பெற்றார். டெல்லியில் அரியணை ஏறினார்.

### பாபருக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த மொகலாய மன்னர்கள்

| | |
|---|---|
| பாபர் | 1526-1530 |
| ஹுமாயூன் | 1530-1540 |
| அக்பர் | 1556-1605 |
| ஜஹாங்கீர் | 1605-1627 |
| ஷாஜஹான் | 1627-1658 |
| ஔரங்கஜேப் | 1658-1707 |

ஔரங்கஜேப் இறப்பிற்குப் பின்னர், மொகலாயப் பேரரசு சரிவடைய ஆரம்பித்தது. பேரரசின் எல்லைகள் சுருங்க ஆரம்பித்தன. ஔரங்கஜேப்பிற்குப் பிறகு 11 மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். இவர்கள் பெயரளவுக்கே மன்னர்களாக இருந்தனர். இரண்டாம் பகதூர் ஷாவோடு கி.பி.1858இல் மொகலாயப் பேரரசின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

பாபரின் ஆட்சிக் காலம் தொடங்கி ஔரங்கஜேப் ஆட்சிக் காலம் வரை சுமார் 181 ஆண்டுகள் இந்தியாவின் பெரும் பகுதி அவர்களின் ஆட்சியின் கீழ் இருந்தது. இதே காலகட்டத்தில் துருக்கியில் உதுமானிப் பேரரசு உலகின் பெரும் பகுதியை தனது ஆளுமையின் கீழ் கொண்டு வந்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்துப் பெருமக்கள் பெரும்பான்மையினராக இருக்கின்ற ஒரு நாட்டையே தான் ஆழப் போகிறோம் என்பதை உணர்ந்திருந்தார். எனவே அந்த மக்களின் சமய உணர்வுகளைப் புண்படுத்தாத வண்ணம் ஆட்சி புரிய வேண்டும் என்பது அவரது எண்ணமாக இருந்தது. பாபர் நான்கே ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தார். 1530ஆம் ஆண்டு மரணமுற்றார். இறப்பதற்கு முன்னர் பாபர் தனது மகன் ஹுமாயூனுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருந்தாவது :

‘மகனே! இந்தியாவில் பல மதங்களைப் பின்பற்றுபவர்கள் வாழ்கிறார்கள். இந்த நாட்டில் அரசாங்கம் உன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதற்கு மன்னருக்கும் மன்னராக இருக்கும் இறைவனுக்கு நீ நன்றி செலுத்த வேண்டும். கீழ்வரும் கடமைகளை நீ நிறைவேற்ற வேண்டும். 1. மதஉணர்வுக்கு மதிப்புக் கொடு; மாச்சர்யங்களுக்கு உனது மனம் உட்பட அனுமதிக்காதே. 2. சார்பற்ற நீதி வழங்கு 3. பசுக்களைக் கொல்வதைத் தவிர்த்திரு 4. எந்தவொரு வழிபாட்டுத்தலத்தையும் நீ சிதைக்கக் கூடாது. எப்போதும் நீதியை நேசிப்பவனாக இரு. அது மன்னருக்கும் மக்களுக்குமிடையே நல்லுறவைப் பராமரிக்கும். அதன் மூலம் பூமியில் அமைதியும் திருப்தியும் நிலவும் 5. இஸ்லாத்தைப் பரப்பும் பணியில் கட்டாயம் வேண்டாம். 6. ஷியாக்களுக்கும் சன்னிகளுக்குமிடையே இருக்கின்ற வேறுபாடுகளைப் புறக்கணித்து விடு; அலட்சியம் செய்யாதே. இல்லையெனில் அது இஸ்லாத்திற்குப் பலவீனத்தை ஏற்படுத்தும். 7. உனது குடிமக்களிடம் காணப்படும் பல்வேறு

தனித்தன்மைகளைப் பார். ஓராண்டில் வருகின்ற பல்வேறு பருவங்களைப் பார். அது அரசு நிர்வாகத்தில் சிக்கலை ஏற்படுத்தாது.' இந்தக் கடிதம் பாரசீக மொழியில் எழுதப்பட்டிருக்கிறது. இது போபால் அரசு நூலகத்தில் இன்றைக்கும் உள்ளது.

புகழ்பெற்ற ஆறு மொகலாய மன்னர்களுள் பாபரும் ஔரங்கஜேப்புமே சில வரலாற்றாசிரியர்களாலும் தற்போது நாட்டை ஆளுகின்ற இந்துத்துவவாதிகளாலும் தூற்றப்படுகின்றனர். பாபர், அயோத்தியிலிருந்து இராமர் கோயிலை இடித்து விட்டு அங்கு பள்ளிவாசல் கட்டினார் என்றும் ஔரங்கஜேப் இந்து சமய மக்களைத் துன்புறுத்தினார். மதச் சகிப்புத்தன்மை இல்லாதவர் என்றும் பழிக்கப்படுகின்றனர்.

### *பாபர் மீதான குற்றச்சாட்டுகள்*

1528-1529ஆம் ஆண்டுகளில் பாபரின் ஆட்சியின் போது அயோத்தியில் ஆளுநராக இருந்த மீர்பாகி என்பவர் அங்கு ஒரு பள்ளிவாசலைக் கட்டினார். இதற்கான கல்வெட்டு அந்தப் பள்ளிவாசலில் இருந்தது. ஆனால் இந்தப் பள்ளிவாசல் ஏற்கனவே அங்கு இருந்த இராமர் கோயிலை இடித்து விட்டுக் கட்டப்பட்டதாக 232 ஆண்டுகள் கழித்து இந்து மதத்தைச் சார்ந்த சிலர் உரிமை கொண்டாடினர். நாடு விடுதலைக்குப் பிறகு இந்தப் பிரச்னை பெரிய அளவில் விவாதப் பொருளாகி இந்துத்துவ சக்திகளால் இறுதியாக 6.12.1992 அன்று அந்தப் பள்ளிவாசல் இடிக்கப்பட்டது. அந்த இடத்தில் தற்போது மிகப் பிரம்மாண்டமான இராமர் கோயில் கட்டப்பட்டுள்ளது. இந்த வரலாறு நாம் அறிந்ததே!

பாபர், அயோத்தியிலிருந்த இராமர் கோயிலை இடித்து விட்டு அங்கு பள்ளிவாசல் கட்ட தனது ஆளுநருக்கு உத்தரவிட்டிருந்தாரா? பிற சமய வழிபாட்டுத் தலங்களைச் சிதைக்கக் கூடாது என்று இறப்பதற்கு முன்னர் தனது மகன் ஹுமாயூனுக்குக் கடிதம் எழுதிய பாபர் இத்தகைய ஒரு செயலைச் செய்திருப்பாரா? எனப் பல வரலாற்று ஆசிரியர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

தனது சுயசரிதையான பாபர் நாமாவில் அவர் அயோத்தியில் பள்ளிவாசல் கட்டப்பட்ட பிறகு அதாவது 1529ஆம் ஆண்டு அங்கு சென்றதாக எழுதி வைத்துள்ளார். அதில் அவர் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்: 'அவுத் (அயோத்தியாவின் அப்போதைய பெயர்), அதன் அருகிலுள்ள பகுதிகளின்



அரசியல் பிரச்னைகளைச் சரி செய்வதற் காகச் சில நாள்கள் தங்கியிருந்தேன். சரயு நதிக்கரையில் அவுத்துக்கு ஏழு அல்லது எட்டு கோஸ் தூரமாக புகழ்பெற்ற ஒரு கோட்டை மைதானம் இருக்கிறது. கோக்ரா, சரயு நதிகளின் கடவுத்துறை எப்படி இருக்கிறது என்று பார்த்து வர பீர் முகம்மது ஆலோபனை நான் அனுப்பினேன். அவனும் அந்த இடங் களுக்குச் சென்று வந்தான். 12ஆம் தேதி நான் வேட்டையாடச் சென்றேன்.'

தன்னுடைய சுயசரிதையில் அனைத்து விஷயங்களையும் குறிப்பிட்டிருக்கும் பாபர், கோயிலை இடித்துப் பள்ளிவாசல் அயோத்தி யில் கட்டப்பட்டுள்ளது என்பதைப் பதிவு செய் யாமல் விட்டிருப்பாரா? எனவே அப்படி எது வும் அங்கு நடக்கவில்லை என்றே கூறமுடியும்.

அயோத்தியில் பாபரி மஸ்ஜித் கட்டி முடிக்கப்பட்ட ஐம்பது ஆண்டுகளுக்குள் அதாவது 1575-76ஆம் ஆண்டுகளில் துளசி தாசர் என்பவர் இராமாயணக் காப்பியத்தைத் தன் பாணியில் எழுதினார். அது துளசி இராமாயணம் என அழைக்கப்படுகிறது. அவர் பெரிதும் வர்ணாசிரம தர்மத்தைப் பேணியவர். அயோத்தியில் ஏற்கனவே இருந்த இராமர் கோயில் இடிக்கப்பட்டு அந்த இடத்தில் மஸ்ஜித் கட்டப்பட்டிருந்ததால், அந்தச் செய்தியை தனது நூலில் எங்காவது ஒரு பகுதியில் நிச்சயம் குறிப்பிட்டிருப்பார். ஆனால் துளசி இராமாயணத்தில் அத்தகைய எந்தக் குறிப்பும் இல்லை.

மேலும் அவர் தீர்த்தராஜ் அதாவது தீர்த்த யாத்திரை போவதற்கான முதன்மையான இடம் என்று அயோத்தியைக் குறிப்பிட வில்லை. மாறாக அவர் பிரயாகையைக் குறிப்பிடுகிறார். (அலகாபாத் நகர்) இராமர் பிறந்த இடம் இருந்து, அதில் கோயில் கட்டப் பட்டிருந்து மக்கள் அங்கு சென்று வழிபாடு நடத்தி வந்திருந்தால் அந்த ஊரைத் தானே அவர் தீர்த்தராஜ் என்று குறிப்பிட்டிருக்க வேண்டும்? ஆனால் இல்லை!

மன்னர் அக்பர் ஆட்சிக் காலத்திலிருந்த அபுல் பசல் எழுதியுள்ள அயினி அக்பரி

**பிற சமய வழிபாட்டுத் தலங்களைச் சிதைக்கக் கூடாது என்று இறப்பதற்கு முன்னர் தனது மகன் ஹுமாயூனுக்கு கடிதம் எழுதிய பாபர் இத்தகைய ஒரு செயலைச் செய்திருப்பாரா? எனப் பல வரலாற்று ஆசிரியர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.**

என்ற நூலிலும் இது பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. அயோத்திக்கு வந்த வெளிநாட்டுப் பிரமுகர்களும் இது சம்பந்தமாக எந்தப் பதி வும் செய்யவில்லை. 1608இல் அயோத்திக்கு வந்த வில்லியம் பிஞ்ச் அயோத்தியிலிருந்த புத்த மதக் கோயில்களையும், பிற வழிபாட்டுத் தலங்கள் பற்றியும் கூறியுள்ளார். ஆனால் பாபரி மஸ்ஜித் கோயிலை இடித்துத்தான் கட்டப்பட்டது என்று எதுவும் எழுதவில்லை. சுஜன் ராய் பந்தாரி என்பவர் எழுதியுள்ள (1695-96) குலசதுத் தவாரிக் என்ற நூலிலும், 1759-60களில் சதுல்மான் என்பவர் எழுதிய சகர் குல்ஷன் என்ற நூலிலும் அயோத்தி பற்றி வருகிறது. ஆனால் அங்கு இராமர் கோயில் இருந்ததாகவோ, அது இடிக்கப்பட்டு அங்கு மஸ்ஜித் கட்டப்பட்டதாகவோ எந்தக் குறிப்புகளும் இல்லை.

எனவே கி.பி. 1528 முதல் 1760 வரை 232 ஆண்டுகள் காலக்கட்டத்தில் இதற்கு எவ்வித சமகால வரலாற்று ஆதாரமும் இல்லை. அதற்குப் பிறகு தான் மெல்ல மெல்ல இந்த இடிப்புக் கதையைச் சொல்ல ஆரம்பித்தனர். பின்னர் வந்த ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இந்தக் கதைகளுக்கு முக்கியத்துவம் அளித்து இந்து - முஸ்லிம்களைப் பிரித்தாளுகின்ற வேலைகளில் ஈடுபட்டனர்.

எனவே பாபர் தனது ஆட்சிக் காலத்தில் அயோத்தியில் இராமர் கோயிலை இடித்து விட்டு அந்த இடத்தில் பள்ளிவாச கட்ட உத்தரவிட்டார் என்பதற்கு எந்தவிதமான வரலாற்று ஆதாரங்களும் இல்லை!

(தொடரும்)

# சிரித்து வாழ வேண்டும்

– மௌலவி ஹாஃபிழ்
தா.முஹம்மது ஜுபைர்
சித்தீகி

**1999 முதல் அக்டோபர் மாதம் முதல் வெள்ளிக்கிழமை உலக சிரிப்பு தினமாகக் கொண்டாடப்படுகிறது. கவனம் செலுத்த வேண்டிய ஒன்றை மையப்படுத்தியோ, அல்லது கால ஓட்டத்தில் கண்டு கொள்ளாமல் விடப்படுபவை பற்றிய விழிப்பு உணர்வை ஏற்படுத்தவோ அதற்கென நாள்கள் கொண்டாடப்படுவது உண்டு. அவ்வரிசையில் ஒன்றுதான் உலக சிரிப்பு தினம்.**



இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்

என்பது வள்ளுவர் கூற்று. அதாவது துன்பம் வரும்போது கலங்காமல் புன்னகையுடன் அதனை எதிர்கொள்ள வேண்டும். அந்தத் துன்பத்தை விரட்டியடித்து வெல்லக்கூடிய வலிமை அதைப் போன்ற வேறு எதற்கும் இல்லை என்பது இதன் பொருள்.

பாவேந்தர் பாரதிதாசன், சிரிப்பு ஒன்றே மனிதனை விலங்கினின்று பிரித்துக் காட்டும் அடையாளம் என்கிறார். தன் அகத்தின் நெகிழ்ச்சியை உதடுகளின் மலர்ச்சியாக மாற்றும் பேராற்றல் மனிதனுக்கு மட்டுமே அருளப்பட்டிருக்கிறது. பிறந்து முதல் எட்டு வாரங்களுக்குப் பிறகு குழந்தை தன் தாயின் குரல், முகம், பரிவை அடையாளம் கண்டு விழித்திருக்கும் போதே சிரிக்கத் தொடங்குகிறது. இது மனித வளர்ச்சியில் மிக முக்கியமான மைல்கல். மனிதன் சக மனிதனோடு தொடர்பு கொள்ளத் தொடங்கும் முதல் சமூகப் பாலம் சிரிப்பு.

பிடித்த பொம்மை கிடைக்காவிட்டாலும் கிடைத்த பொம்மையை வைத்து விளையாடும் குழந்தைகளின் சிரிப்பு. முதுகில் எவ்வளவு தான் கடன் சுமை இருந்தாலும் கல்யாண வீட்டில் முகத்தில் சிரிப்பை மட்டுமே சுமக்கும் அப்பாக்களின் சிரிப்பு. மரணத்தையே கண்ணெதிரில் கொண்டு வந்து நிறுத்தும் பிரசவ வலியைப் பொருட்படுத்தாமல், வீறிட்டு அழும் குழந்தையை வாரி அணைத்துக் கொள்ளும் அம்மாக்களின் சிரிப்பு.

சிரிப்பு மகிழ்வின் அடையாளம் மட்டுமல்ல; சில சமயங்களில் ஆயுதமாகவும், சில சமயங்களில் கேடயமாகவும் பரிணமிக்கும் ஆற்றல் கொண்டது. வெற்றி பெற்றுவிட்டோம் என்று மகிழ்வில் சிரிப்பவனுக்கு எதிரில் தோற்றுப்போனவனைத் தேற்ற வந்தவர்கள் ஆறுதல் கூறும் போது அழுது கொண்டிருக்கும் அவன் முகத்திலும் ஒரு நொடி மின்னலென வெட்டிச் செல்கிறது புன்னகை.

முதுகில் குத்தும் துரோகியின் சிரிப்பு ஒரு பக்கம் எனில், நம்பி ஏமாந்தவனும் தன் ஏமாற்றத்தை எண்ணி சிரிக்கத்தான் செய்கிறான். துன்பத்தை மட்டுமே வழித்துணையாகக் கொண்டவனுக்கு, அழுது அழுது அலுத்துப் போனவனுக்கு, சிரிப்பு மட்டுமே எப்போதும் துணை நிற்கிறது; அவன் அழ வேண்டிய இடங்களிலும் சிரித்தே கடக்கிறான்.

இயந்திரத்தனமான வாழ்க்கையால் சிரிப்பும் நவீனமாகி இருக்கிறது. நான் மகிழ்வாகத்தான் இருக்கிறேன் என்பதைக் காட்டுவதற்காகவே செயற்கையாகச் சிரிக்கும் சூழல் நம்மிடையே ஏற்பட்டிருக்கிறது. இயற்கையான சிரிப்பைத் தொலைத்துவிட்டோம். வரம்பு மீறி உருவக் கேலி செய்து பிறர் மனதைக் காயப்படுத்தும் வகையில் சிரிப்பு வன்முறையாக மாறும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இறுதித் தூதர் நபி(ஸல்) அவர்கள், ‘நான் சில விஷயங்களைக் கூறுவேன். அதை யார் ஏற்று வாழ்நாளில் நடைமுறைப்படுத்துவார்? அல்லது அதன்படிச் செயல்படுபவரிடம் அதை எடுத்துரைப்பார்?’ என்று கேட்டபோது, நபித்தோழர் அபூஹுரைரா(ரலி) ஆர்வமாக முன்வந்தார். அவரிடம் நபி(ஸல்) அவர்கள் ஐந்து விஷயங்களை ஒவ்வொன்றாக எண்ணிக் கூறினார்கள். அதில் ஐந்தாவதாக, ‘அதிகம் சிரிக்க வேண்டாம்; அதிகம் சிரிப்பது உள்ளத்தை மரணிக்கச் செய்துவிடும்’ என்று கூறினார்கள். (நூல்: திர்மிதி 2305). ஆனால் இது வரம்பு மீறிய சிரிப்பைக் குறித்தது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். கடைவாய்ப் பற்கள் தெரியும் அளவிற்கு நபியவர்களும் சில சமயங்களில் சிரித்தது உண்டு.



நபி(ஸல்) அவர்கள் அதிகமாகப் புன்னகைக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். ‘நபிகள் நாயகம்(ஸல்) அவர்களை விட அதிகம் புன்னகைக்கக் கூடியவர் யார்?’ என்ற கேள்விக்கு நபித்தோழர்களின் ஒரே பதில் இல்லை என்பது மட்டுமே. பிறர் மனதைக் காயப்படுத்தும் சிரிப்பை இஸ்லாம் முற்றிலுமாகத் தடுக்கிறது. அதே வேளையில் தன் சகோதரனை மலர்ந்த முகத்துடன் சந்திப்பதை தர்மத்திற்கு இணையான நன்மையைப் பெற்றுத்தரும் நற்செயலாகப் பார்க்கிறது.

பொருள் வசதி படைத்தவர்களுக்கு மட்டுமே கொடுத்து உதவும் நன்மை கிடைக்கும் என்ற இலக்கணத்தையே மாற்றி எழுதியது இஸ்லாம். தன் சகோதரனைச் சந்தித்து நல்ல வார்த்தைகளைப் பகிர்வதும், சிரித்த முகத்துடன் எதிர்கொள்வதும் நன்மைகளைப் பெற்றுத் தரும் என்று கூறி சிரிப்பையும் நற்செயலாக்கியது. நகைச்சுவை கூடாது என்று இஸ்லாம் கூறவில்லை. நகைச்சுவை செய்யலாம், நபி(ஸல்)அவர்களும் செய்திருக்கிறார்கள். ஆனால் அதற்கென்று ஒரு வரம்பு இருக்கிறது. நகைச்சுவையில் ஒருபோதும் பொய் இருக்கக் கூடாது. ஆனால் வெறும் பொழுது போக்கிற்காக இன்று நடத்தப்படும் நகைச்சுவை நிகழ்ச்சிகளுக்கு உருவக் கேலியும் பொய்க் கற்பனைகளும் தான் மூலதனம் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஏதோ ஒரு காரணத்திற்காக அதிகார பாவனை செய்து கொண்டிருக்கும் அப்பாக்களின் முகம் பார்த்துச் சிரித்துப் பேசுவோம். வாழ்வின் பெரும்பாலான நேரத்தை சமையலறையில் கழிக்கும் அம்மாக்களை நோக்கிப் புன்னகைப்போம். சமையல் குறைகள் கூறுவதைக் குறைத்து, அதைப் பாராட்டிச் சிரிப்பை அன்பளிப்போம். பிள்ளைகள் விரும்பிச் செய்பவற்றைப் பாராட்டி புன்னகையைப் பரிசளிப்போம். சிறு சிறு அன்பைத் தேடி அலைபவர்கள் இங்கே மிக அதிகம்; கொடுப்பவர்கள் மிக மிகக் குறைவே! எனவே சந்திக்கும் அனைவரையும் சிரித்த முகத்துடன் சந்திப்போம்.

பிறருக்காகச் சிரிக்கும் அதே நேரம் நமக்காகவும் நாம் சிரிப்போம். மனவலியா? யாரும் அவமானப்படுத்தி விட்டார்களா? கவலை வேண்டாம், புன்னகையுங்கள். எல்லா இறைத்தூதர்களை விடவும் கடுமையாகச் சோதிக்கப்பட்ட இறுதித் தூதர் நபி(ஸல்) அவர்கள் அதிகமதிகம் புன்னகைக்கக் கூடியவர்களாகவே இருந்தார்கள். புன்னகைத்துப் பாருங்கள். அது உங்கள் மனப் புண்களை ஆற்றும் மருந்தாகக் கூடும்.

நம்மில் ஒவ்வொருவருக்கும் மலையளவு துன்பங்கள் இருக்கலாம். பெருமூச்சு விட்டபடி உதட்டை லேசாக அங்குமிங்குமாக அசைத்துச் சிரித்துப் பாருங்கள். அதை விடப் பெரிய ஆறுதல் வேறெதிலும் இருக்க முடியாது. அன்பைப் பொதுவுடைமை ஆக்க சிரிப்பே சிறந்த வழி.

# திணிக்கப்படும் இடைத்தேர்தலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்

- மௌலவி **முஹம்மத் ஹனீஃபா** மன்பயீ
ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், மாநிலத் தலைவர்

**2026 செப்டம்பர் 24ஆம் நாள் சென்னை ஜமாலியா IIC அரங்கத்தில் நடந்த பத்திரிகை யாளர் கூட்டத்தின் அறிக்கை**

**காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை வரவேற்கின்றோம்...!**

பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் என்கிற பெயரில் தமிழ் நாடு அரசு விரிவுபடுத்திய மக்கள் நலத்திட்டத்தை வரவேற்கின்றோம். மக்கள் நல அரசின் அடையாளமாய் தனிச்சிறப்புமிக்க நடவடிக்கையாய் 1920களில் சென்னை மாநகராட்சியில் நீதிக்கட்சியின் பி.தியாகராயர் செட்டியார் அவர்களால் ஆயிரம் விளக்குப் பகுதி பள்ளியில் தொடங்கப்பட்ட ஏழை மாணவர்களுக்கான உணவு வழங்கும் திட்டம், 1950களின் இறுதியில் காமராஜரால் மாநிலம் முழுவதும் மதிய உணவுத் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு, 1980களில் எம்ஜிஆர் அவர்களால் சத்துணவுத் திட்டமாக விரிவுபடுத்தப்பட்டு, தொடர்ந்து கலைஞர் கருணாநிதி, ஜெயலலிதா ஆகியோரால் ஊட்டச் சத்துகளைக் கொண்டு மேம்படுத்தப்பட்டு மு.க.ஸ்டாலின் அவர்களால் காலை உணவுத் திட்டமாக விரிவுபடுத்தப்பட்டு தமிழ்நாட்டின் தனித்துவம் மிக்க மக்கள் நலத் திட்டமாக முத்திரை பதித்தது.

இந்நிலையில் காலை உணவு அருந்தாமல் வருகின்ற பிள்ளைகளின் சோர்வைப் போக்குகிற, கற்கும் திறனை மேம்படுத்துகின்ற நோக்கத்துடன் 2018 இல் துவரங்குறிச்சியில் அரசு மகளிர் மேநிலைப் பள்ளியில் ஒன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலான மாணவிகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிர் அணியினர் 2018இல் தொடங்கி வைத்தனர். கடந்த எட்டாண்டுகளுக்கும் மேலாக ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிர் அணியினர் இந்தத் திட்டத்தை இடைவிடாமல் மேற்கொண்டு வருகின்றனர். இது குறித்து சமரசம் நேரடியாகக் கள ஆய்வு செய்து காலை சிற்றுண்டித் திட்டத்தை வலியுறுத்தி 2019 ஏப்ரல் 16-30 முகப்புக் கட்டுரை வெளி யிட்டது.

துவரங்குறிச்சி இஸ்லாமிய மகளிர் அணியினரின் இந்த பாராட்டத்தக்க பணி தமிழ்நாடு அரசின் கவனத்துக்குச் செல்ல, பள்ளிப் பிள்ளைகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டம் மாநிலம் முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டு 2022 இல் செப்டம்பர் 15 அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் மதுரையில் தொடங்கி வைக்கப்பட்டது. துவரங்குறிச்சி மகளிர் அணியினர் வரையறுத்திருந்த மெனு கூட முழுமையாக அப்படியே பின்பற்றப்பட்டது. இந்தச் சீர்மிகு திட்டத்தின் மூலமாக ஒரு இலட்சத்து பதினான்காயிரம் அரசு தொடக்கப்பள்ளி மாணவர்கள் பயன் பெற்றனர். தொடர்ந்து 2024-25இல்

இந்தத் திட்டம் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட, இதன் மூலமாகப் பயன் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை இருபது இலட்சமாக உயர்ந்தது.

இப்போது இந்தக் காலை உணவு வழங்கும் திட்டத்தை எட்டாம் வகுப்பு மாணவர்கள் வரை விரிவுபடுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்திருப்பது மகிழ்ச்சி அளிக்கின்ற செய்தியாகும். இப்போது இதன் மூலமாகப் பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை முப்பத்தி நான்கு இலட்சங்களாக உயர்ந்துள்ளது.

இந்தச் சிறப்பான திட்டத்தின் பயனாக பள்ளிகளில் மாணவர்களின் வருகை அதிகரித்துள்ளது. மாணவர்களின் கவனம், நினைவாற்றல், வாசிப்புத் திறன், எழுத்துத் திறன் ஆகிய அனைத்தும் மேம்பட்டுள்ளன என ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது மகிழ்ச்சியான செய்தியாகும். மேலும் தீவிர நோய்களுக்கு ஆளாகின்ற விகிதமும் குறைந்துள்ளது. பெற்றோரின் சுமை குறைந்துவிட, பள்ளிகளில் மாணவர் சேர்க்கை எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.




எனவே பசியைப் போக்கி கல்வியை மேம்படுத்தும் சமூக முதலீடாக மிளிர்கின்ற இந்தத் திட்டத்தை மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று தமிழ்நாட்டு அரசைக் கேட்டுக் கொள்கின்றோம்.

### மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல்

மதுராந்தகம், தாராபுரம் ஆகிய இரண்டு சட்டமன்றத் தொகுதிகளில் இடைத்தேர்தல்கள் வருகின்ற அக்டோபர் 6 அன்று நடைபெற இருக்கின்றன. தமிழ்நாட்டின் எழுபத்தி நான்கு ஆண்டுக்கால சட்டசபைத் தேர்தல் வரலாற்றில் இதுவரை நடந்திராத விநோதமான தேர்தல் இது. 1952இல் அமைக்கப்பட்டதிலிருந்து 100க்கும் அதிகமான இடைத்தேர்தல் தமிழ்நாட்டில் நடந்துள்ளன. ஆனால் இந்த இரண்டு இடைத்தேர்தல்களும் முற்றிலும் மாறுபட்டவை.

பொதுவாக மக்கள் பிரதிநிதிகள் மரணமடைந்து விடுகின்ற போதும், தம்முடைய பதவியை விட்டு விலகி விடுகின்றபோதும், சட்டமன்ற உறுப்பினர் அல்லாத ஒருவர் முதலமைச்சராகத் தேர்வாகி பொறுப்பேற்கின்ற போது ஆறு மாதங்களுக்குள் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டாக வேண்டும் என்கிற கட்டாயச் சூழல்களின் போதும்தாம் இடைத்தேர்தல்கள் நடந்துள்ளன. தமிழ்நாட்டின் முதல் இடைத் தேர்தலே இப்படித்தான் நடந்தது. குலக் கல்வித் திட்டத்தை அறிமுகப் படுத்தியதால் எழுந்த மிகப் பெரும் எதிர்ப்பின் காரணமாக முதலமைச்சர் இராஜாஜி பதவி விலக, சட்டமன்ற உறுப்பினராகக் கூட இல்லாத காமராஜர் முதலமைச்சராகப் பொறுப்பேற்க ஆறு மாதங்களுக்குள் சட்டமன்ற உறுப்பினராக வேண்டிய அந்தக் கட்டாயச் சூழலுக்கு ஆளான போது, காமராஜருக்காக குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜே.அருணாச்சல முதலியார் பதவி விலக 1954இல் நடந்த இடைத்தேர்தலில் காமராஜர் வெற்றி பெற்றார்.

ஆனால் மதுராந்தகம், தாராபுரம் இடைத் தேர்தல்கள் அந்த மாதிரியான கட்டாயச் சூழலினாலோ எம்எல்ஏக்கள் இறந்து போனதாலோ நடக்கின்ற தேர்தல்கள் அல்ல. இந்த இரு தொகுதிகளிலும் மிகப்பெரிய அளவில் வாக்குகளைப் பெற்று வெற்றி வாகை சூடிய இரண்டு எம்எல்ஏக்களும் உயிரோடுதான் இருக்கின்றார்கள். உடல் நலத்தோடும் மன நலத்தோடும்தான் இருக்கின்றார்கள். ஆனால் இவர்கள் தங்கள் எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்துவிட்டதால்தான் இந்த திடீர் இடைத்தேர்தல்களை நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கின்றது.

தவெக அரசுக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத நிலையில் மூன்றில் இரண்டு அளவுக்கு அதிமுக எம்எல்ஏக்கள் தவெக பக்கம் வர ஆயத்தமாகாத நிலையில் கட்சித் தாவல் தடைச் சட்டத்தினால் தகுதி நீக்கம் செய்யப்படுவதிலிருந்து தப்பிப்பதற்காக அதிமுக எம்எல்ஏக்கள் மேற்கொண்ட உத்திதான் பதவிவிலகிவிட்டு, தவெக கட்சியில் சேர்ந்து இடைத் தேர்தலில் தவெக வேட்பாளராக நின்று மறுபடியும் எம்எல்ஏ ஆகிவிடுகின்ற மிக மோசமான திட்டம்.

இது தற்செயலாகவோ, எதிர்பாராத நிகழ்வினாலோ, திடீர் அரசியல் திருப்பங்களின் விளைவாக ஏற்பட்ட கட்டாயச் சூழலினாலோ நடக்கின்ற இடைத்தேர்தல் அல்ல. இது மக்கள் மீது திணிக்கப்பட்ட தேர்தல். தனிமனிதர்களின் ஆதாயங்களுக்காக ஒட்டுமொத்த தொகுதி மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள தேர்தல்தான் இது. கூட்டணியை முறித்தல், கட்சியை உடைத்தல், ஆளுமைகளை விலைக்கு வாங்குதல் என நீளுகின்ற அரசியல் அசிங்கங்களின் மற்றுமோர் சான்றுதான் இந்தத் தேர்தல்.

ஒரு தொகுதியில் சட்டசபைக்கான தேர்தல் நடத்துவதற்கு 2024இல் நடந்த விளவங்கோடு சட்டமன்ற இடைத்தேர்தல் செலவைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் தேர்தல் ஆணையம் மட்டுமே 94 இலட்சம் ரூபாய்களைச் செலவிட்டுள்ளது. அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் செலவுகளையும் சாமான்யர்கள் அந்த ஒரு நாளை தேர்தலுக்காக ஒதுக்குவதாலும், பயணங்கள் மேற்கொள்வதாலும், பிற செலவுகளையும் கணக்கில் கொண்டால் இது கோடிக்கணக்கானதாய் பேருருவம் எடுக்கும்.

இப்படித் தேர்தல்கள் திணிக்கப்படுவதைத் தடுப்பதற்காகவும், கட்சித் தாவல்களையும் அணி மாறுகின்ற அவலங்களையும் தடுப்பதற்காகவும் தக்க சட்டங்களும் ஒழுங்குமுறைகளும் வகுக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும். ஒன்றிய, மாநில அரசுகளும், அரசியல் கட்சிகளும், தேர்தல் ஆணையமும் ஒன்று சேர்ந்து இந்த அவலத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம்.

### தொடரும் மின்வெட்டும் பதறச் செய்யும் மின் கட்டணமும்

மே 10 அன்று தமிழ்நாட்டின் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்றதும் முதலமைச்சர் முதன் முதலாகக் கையெழுத்திட்டது இலவச மின்சார அளவீட்டை 200 யூனிட்களாக உயர்த்துகின்ற அரசாணையில்தான். அப்போது இனி மின் கட்டணம் ஒரு பெரிய சுமையாக இருக்காது என்றே மக்கள் எல்லோரும் நினைத்தார்கள். எதிர்பார்த்தார்கள். ஆனால் அந்த எதிர்பார்ப்புகளை நொறுக்கித் தள்ளுகின்ற விதத்தில் மின் கட்டணங்கள் மக்களைப் பதம் பார்த்தன. இந்நாள் வரை இல்லாத கதையாய் நடுத்தர மக்களின் முதுகை முறிக்கின்ற அளவுக்குக் கட்டணங்கள் கிடுகிடுவென வளர்ந்தோங்கி மக்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளன.




மின்கட்டணங்கள் மக்களைப் பதறச் செய்கின்றன. சென்னையில் மட்டுமின்றி திருச்சி, கடலூர், திருநெல்வேலி, நாமக்கல், மதுரை என மாநிலம் முழுவதிலும் தொடரும்

மின்வெட்டுகள் மக்களுக்குச் சொல்லொணா வேதனையைத் தந்து கொண்டிருக்கின்றன. எப்போது மின்வெட்டு வரும், எப்போது மின்சாரம் வரும் என்பது நிச்சயமில்லாத சூழல் வணிகம், தொழில், வேளாண்மை என எல்லாத் தளங்களிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்ற ஆபத்து உள்ளது. இரவு வேளைகளில் அறிவிக்கப்படாத மின்வெட்டு செய்யப்படுகின்ற போதோ அது மக்களின் தூக்கத்தை மட்டுமின்றி அரசு மீதான நம்பிக்கையையும் பறித்துவிடும் என்பதையும் மாநில அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

மின் நுகர்வு அதிகரித்திருப்பதும், தொடரும் வெயிலின் காரணமாக ஏசி, குளிர் சாதனப் பெட்டிகள் போன்றவற்றின் பயன்பாடு கூடியிருப்பதாலும் தொழில் வளர்ச்சியின் காரணமாகவும் மின் தேவை அதிகரித்துள்ளது. நம்முடைய மாநிலத்தில் தனிநபர் மின் நுகர்வும் (1800-1935 யூனிட்) தேசிய தனிநபர் மின் நுகர்வைக் (1300-1400 யூனிட்) காட்டிலும் அதிகம். சராசரியாக நாள்தோறும் 400 மில்லியன் யூனிட் மின்சாரம் நுகரப்படுகின்றது. அதற்கேற்ப வருமானமும் வாரியத்துக்குக் கிடைக்கின்றது. என்றாலும் வாரியத்தின் கடன் சுமை 2.47 இலட்சம் கோடி ரூபாயாக இருக்கின்றது.

அதிகமான தொழில் வளர்ச்சி, நகரமயம், வாழ்க்கைத் தரம் மேம்பாடு ஆகியவற்றின் காரணமாக மின் நுகர்வும் இங்கு அதிகம். அதற்கேற்ப முறையான திட்டமிடலும், தொடர் பராமரிப்பும், சிக்கனமும், வீண் விரயத் தவிர்ப்பும் தேவை. தமிழ்நாடு மின்சாரத் தேவை, மின் நுகர்வு விகிதம், கிடைக்கின்ற வருமானம், பணியாளர் பற்றாக்குறை, கடன் சுமை என திரும்பும் திசையெங்கும் சவால்கள் நிறைந்ததாய் தமிழ்நாட்டு மின்சார விவகாரம் இருக்கின்றது. எனவே போர்க்கால அடிப்படையில் காத்திரமான உறுதியான, திடமான, தொலைநோக்குடன் கூடிய நடவடிக்கைகளை எடுக்கும்படி தமிழ்நாட்டு அரசைக் கேட்டுக் கொள்கின்றோம்.

> **‘இந்த இரு தொகுதிகளிலும் மிகப் பெரிய அளவில் வாக்குகளைப் பெற்று வெற்றிவாகை சூடிய இரண்டு எம்எல்ஏக்களும் உயிரோடுதான் இருக்கின்றார்கள். உடல் நலத்தோடும் மன நலத்தோடும்தான் இருக்கின்றார்கள். ஆனால் இவர்கள் தங்கள் எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்துவிட்டதால்தான் இந்த திடீர் இடைத்தேர்தல்களை நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கின்றது.’**

### பால் தட்டுப்பாடு பேரவலம்..!

சென்னையிலும் கோவை, திருச்சி, சேலம், மதுரை, ஈரோடு உள்ளிட்ட தமிழ்நாட்டின் பிற பகுதிகளிலும் பால் தட்டுப்பாடு காணப்படுவது கவலையளிக்கின்றது. இந்தத் தட்டுப்பாட்டின் விளைவாகப் பால் தினசரி விற்பனை கடந்த ஆறு மாதங்களில் பத்து, பதினைந்து விழுக்காடு சரிந்துள்ளது. குறிப்பாக நடுத்தர மக்கள் பெரிதும் விரும்பும் பச்சை வண்ணப் பாக்கெட் பால் காலை 6 மணிக்கே தீர்ந்துவிட மற்ற நேரங்களில் மற்றவர்களுக்குக் கிடைக்காமல் போகிறது. சில சில்லறை வியாபாரிகள் அதிக விலையில் விற்கின்ற அவலமும் நடக்கின்றது.

தனியார் நிறுவனங்கள் அதிக விலை கொடுத்து கொள்முதல் செய்வதால் ஆவின் நிறுவனம் கொள்முதல் செய்கின்ற பாலின் அளவு சரிந்ததும், வெயில் காரணமாக பால் உற்பத்தி குறைந்துவிட்டதும் தட்டுப்பாட்டுக்கான காரணங்களாகச் சொல்கின்றார்கள். தனியார் நிறுவனங்களுக்கு ஆதரவாக விநியோகம் குறைக்கப்பட்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தப்படுகின்றது. தமிழ்நாடு அரசு பால் கொள்முதல் விலையை உயர்த்திய பிறகும் பால் தட்டுப்பாடு நீடிப்பது விநோதமே.

மக்களின் அத்தியாவசியத் தேவையாக இருக்கின்ற பால் அவர்களுக்குத் தங்கு தடையின்றி நியாயமான விலையில் கிடைப்பதை உறுதி செய்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அரசு இந்த விஷயத்தில் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறோம்.



மம்முனி மௌலவி

# கேரளத்து இயக்க வானின் நட்சத்திரம் மம்முனி மௌலவி இறை அழைப்பை ஏற்றார்

**சா**ந்தபுரம் இஸ்லாமியக் கல்லூரியின் தொடக்ககால உறுப்பினர்களில் ஒருவரும் அரை நூற்றாண்டுக்கும் மேலாகக் கல்வி, பொதுச் சேவைத் துறைகளில் தீவிரமாகச் செயல்பட்டு வந்தவருமான ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கேரள ஆலோசனைக் குழு உறுப்பினரும், அகில இந்திய பிரதிநிதிச் சபை உறுப்பினருமான மம்முனி மௌலவி 2026 செப்டம்பர் 23ஆம் நாள் இறைவனிடம் மீண்டார். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்(நாம் இறைவனிடமிருந்து வந்தோம். அவனிடமே மீள்வோராய் இருக்கின்றோம்)

82 வயதான மம்முனி மௌலவி சாந்தபுரம் இஸ்லாமியக் கல்லூரி வார்த்தெடுத்த முத்துக்களில் மகுடமாய் ஜொலித்தவர். ஆசிரியராக வாழ்வைத் தொடங்கியவர். இமாமாகப் பத்தாண்டுகள், முதல்வராகப் பல ஆண்டுகள், இஸ்லாமிய இயக்கத்தின் மாவட்ட அமைப்பாளராகப் பத்தாண்டுகள், மாநில ஆலோசனைக் குழு உறுப்பினராகப் பல பத்தாண்டுகள் என அரை நூற்றாண்டுக்கும் மேலாகக் கற்பதிலும் கற்பிப்பதிலும் தம்முடைய வாழ்வை அர்ப்பணித்தவர்.

கேரளத்து இயக்க வானில் ஒளிர்விடும் தாரகையாகத் திகழ்ந்தவர் மம்முனி மௌலவி. கல்வி, மக்கள் சேவை, ஊடகம் எனப் பல்வேறு துறைகளில் காத்திரமான பணிகளைச் செய்திருக்கின்றார். எத்தனையோ பள்ளிவாசல்களை அமைப்பதிலும், கல்வி நிறுவனங்களின் உள் கட்டமைப்பை மேம்படுத்துவதிலும் ஏகப்பட்ட திட்டங்களை ஆரவாரமின்றி நடைமுறைப்படுத்தி சாதித்தவர். பழகுவதற்கு இனிமையானவர். எளிமையானவர். மௌன உழைப்பாளி.

மம்முனி மௌலவி மலப்புரம் மாவட்டம் முல்லியக் குர்சியில் 1944இல் பிறந்தார். தந்தை கலக்கண்டம்தில் முஹம்மது, தாய் கடந்தோடி மரியக்குட்டி. 1955 முதல் 1965 வரை சாந்தபுரம் இஸ்லாமியா கல்லூரியில் பயின்று, எஃப்.டி, பி.எஸ்.எஸ்.சி பட்டங்களைப் பெற்றார். கரியாடு மதரஸாவில் சிறிது காலம் ஆசிரியராகப் பணியாற்றினார். 1966 முதல் 1976 வரை சாவக்காடு முத்துவத்தூர் மஹாலின் இமாமாகவும் மதரஸா ஆசிரியராகவும் ஓராண்டு காலம் மூவாற்றுப்புழா மதரஸத்துல் பனத்தின் முதல்வராகவும் பணியாற்றினார்.

1977 முதல் எர்ணாகுளம், ஆலப்புழா, கொல்லம், திருவனந்தபுரம், கோட்டயம், இடுக்கி, பத்தனம்திட்டா, திருச்சூர், பாலக்காடு மாவட்டங்களில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் மண்டலப் பொறுப்பாளராகப் பத்து ஆண்டுகள்

பணியாற்றினார். நீண்ட காலமாக ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கேரள மாநில ஆலோசனைக்குழு உறுப்பினராகத் திகழ்ந்தார். அகில இந்தியப் பிரதிநிதிகள் சபையின் உறுப்பின ராக இருந்தார்.

பெரிந்தல்மண்ணா இஸ்லாமிய மிஷன் அறக்கட்டளையின் செயலாளர், சாந்தபுரம் மஹாலின் உதவி காதி, வாடனப்பள்ளி அநாதை இல்லம், இஸ்லாமியக் கல்லூரியின் முதல்வர் ஆகிய பொறுப்புகளை ஏற்றுத் திறம்படச் செயலாற்றியவர் மம்முனி மௌலவி. மலர்வாடி பாலமாசிகா சிறார் இதழ் உருவாக்கத்தில் மம்முனி மௌலவி முக்கியப் பங்காற்றினார். நீண்ட காலமாக அதன் வெளியீட்டாளராகப் பணியாற்றினார்.

சாந்தபுரம் இஸ்லாமியக் கல்லூரி, வாடனப்பள்ளி அநாதை இல்லம், பாதிரிபால மவுண்ட் சினா, பெரும்பிலவ் அன்சார் நிறுவனங்கள், அழிக்கோடு இஸ்லாமியக் கல்வி வளாகம் ஆகியவற்றின் நிர்வாகக் குழுக்களில் உறுப்பின ராகவும் மம்முனி மௌலவி சிறப்பான பங்களிப்பை வழங்கி வந்தார்.

பல்வேறு நிறுவனங்களின் உள்கட்டமைப்பை மேம்படுத்து வதற்காக மிகமுக்கியப் பங்காற்றினார். பத்திரி பாலா பைத்துஷரிகா அல்கைரி அறக்கட்டளை, பெரும்பிளவு அன்சாரி அறக்கட்டளை, வாடனப்பள்ளி அநாதை இல்லக் குழு, கெச்சேரி அல் இஸ்லாஹ், அழிக்கோடு இஸ்லாமியக் கல்வி வளாகம், பெரிங்காடி அல்ஃபலாஹ், துவ்வூர் ஹிரா ஆங்கிலப் பள்ளி ஆகியவற்றின் தலைவராக இருந்தார்.

கேரளாவிற்கு வெளியே ஜமாஅத்தே இஸ்லாமியின் சேவைப் பகுதியை விரிவுபடுத்துவதில் மம்முனி மௌலவி குறிப்பிடத்தக்கப் பங்காற்றினார். விஷன் 2016 (தற்போது 2026) திட்டத்தின் துணைத் தலைவராக, இந்தியாவின் பின் தங்கிய பகுதிகளுக்குப் பயணம் செய்து கல்வி, சேவை முயற்சி களைத் தொடங்கினார்.

பள்ளிவாசல் கட்டுமானம், கல்வி மையங்கள், உள்கட் டமைப்பு மேம்பாடு, பொதுச் சேவை ஆகிய துறைகளில் பல திட்டங்களில் அவர் முன்னணிப் பங்காற்றினார். இப் பணி களுக்காக வளைகுடா நாடுகள், துருக்கி, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்துள்ளார்.

தம் வாழ்நாளில் பெரும்பகுதியை இயக்கம், கல்வி, சமூகப் பணிகளுக்காக அர்பணித்த மம்முனி மௌலவி அவர்களை அல்லாஹ் பொருந்திக் கொண்டு சுவனத்தின் உயரிய பதவியை வழங்குவானாக! அவரது குடும்பத்தினர், இயக்கத் தோழமை களுக்கு அல்லாஹ் அழகிய பொறுமையை வழங்குவானாக!

**– டாக்டர். ஏ.ஏ. ஹலீம்**

**மம்முனி மௌலவி சாந்தபுரம் இஸ்லாமியக் கல்லூரி வார்த்தெடுத்த முத்துக்களில் மகுடமாய் ஜொலித்தவர். ஆசிரியராக வாழ்வைத் தொடங்கியவர். இமாமாகப் பத்தாண்டுகள், முதல்வராகப் பல ஆண்டுகள், இஸ்லாமிய இயக்கத்தின் மாவட்ட அமைப்பாளராகப் பத்தாண்டுகள், மாநில ஆலோசனைக் குழு உறுப்பினராகப் பல பத்தாண்டுகள் என அரை நூற்றாண்டுக்கும் மேலாகக் கற்பதிலும் கற்பிப்பதிலும் தம்முடைய வாழ்வை அர்ப்பணித்தவர்.**

# பேராற்றல் மிக்கவன்

**வானங்களையும் பூமியையும் படைத்தவனும், வானவர்களைத் தூது கொண்டு செல்பவர்களாக நியமித்தவனும் ஆகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்![1] (அவ்வானவர்கள் எத்தகையோர் எனில்) அவர்களுக்கு இரண்டிரண்டு, மூன்று மூன்று, நான்கு நான்கு இறக்கைகள் உள்ளன.[2] அவன் தன்னுடைய படைப்புகளின் வடிவமைப்பில் தான் நாடுவதை அதிகப்படுத்துகின்றான்.[3] திண்ணமாக அல்லாஹ் அனைத்தின் மீதும் பேராற்றல் கொண்டவனாக இருக்கின்றான். அல்லாஹ் எந்த ஓர் அருள்வாயிலை மக்களுக்காகத் திறந்துவிட்டாலும், அதனைத் தடுக்கக்கூடியவர் யாருமிலர். மேலும் அவன் அதனை அடைத்துவிட்டால், அதற்குப் பிறகு அதனைத் திறக்கக்கூடியவர் வேறு யாருமிலர்.[4] - அவன் யாவற்றையும் மிகைத்தவனாகவும், நுண்ணறிவாளனாகவும் இருக்கின்றான்.[5]**

**● அத்தியாயம் 35 ஃபாத்திர் ● திருவசனங்கள் : 1, 2**

**1.** இதற்கு, ‘இந்த வானவர்கள் வல்லோன் அல்லாஹ்விடமிருந்து இறைத்தூதர்களுக்கு தூதுச் செய்திகளைக் கொண்டு சேர்க்கின்ற பணியைச் செய்துகொண்டிருந்தார்கள்’ என்றும் பொருள் கொள்ளலாம்.

ஒட்டுமொத்த பேரண்டத்திலும் அல்லாஹ்வின் ஆணைகளைக் கொண்டு செல்கிற, அவற்றை நடைமுறைப்படுத்துகின்ற பணியும் இந்த வானவர்களுடையதுதான் என்றும் இதற்குப் பொருள் கொள்ளலாம்.

இந்த வானவர்களைத்தான் இணைவைப்பாளர்கள் தங்களின் தெய்வங்களாகவும் தேவிகளாகவும் ஆக்கிக் கொண்டிருந்தார்கள். எனவே ‘வானவர்களின் உண்மையான தகுதிநிலை ஏக இறைவனின் கட்டளைகளின்படி இயங்குகின்ற கீழ்ப்படிதலுள்ள பணியாளர்களைத் தவிர வேறு ஒன்றும் இல்லை; ஏதேனுமொரு அரசனின் பணியாளர்கள் அவனுடைய சட்டங்களையும் ஆணைகளையும் நடைமுறைப்படுத்துவதற்காக இங்குமங்கும் ஓடித் திரிவதைப் போன்றுதான் இந்த வானவர்களும் பேரண்டத்தின் ஆட்சியாளனுக்குச் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்; இங்குமங்கும் பறந்து, பறந்து இயங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இந்தப் பணியாளர்கள் வசம் எந்த அதிகாரமும் இல்லை. எல்லா அதிகாரங்களும் உண்மையான ஆட்சியாளன் வசம்தான் இருக்கின்றன’ என்கிற உண்மையை உணர்த்துகின்ற நோக்கத்துடன்தான் இங்கு வானவர்களைப் பற்றிய இந்த விவரம் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

**2.** இந்த வானவர்களின் இறக்கைகளும் சிறகுகளும் எத்தகைய இயல்பைக் கொண்டவையாய் இருக்கின்றன என்பதை அறிந்துகொள்வதற்கான எந்த வழிவகையும் நம் வசம் இல்லை.

அதே சமயம் அல்லாஹ் அவற்றை விவரிப்பதற்காக வேறு சொற்களுக்குப் பதிலாக மனித மொழியில் பறவைகளின் இறக்கைகளைக் குறிக்கின்ற சொல்லை ஆளுகின்றான் எனில் அதிலிருந்து நம்முடைய மொழியில் இந்தச் சொல்லே அவர்களின் அசலான இயல்புக்கு நெருக்கமானதாய் இருக்கின்றது என எடுத்துக் கொள்ளலாம்.

28ஆம் பக்கம் பார்க்க...

**● தஃப்ஹீமுல் குர்ஆன் ● மௌலானா மௌதூதி (ரஹ்) ● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்**

# இறைவன் இணைவைப்பை விரும்புவதில்லை!

**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'அல்லாஹ் கூறுகின்றான்: 'நான் இணைவைப் பிலிருந்தும், ஒட்டுமொத்த இணைவைப்பாளர்களிலிருந்தும் தேவையற்றவனாக இருக்கின்றேன். என்னுடன் வேறு ஒருவரை இணையாக்குகின்ற வகையில் ஒருவர் எந்த வேலையைச் செய்தாலும் நான் அவனையும் அவன் செய்த இணைவைப்பையும் விட்டுவிடுகின்றேன்.'**

அறிவிப்பாளர் : அபூஹுரைரா(ரலி)
நூல் : முஸ்லிம்

இணைவைப்பை இறைவன் ஒருபோதும் விரும்ப மாட்டான். தன்னுடைய அடியான் தனக்கு மட்டுமே அடிபணிய வேண்டும் என்றும் தனக்கு மட்டுமே கீழ்ப் படிந்து வாழ வேண்டும்; தனக்கு முன்னால் மட்டுமே சிரம் பணிய வேண்டும்; தன்னோடு மட்டுமே எதிர்பார்ப்புகளையும் விருப்பங்களையும் பிணைத்து வைத்தி ருக்க வேண்டும் என்றே விரும்புகின்றான்.

மேலும் அடியான் தன்னுடைய வாழ்வில் இறைவனுக்கு மட்டுமே உரித்தான அந்தஸ்தை இறைவன் அல்லாத வேறு எவருக்கும் தந்துவிடக் கூடாது என்றும் இறைவன் விரும்புகின்றான். இறைவன் அல்லாத மற்றவர்கள் எவரானாலும் சரி அவர்கள் அனைவருமே இறைவனின் அடியார்களாய்த்தாம் இருக்கின்றார்கள். அவர்களால் படைப்பாளர்களாய் ஆகிவிடவும் முடியாது; அதிபதிகளாய் ஆகிவிடவும் முடியாது. அவர்களை ஒருபோதும் வணக்கத்துக்குரியவர்களாய், அதிபதிகளாய், பரிபாலிப்பவர்களாய் ஆக்கிக் கொள்ளவும் முடியாது.

ஏனெனில் அல்லாஹ்வின் இறையாண்மையில், அவனுடைய தனிச் சிறப்புமிக்க பண்புகளில், அவனுடைய அதிபதி, ஆணையிடும் அதிகாரி, வளர்த்து, நலம் காத்து, கண்காணித்து, பாதுகாப்பவன் என்கிற அந்தஸ்தில், அவனுடைய உரிமைகளில் மற்றவர்களை பங்காளிகளாய்ச் சேர்த்துக் கொள்வதும், இறைவன் அல்லாத மற்றவரும் நம்முடைய தேவைகளை நிறைவேற்றுபவராகக் கருதுவதும், இறைவன் அல்லாத மற்றவரும் தம்முடைய வழிபாட்டு உணர்வின் புகலிடமாக, தம்முடைய ஆசைகளின் சரணாலயமாக ஆகிவிட முடியும் என்று நினைப்பதும் மகத்தான கொடுமை ஆகும். இந்த நடத்தையை மிகப் பெரும் அக்கிரமம் என்றே குர்ஆன் தெள்ளத்தெளிவாக அறிவிக்கின்றது.

மேலும் இறைவன் இணைவைப்பை ஒருபோதும் மன்னிக்க மாட்டான் என்றும் இணைவைப்பாளர்கள் இறைவனின் கருணையிலிருந்து நிரந்தரமாக வெகு தொலைவு விலக்கப்பட்டுவிடுவார்கள் என்றும் அறிவிக்கின்றது. இணைவைப் பாளனை அன்போடு, பரிவோடு பார்ப்பதற்கு இறைவனின் ரோஷம் ஒருபோதும் விரும்பாது.

நபிமொழி விளக்கம் ✦ மௌலானா முஹம்மத் ஃபாரூக்கான் ✦ தமிழில் : அபூ ஹானியா

*26 ஆம் பக்கத் தொடர்ச்சி...*

இந்த இறக்கைகள் குறித்துக் குறிப்பிடும் போது இரண்டு இரண்டு, மூன்று மூன்று, நான்கு நான்கு இறக்கைகள் என்று சொல்லப்பட்டிருப்பதிலிருந்து வெவ்வேறு வானவர்களுக்கு வெவ்வேறு படித்தரங்களைக் கொண்ட சக்தியை அல்லாஹ் தந்திருக்க வேண்டும் என்பதும் எவரை எந்தப் பணியில் ஈடுபடுத்த நாடினானோ அவருக்கு அந்தப் பணிக்கேற்ற செயல்திறனையும் ஆற்றலையும் வழங்கியிருக்க வேண்டும் என்பதும் தெளிவாகின்றது.

**3.** வானவர்களின் இறக்கைகளின் அதிகபட்ச எண்ணிக்கை நான்கு வரை குறுக்கப்பட்டிருக்கவில்லை என்பதையும் இன்னும் சொல்லப்போனால் அல்லாஹ் ஒரு சில வானவர்களுக்கு நான்குக்கும் அதிகமான இறக்கைகளை அருளியிருக்கின்றான் என்பதையும் இந்த வாசகங்கள் தெள்ளத் தெளிவாக உணர்த்திவிடுகின்றன.

நபிகளார்(ஸல்) வானவர் ஜிப்ரீலை ஒரு முறை அறுநூறு இறக்கைகளைக் கொண்ட தோற்றத்தில் பார்த்தார்கள் என்கிற விவரம் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத்(ரலி) அவர்களால் அறிவிக்கப்பட்ட நபிமொழி ஒன்றில் பதிவாகியிருக்கின்றது. (புகாரி, முஸ்லிம், திர்மிதி). அன்னை ஆயிஷா (ரலி) அறிவிக்கின்றார்: 'நபிகளார்(ஸல்) வானவர் ஜிப்ரீலை இரண்டு முறை அவருடைய உண்மையான தோற்றத்தில் பார்த்தார்கள். அவருக்கு அறுநூறு இறக்கைகள் இருந்தன. மேலும் அவர் ஒட்டுமொத்த அடிவானத்தையும் நிறைத்துக் கொண்டு நின்றார்'. (திர்மிதி)

**4.** அல்லாஹ்வின் அடியார்களில் எவரேனும் ஒருவரைக் குறித்து 'வாழ்வாதாரத்தை அள்ளித் தருபவர்' என்றும் இன்னொருவரைக் குறித்து, 'பிள்ளைச் செல்வத்தைத் தருபவர்' என்றும், வேறொருவரைக் குறித்து 'நோய் தீர்த்து குணம் அளிப்பவர்' என்றும் இணை வைப்பாளர்கள் வளர்த்துக் கொண்டிருக்கின்ற பல்வேறு தவறான கருத்துகளைக் களைவது தான் இதன் நோக்கம்.

இணைவைப்பின் இந்தக் கருத்தோட்டங்கள் அனைத்துமே எந்த அடிப்படையும் இல்லாதவைதாம். மனிதர்களுக்கு எந்த வடிவத்தில் எத்தகைய அருள்வளம் கிடைத்தாலும் அது மாண்பும் மகத்துவமும் நிறைந்த இறைவனின் அருளால் மட்டுமே கிடைக்கின்றது என்பதுதான் கலப்படமற்ற அப்பட்டமான உண்மையாகும்.

ஏக இறைவனுக்குப் பதிலாக இங்கு மங்கும் கதவுகளைத் தட்டிக் கொண்டும் யாசித்துக்கொண்டும் ஒவ்வொரு பீடங்களாகப் படியேறி கை நீட்டிக் கொண்டும் திரிகின்ற அவலத்திலிருந்து மனிதர்களைப் பாதுகாப்பதற்காகவும் விதியை ஆக்குகின்ற, அழிக்கின்ற அதிகாரம் ஏக இறைவனைத் தவிர வேறு எவருக்கும் இல்லை என்பதை நெஞ்சங்களில் நல்ல முறையில் பதியச் செய்வதற்காகவும் இந்தக் கருத்து மகத்துவம் மிக்கக் குர்ஆனிலும் நபிமொழிகளிலும் ஏராளமான இடங்களில் வெவ்வேறு விதங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**5.** 'யாவற்றையும் மிகைத்தவன்' அதாவது எல்லோர் மீதும் முழுமையாக ஆதிக்கம் செலுத்தி மேலோங்கி நிற்பவன்; முழுமையான, மேலான அதிகாரங்கள் அனைத்தையும் தன்வசம் கொண்டவன். அவனுடைய தீர்ப்புகள் நடைமுறைப்படுத்தப் படுவதைத் தடுக்கின்ற வலிமை எவருக்குமே கிடையாது. மேலும் அத்துடன் அவன் நுண்ணறிவாளனாகவும் இருக்கின்றான். அவன் எந்தவொரு தீர்மானத்தை எடுத்தாலும் முழுக்க முழுக்க ஞானத்தின் அடிப்படையில்தான் எடுக்கின்றான். ஒருவருக்கு எதையேனும் வழங்கினாலும் விவேகத்தின் அடிப்படையில்தான் வழங்குகின்றான். ஒருவருக்குக் கொடுக்காமல் இருந்தாலும் அதுவும் அவருக்கு அதை வழங்குவது விவேகத்துக்கு எதிரானது என்கிற அடிப்படையைக் கொண்டதாகத்தான் இருக்கும்.

*(தொடரும்)*

- **கப்ளிசேட்**

தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் 1.5 டிரில்லியன் டாலர் (Trillion dollar) பொருளாதார இலக்கு மிகவும் வரவேற்புக்கு உரியதாகும். இந்தப் பொருளாதார இலக்கை அடைய வெளிநாட்டு முதலீடுகள்(Foreign Direct Investment FDI) மிக முக்கியத் தேவையாக உள்ளது. ஆகவே எல்லா ஆட்சியிலும், ஆட்சியாளர்கள் வெளிநாட்டு முதலீடு களைப் பெற பல்வேறு முயற்சிகளைச் செய்கிறார்கள். வெளிநாடுகளுக்கே முதல்வர், தொழில் துறை அமைச்சர்கள், அதிகாரிகள் தலைமையிலான குழு நேரடியாகச் சென்று அங்குள்ள ஆட்சியாளர்கள், அதிகாரிகள், தொழிலதிபர்களைச் சந்தித்து தமிழ்நாட்டில் வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளையும், அதற்கான இடங்கள், வரிச் சலுகைகள், அரசாங்கத்தின் எளிமை யான அனுமதிகள், ஒத்துழைப்புகள் பற்றியெல்லாம் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி உறுதி மொழிகள் அளித்து புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொள்கிறார்கள். இது இன்றைய பொருளாதார வளர்ச்சிக்கு மிகத் தேவையாக உள்ளது.

# வெளிநாட்டு முதலீடுகளின் அவசியங்களும்! எதிர்பார்ப்புகளும்!

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மூலதனத்தை(Capital) அதிகரிப்பது முக்கிய மானதாகும். அது அந்தந்த நாட்டின் தங்கம், வெள்ளி, கச்சா எண்ணெய் போன்ற இயற்கை வளங்களின் ஏற்றுமதி, இறக்கு மதி சார்ந்து மதிப்பிடப்படும். ஆனாலும் அனைத்து நாடுகளும் அதனதன் இயற்கை வளங்களைக்கொண்டு மட்டுமே வளர்ச்சி அடைந்து விட முடியாது. எனவே பொரு ளாதார வளர்ச்சிக்காக வெளிநாட்டு முதலீட் டாளர்களை ஈர்க்கும் படியான சட்ட திட்டங் களை உருவாக்குகின்றன.

இந்தச் சட்டங்கள் அந்தந்த நாடுகளின் சூழல், தேவையைப் பொறுத்து வடிவமைக் கப்படுகின்றன. இந்தியாவில் வெளிநாட்டு முதலீடுகள் வெளிநாட்டு நேரடி முதலீடு (Foreign Direct Investment), வெளிநாட்டு போர்ட்ஃபோலியோ முதலீடு(Foreign Portfolio investment) என்று இரண்டு முறைகளில் கொண்டு வரப்படுகின்றன. ஒரு நாட்டின் உற்பத்தி சொத்துகளில், நிறுவனங்களில் வெளிநாட்டினர் நேரடியாக முதலீடு செய்வதே வெளிநாட்டு நேரடி முதலீடாகும். இந்த நேரடி முதலீடானது முதலீடு செய்யப்படும் நிறுவனத்தின் வளர்ச்சியிலும், நிர்வாகத்திலும் தனது பங்களிப்பை வழங்கும். ஆகவே அது நிறுவனத்தின் வளர்ச்சியில் பங்களிக்கும்.

ஆனால் வெளிநாட்டு போர்ட் ஃபோலியோ முதலீடானது பங்குகளில் செய் யப்படுவதால் அது நிறுவனத்தின் வளர்ச்சி, தளர்ச்சிக்கு ஏற்ப முதலீடுகளை மாற்றிக் கொள் ளும். உதாரணமாக மாருதி நிறுவனத்தோடு சுஸுகி நிறுவனம் இணைந்து இருவருக்கும் இடையே தொழில் நுட்பங்களைப் பகிர்ந்து கொண்டு நிறுவனத்தை வளர்ச்சி அடையச் செய்வது FPI வகை முதலீடாகும். ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்தின் 10% பங்குகளை ஃபேஸ் புக் நிறுவனம் வாங்கியிருப்பது FPI முதலீ டாகும். இந்த முதலீட்டு வகையில் நிறுவனம் தளர்ச்சி அடைந்தால் பங்குகளை விற்று விட்டு வெளியேறி விடலாம்.

உலகமயமாக்கலின் பயனாக இந்தியா வில் வெளிநாட்டு முதலீடுகள் குவிந்து வருகின்றன. அதற்குப் பல வகையான காரணங்கள் இருக்கின்றன. படித்த பொறி யாளர்கள் எண்ணிக்கை, குறைந்த சம்பளத்தில் திறமையான தொழிலாளர்கள், சிக்கலில் லாத தொழிலாளர் சட்டங்கள், நல்ல உள்கட்

டமைப்பு வசதிகள், சந்தை வாய்ப்புகள் என ஏராளமான காரணிகள் இருக்கின்றன. நரசிம்மராவ் பிரதமராகவும், மன்மோகன் சிங் நிதி அமைச்சராகவும் இருந்தபோது, உலகமயமாக்கலுக்கான அறிவிப்பை நிதி நிலை அறிக்கையிலேயே வெளியிட்டார். இதனால் வெளிநாட்டு இந்தியர்கள், இந்தியாவில் முதலீடு செய்ய ஊக்குவிக்கும் அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் பல்வேறு சலுகைகளும், திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. ஏற்றுமதி ஊக்குவிக்கப்பட்டது. இறக்குமதிகளில் தளர்வுகள் செய்யப்பட்டு ஊக்குவிக்கப்பட்டது. இதன் காரணமாக ஏராளமான வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் கால்பதிக்கத் தொடங்கின. அடுத்தடுத்து வந்த அரசாங்கமும் அதே கொள்கைகளைப் பின்பற்றியதால் வெளிநாட்டு முதலீடுகள் வருவதில் சிக்கல்கள் ஏற்படவில்லை. தொலை தொடர்பு, ஊடகம், போக்குவரத்து, உள்கட்டமைப்பு, விமானப் போக்குவரத்து உட்பட பல்வேறு துறைகளில் அபரிதமான வளர்ச்சி ஏற்பட்டது.

சில உள்ளூர் தொழில்களில் நசிவு ஏற்பட்டாலும், வெளிநாட்டு தொழில் நுட்பங்களின் வரவு இந்திய வர்த்தகத் துறையை மிகப்பெரிய முன்னேற்றத்திற்குக் கொண்டு சென்றது. தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான பொறியியல், பட்டதாரி மாணவர்கள் படித்து முடித்து பெருங் கனவுகளோடு வெளியே வருகிறார்கள். அவர்களுக்குத் தகுதியான உயர்தரமான வேலை வாய்ப்புகளை உருவாக்க வெளிநாட்டு நிறுவனங்களின் முதலீடுகள் தேவைப்படுகின்றன.

உற்பத்தித் துறைகள் (Manufacturing), தகவல் தொழில்நுட்பம் (IT, ITES), மின்னணுவியல் (Electronics) போன்ற துறைகளில் வெளிநாட்டு முதலீடுகள் இலட்சக்கணக்கான நேரடி, மறைமுக வேலை வாய்ப்புகளை உருவாக்குகின்றன. 2036 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டை 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றுவதே இன்றைய அரசின் இலக்காகும். இந்த பிரம்மாண்ட இலக்கை உள்நாட்டு முதலீடுகளால் மட்டுமே எட்ட முடியாது என்பதால் உலகளாவிய பெரும் நிறுவனங்களின் முதலீடுகள் மிக அவசியமாகத் தேவைப்படுகின்றன.

உலகத்தரம் வாய்ந்த நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடுகள் செய்யும் போது, அதிநவீன தொழில் நுட்பங்கள்(Advanced Technology), தொழில்நுட்ப பரிமாற்றங்கள்(Technology Transfer) என்று புதிய தொழில் நுட்பங்களும் உலகளாவிய தொழில்நுட்ப அறிவும் இளைஞர்களுக்குக் கிடைக்க வாய்ப்பு அமைகிறது. மேலும் உலகளாவிய நிறுவனங்கள் வரும் போது தங்களுடன் ரோபோட்டிக்ஸ், செயற்கை நுண்ணறிவு(AI) போன்ற தொழில் நுட்பங்களையும் கொண்டு வருகின்றன.

அதிவேக நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் விரிவாக்கம், தடையில்லா மின்சாரக் கட்டமைப்பு ஆகியவற்றை உருவாக்க பெருமளவில் முதலீடுகள் தேவைப்படுகின்றன. இந்த உள்கட்டமைப்பு உருவாக்கங்கள், மேம்பாடுகள் மிகப்பெரிய வளர்ச்சிக்கு வித்திடுகின்றன. அரசுக்குக் கிடைக்கும் வெளிநாட்டு முதலீடுகள் மூலமாக உள்கட்டமைப்புகளை உருவாக்கி மேலும் மேம்படுத்த உதவுகின்றன. ஆட்டோமொபைல்ஸ், எலக்ட்ரானிக்ஸ், ஜவுளித்துறைகளில் உலக



ளாவிய போட்டிகளைச் சமாளிக்க வெளி நாட்டு முதலீடுகள் அவசியமாகும். மேலும் ஆராய்ச்சி, மேம்பாடு (Research Development) போன்ற துறைகளில் சென்னை போன்ற நகரங்கள் உலகளவில் சிறந்த ஆராய்ச்சி மையங்களாக மாறிவருகின்றன. வெளி நாட்டு முதலீடுகள் உள்நாட்டு ஊழியர் களின் தொழில்நுட்பத் திறனை(Skill development) உலகத் தரத்திற்கு உயர்த்த உதவுகின்றன. தொழில்துறை பூங்காக்கள் (Techno Parks), சிறப்புப் பொருளாதார மண்ட லங்கள்(Special Economic Zones), தொழிற் பேட்டைகள்(Industrial parks) என அரசு சிறப்பாக இவற்றை உருவாக்கி மேம்படுத்தி வருகிறது.

புதிதாக வளர்ந்துவரும் துறைகளை (Emerging Sectors) அடையாளம் கண்டு அதைக் கட்டமைத்து வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல வெளிநாட்டு முதலீடுகள் உதவுகின்றன. இன்றைய வளர்ச்சி நிலை யில் இருக்கும் முக்கியத் துறையில் ஒன் றான மின்சார வாகனங்கள்(Electric Vechile) சுற்றுச்சூழல் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, மின்சார வாகனம், பேட்டரி உற்பத்தித் துறையில் இலக்குகளை அடைய வெளிநாட்டு முதலீடுகள் அதிகம் தேவைப் படுகின்றன. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறைகளான(Renewable Energy) சூரிய ஒளி (Solar Energy), காற்றாலை மின் உற்பத்தி (Windmill) போன்ற பசுமை ஆற்றல் திட்டங் களை விரிவுபடுத்தி மேம்படுத்த முதலீடுகள் தேவைப்படுகின்றன.

இந்தியாவின் மின்னணு உற்பத்தியில் (Electronics Manufacturing) தமிழ்நாடு



முதன்மை மாநிலமாக உள்ளது. உலகளாவிய முன்னணி EMS(Electronics Manufacturing Services) நிறுவனங்களை மேலும் ஈர்க்க முதலீடுகள் தேவைப்படுகின்றன. தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் உலகளவில் ஏற்றுமதி செய்யப்படுவதால் மாநிலத்தின் அன்னியச் செலாவணி இருப்பு, பொருளாதார மதிப்பு உயர்கிறது. உலக ளாவிய சப்ளை செயினில்(Global Supply chan) தமிழ்நாடு ஒரு முக்கிய மையமாக மாறுவதற்கு வெளிநாட்டு நிறுவனங்களின் கூட்டாண்மை மிக அவசியமாகிறது.

இந்தியாவில் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க மாநிலங்களுக்கிடையே கடுமையான போட்டி நிலவி வருகிறது. இன்வெஸ்ட் தமிழ்நாடு(Invest Tamilnadu) என்ற அமைப்பு மூலமாகவும், ஒற்றைச் சாளர முறை (Single window system) மூலமாகவும் தமிழ்நாட்டில் தொழில்கள் தொடங்குவது மிக எளிதாக் கப்பட்டுள்ளது. அண்மைக் காலங்களில் தொழில்நுட்ப வளர்ச்சி, உலகளாவிய அள வில் போட்டி போட வெளிநாட்டு முதலீடுகள், தொழில்நுட்ப வளர்ச்சிகளைப் பெற அரசுகள் தொடர்ந்து முயலுகின்றன.

கடந்த திமுக ஆட்சியில் இதற்கான தொடர் முயற்சிகள் எடுக்கப்பட்டன. முன் னாள் முதல்வர் ஸ்டாலின், சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்குச் சென்று வந்தார். தமிழ்நாட்டிற்கு புதிய முதலீடுகளை ஈர்க்க வும், 2024 ஜனவரியில் சென்னையில் நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்புக் கொடுக்கவும் சென்று வந்தார். அன்றைய தொழிற்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, அதிகாரிகள் குழுவுடன் சிங்கப்பூரின் முன்னணி தொழில் நிறுவனங் களான டெமாசெக், செம்கார்ப், கேப்பிட் டாலேண்டு இன்வெஸ்ட்மெண்ட் ஆகிய நிறுவனங்களின் தலைமை அதிகாரிகளையும் சந்தித்தார்.

இந்தப் பயணத்தில் தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனம் சிப்காட், மேட்டின், Fame TN, டான்சம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்

கழகம் ஆகியவை சிங்கப்பூர் பல்கலைக் கழகத்துடன் ஓர் ஒப்பந்தத்தைச் செய்தன. பிறகு ஜப்பான் சென்ற முதல்வர் ஸ்டாலின் தலைநகர் டோக்கியோ மட்டும் செல்லாமல் இந்திய வம்சாவளியினர் அதிகம் வசிக்கும் ஒசாகா நகருக்கும் சென்றார். 200க்கும் மேற்பட்ட ஜப்பானிய நிறுவனங்கள் கலந்து கொண்ட முதலீட்டாளர்கள் மாநாட்டிலும் கலந்து கொண்டு பேசினார்.

2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐக்கிய அரபு நாடுகளுக்கும் ஒரு தொழில்முறை பயணத்தை மேற்கொண்டார். இதுபோன்ற வெளிநாட்டுப் பயணங்களால் கிடைத்த முதலீடுகள் எவ்வளவு? உருவான வேலை வாய்ப்புகள் எத்தனை? என்று எதிர்கட்சி யினர் கேள்வி எழுப்புவார்கள். முன்னாள் முதல்வரான எடப்பாடி பழனிச்சாமியும் தனது ஆட்சியில் தான் மேற்கொண்ட அமெரிக்கா, துபாய் பயணத்தில் 8800 கோடிக்கு முதலீடுகளை ஈர்த்ததாகவும் அதன் மூலம் 31,000 வேலை வாய்ப்புகளை உரு வாக்கியதாகவும் கூறினார்.

இதுபோன்ற வெளிநாட்டுப் பயணங்கள் முறையாகத் திட்டமிட்டு மேற்கொண்டால் நல்ல பயனை அளிக்கும். இதுபோன்ற நேரடிப் பயணங்கள் முதலீட்டாளர்களிடையே நம்பிக்கையை உருவாக்கும். புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்படும் செய்திகள் வெளியாவதன் மூலமாகப் பிற நிறுவனங் களின் கவனத்தை ஈர்க்க உதவும். முதலீடு களை ஈர்ப்பதற்காக பெரிய சலுகைகளை வழங்க அவசியமில்லை. இந்தியா ஒரு மிகப்பெரிய சந்தை. எங்கு பெரிய சந்தை உள்ளதோ அங்கு முதலீடுகள் தானாகவே வரும். ஆகவே ஒவ்வொரு மாநிலமும் முதலீடுகளை ஈர்க்க சலுகைகளை வழங்க வேண்டிய அவசியமில்லை.

இதனால் அரசுகளுக்கே இழப்புகள் ஏற்படுகின்றன. இதுபோன்ற சலுகைகளை அறிவிப்பதற்குப் பதிலாக மாநிலத்தின் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தலாம். அப்போது தானாக முதலீடுகள் வரும் என்



கிறார் பொருளாதார ஆலோசகரான நாகப் பன் புகழேந்தி. ஒவ்வொரு அரசும் முதலீட் டாளர்கள் மாநாடுகளை நடத்துகிறார்கள். வெளிநாட்டுப் பயணங்கள் போய் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடுகிறார்கள். ஓராண்டு கழித்து போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் நடைமுறைக்கு வந்ததா என்பதை ஆய்வு செய்து அறிவிக்க வேண் டும் என்கிறார் நாகப்பன்.

கடந்த திமுக அரசில் 226 திட்டங்களுக் குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்ட தாகவும் 2,95,339 கோடி ரூபாய் முதலீடுகள் வந்து இருப்பதாகவும் 4,12,565 பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்திருப்பதாகவும் கூறப்பட்டது. திமுக ஆட்சியின் இறுதி நேரத் தில் மிட்சுபிஷி நிறுவனம் குளிர்சாதன பெட்டி களைத் தயாரிக்கும் நிறுவனத்தை அமைக்க 1891 கோடி ரூபாய் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது. நிஸான், ரெனால்ட் நிறு வனங்கள் இணைந்து தமிழ்நாட்டில் உள்ள தங்கள் ஆலைகளை விரிவாக்கம் செய்யப் போவதாக அறிவித்தன.

ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு இன்றைய முதல்வர் ஜோசப் விஜய், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்க தனது முதல் வெளி நாட்டுப் பயணமாக பிரிட்டன் சென்றார். அங்கு ரூபாய் 12,300 கோடி முதல் 15,300 கோடி வரை முதலீட்டு ஒப்பந்தங்களில் கையெ ழுத்திட்டுள்ளதாக ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டன. ஆனால் எதிர்கட்சிகளின் சார்பில் லண்டன் பயணம் கடுமையாக விமர் சிக்கப்படுகிறது. ‘வெளிநாட்டு நிறு வனங்கள், கிரீன்ஃபீல்டு இன்வெஸ்ட்மென்ட் (Greenfield Investment), பிரவுன்ஃபீல்ட் இன்வெஸ்ட்மென்ட்(Brown Field Investment)

என்ற இருவகைகளில் முதலீடுகளைச் செய்கின்றன. அதில் கிரீன்ஃபீல்ட் இன்வெஸ்ட்மென்ட் என்பது ஒரு நிறுவனம் முற்றிலும் புதிதாக தொடங்கப்படுவதாகும். பிரவுன்ஃபீல்ட் இன்வெஸ்ட்மென்ட் என்பது ஏற்கனவே இயங்கிக்கொண்டிருக்கும் நிறுவனம் தனது செயல்பாடுகளை விரிவுபடுத்துவதோ, அல்லது செயல்பாட்டில் இயங்கிக் கொண்டிருக்கும் மற்றொரு நிறுவனத்தை வாங்கி அதனை விரிவாக்கம் செய்வதோ ஆகும். முதல்வர் விஜய் ஒப்பந்தம் செய்ததாகக் கூறப்படும் நிறுவனங்கள் எல்லாம் ஏற்கனவே தமிழ்நாட்டில் இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனங்களாகும். ஆகவே புதிதாக எந்த ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை' என்று நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

> ஒவ்வொரு அரசும் முதலீட்டாளர்கள் மாநாடுகளை நடத்துகிறார்கள். வெளிநாட்டுப் பயணங்கள் போய் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடுகிறார்கள். ஓராண்டு கழித்து போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் நடைமுறைக்கு வந்ததா என்பதை ஆய்வு செய்து அறிவிக்க வேண்டும்

அதிமுகவின் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் 'முதலமைச்சரின் லண்டன் பயணத்தை வெள்ளை அறிக்கையாக வெளியிட வேண்டும்' என்று கூறியுள்ளார். பொதுவாக வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் பயணங்களில் தொழில்துறை அமைச்சர், நிதித்துறை அமைச்சர், மூத்த அதிகாரிகள் குழு முன்பே சென்று பேச்சு வார்த்தைகள் நடத்தி, புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்ய சரியான சூழலை உருவாக்குவார்கள். ஆனால் முதல்வரின் லண்டன் பயணத்தில் தொழில்துறை அமைச்சரோ மற்ற துறைகளின் அமைச்சர்களோ, அதிகாரிகளோ முன் சென்று எந்த ஏற்பாடுகளும் செய்ததாகத் தெரியவில்லை.

ஆகவே ஒப்பந்தங்கள் செய்யப்பட்டதாகக் கூறப்படும் தகவல்கள் நம்பகத்தன்மையாக இல்லை என்று எதிர்க்கட்சிகளும், சமூக ஊடகவியலாளர்களும் கூறுகின்றனர். முதலமைச்சர் விஜய் கலந்துகொண்ட ரேஸ் படங்களே அதிகம் பகிரப்பட்டுள்ளதே தவிர ஒப்பந்தங்களின் படங்கள் பெரிதாக எதுவும் பகிரப்படவில்லை என்ற குற்றச்சாட்டை அரசியல் நோக்கர்கள் முன்வைக்கின்றனர்.

இந்தியா- பிரிட்டன் விரிவான பொருளாதார வர்த்தக ஒப்பந்தம்(CETA) நடைமுறைக்கு வந்துள்ள நிலையில், தமிழ்நாடு இதன் மூலம் கிடைக்கும் புதிய வர்த்தக வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள முயல வேண்டும். ஜவுளி, ஆடை உற்பத்தி, தோல் பொருட்கள், காலணிகள், வாகன உதிரிபாகங்கள், பொறியியல் பொருட்கள், மின்னணுவியல் போன்ற துறைகளில் பிரிட்டன் சந்தைகளில் தமிழ்நாட்டு நிறுவனங்களுக்கு அதிக வாய்ப்புகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

தமிழ்நாட்டில் உலகத்தரம் வாய்ந்த மோட்டார் ஸ்போர்ட்ஸ் நகரம் அமைக்கப்படும் என்று முதல்வர் விஜய் 110 விதியின் கீழ் சட்டசபையில் அறிவித்திருந்தார். இந்தத்திட்டத்தை முன்னெடுக்கும் வகையில் உலகப் புகழ்பெற்ற சில்வர் ஸ்டோன் மோட்டார் ரேஸிங் சர்க்கியூட்டை முதல்வர் பார்வையிடுகிறார். அங்கு மோட்டார் ரேஸிங் உள்கட்டமைப்பு, பாதுகாப்பு ஏற்பாடுகள், சுற்றுப்பாதை வடிவமைப்பு, விளையாட்டு சுற்றுலா வாய்ப்புகள், வணிக ரீதியான வாய்ப்புகள் குறித்து ஆய்வு மேற்கொள்வார் என்றெல்லாம் கூறப்பட்டாலும், அதற்கான ஆய்வுகள் வழிகாட்டல் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டதாக சரியான செய்திகள் வெளியாகவில்லை என்று எதிர்கட்சிகள் கேள்விகளை எழுப்புகின்றன.

இதுபோன்ற வெளிநாட்டுப் பயணங்கள், வெறும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், வெற்று விளம்பரங்கள் எனக் கடந்து செல்லாமல் இவை உண்மையான திட்டங்களாக வடிவம் பெற்று தொழில்கள் தொடங்கப்பட்டு வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்!



நெதர்லாந்து நாட்டின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தீவிர இஸ்லாமிய எதிர்ப்பு அரசியல்வாதியாக இருந்து பின்னர் இஸ்லாத்தின் மீதான ஈர்ப்பால் இஸ்லாத்தைத் தழுவிய யோரான் வான் கிளாவரென் (Joram van Klaveren) நேர்காணலின் கடந்த இதழ் தொடர்ச்சி...

# இஸ்லாமிய எதிர்ப்பிலிருந்து இறையச்சத்தை நோக்கி..!

## - யோரான் வான் கிளாவரென்

தமிழில் : U. ஹுசைனுல் ஆபிதீன் M.Com.,

குறைந்தபட்சம் ஒரு முறையாவது இஸ்லாமியக் கோணத்தில் இந்த உலகைச் சற்று நோக்குங்கள். நபிகளார்(ஸல்) அவர்களின் வரலாற்றை வாசிக்க முயற்சி செய்யுங்கள். முஸ்லிம்கள் எதனை நம்புகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முயலுங்கள்.

- **நீங்கள் முஸ்லிமான பிறகு உங்களைச் சுற்றி உள்ளவர்களின் எதிர்வினை எவ்வாறு இருந்தது?**

அவர்களில் பெரும்பாலானவர்களின் எதிர்வினை மிகவும் கசப்பானதாகவே இருந்தது. எனது உறவினர்கள் பலருக்கும் இது ஒரு பெரும் அதிர்ச்சியாக இருந்தது. நான் முஸ்லிமான செய்தியை அவர்கள் ஊடகங்கள் வாயிலாகவே அறிந்தனர். நான் எனது தாயாரிடம் இந்தச் செய்தியைச் சொன்னபோது அவர் தேம்பித் தேம்பி அழுதார்.

ஆனால் எனது மனைவி இது குறித்து மிகவும் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டார். அவர் கூறினார்: ‘இஸ்லாத்தை நீங்கள் உண்மையாக நம்புகிறீர்கள், அது உங்களது உள்ளம் சார்ந்த விஷயம். அதில் தலையிட நான் யார்?’ என்று மிகவும் நிதானமாகப் பதிலளித்தார்.

அரசியல் ரீதியாக எனக்குப் பெரும் சவால்கள் காத்திருந்தன. அதுவரை எனக்கு ஆதரவு அளித்து வாக்களித்தவர்களிடமிருந்து சுமார் 2,000க்கும் மேற்பட்ட கொலை மிரட்டல்கள் எனக்கு வந்தன. ‘உனது மனைவியைச் சீரழிப்போம், உன்னைச் சுட்டுக் கொல்வோம், உனது பிள்ளைகள் எந்தப் பள்ளிக்குச் செல்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும்’ என்பது போன்ற மிகக் கொடூரமான மிரட்டல்களை அவர்கள் விடுத்தனர்.

இருப்பினும் கணினிக்கு முன்னால் அமர்ந்து கொண்டு இத்தகைய மிரட்டல்களை விடுப்பவர்கள் வெறும் கோழைகளே என்பதை நான் அறிந்திருந்ததால் அவற்றைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அது ஒரு மிகவும் பரபரப்பான காலகட்டமாகும்.

நான் ஒரு கிறித்தவ அமைப்பில் பணியாற்றி வந்தேன். அதன் தலைவரிடம் நான் முஸ்லிமான செய்தியைச் சொன்னபோது, அவரால் அதனை நம்பவே முடியவில்லை. அவர் என்னிடம் கூறினார்: ‘வானொலியில் நீங்கள் சில தலைப்புகளைப் பற்றிப் பேசும் போது, உங்களது தொனி மென்மையாகி வருவதை நான் கவனித்தேன்; முன்பு போல நீங்கள் இஸ்லாத்தின் மீது கடுமையான சொற்களைப் பயன்படுத்துவதில்லை என்பதையும் உணர்ந்தேன். ஆனால் நீங்கள் முஸ்லிமாவீர்கள் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை.’ இந்த செய்தியைக் கேட்ட பிறகு அதிர்ச்சியில் அவர் இரண்டு நாள்கள் உறங்கவே இல்லை.

எனக்கு மிகவும் கடினமான தருணம் எதுவென்றால் மரணப் படுக்கையில் இருந்த எனது பாட்டனாரிடம் இந்தச் செய்தியைச் சொல்வதாகும். அவருக்கு அப்போது 93 அல்லது 94 வயதிருக்கும். எனது தாயார், 'நீ உனது பாட்டனாரிடம் இதைச் சொல்ல வேண்டும்' என்று வற்புறுத்தினார். நான் எனது தாயாரையே துணையாக அழைத்துக் கொண்டு பாட்டனாரிடம் சென்றேன்.

நான் மெதுவாக, 'தாத்தா! நான் முஸ்லி மாகி விட்டேன்' என்றேன். அவர் தனது கண்களை மூடிக்கொண்டார். முதுமையின் காரணமாக அவர் சுவாசிக்க மறக்கிறாரோ என்று நான் ஒரு நிமிடம் அஞ்சினேன். சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு, அவர் மெதுவாகக் கண்களைத் திறந்து என்னைப் பார்த்து புன்னகையுடன் கூறினார்: 'நல்லது! குறைந்தது நீ ஒரு கத்தோலிக்கராக(Catholic) மாறவில்லையே, அதுவரை மகிழ்ச்சி!' என்று நகைச்சுவையாகக் கூறினார். அவரது அந்த பதில் எனக்கு பெரும் நிம்மதியை அளித்தது.

எனது பழைய முதலாளி ஒருவர் என்னிடம் கேட்டார்: 'இன்று முஸ்லிமான நீங்கள், நாளை ஒருவேளை இந்துவாகவோ அல்லது வேறு மதத்தவராகவோ மாறமாட்டீர்கள் என்பது என்ன நிச்சயம்?'

அதற்கு நான் அளித்த பதில்: 'ஐயா! எனது வாழ்நாளில் நான் ஒரே ஒருமுறைதான் ஒரு மதத்தைத் தேர்ந்தெடுத்தேன்; அது நான் முஸ்லிமான அந்த தருணம் மட்டுமே. அதற்கு முன்பு நான் ஒரு கிறித்தவக் குடும் பத்தில் பிறந்தேன், கிறித்தவச் சூழலில் வளர்க் கப்பட்டேன். அதில் எனக்குக் கிடைத்த நன்மைகளுக்காக நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். ஆனால் கிறித்தவனாக இருப்பது என்பது எனது முடிவல்ல. நான் சுயமாகச் சிந்தித்து, ஆராய்ந்து எடுத்த ஒரே முடிவு இஸ்லாம் மட்டுமே!'

நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல எனது வாழ்நாளில் நான் எடுத்த மிக முக்கிய மான, அறிவுப்பூர்வமான (Rational) முடிவு இதுவே ஆகும். எத்தனையோ காரியங்களை நான் உடனுக்குடன் தீர்மானித்துள்ளேன்; ஆனால் இஸ்லாத்தைத் தழுவும் இந்த முடிவை எடுப்பதற்கு மட்டும் நான் பல ஆண்டுகளைச் செலவிட்டேன்.

முதன்முதலாக நான் 'ஸலாத்'(தொழுகை) நிறைவேற்றிய அந்தத் தருணம் மிகவும் அழகானது; அதே சமயம் எனக்கு மிகவும் விசித்திரமாகவும் இருந்தது. ஏனெனில் ஒரு கிறித்தவராகக் கைகளைக் கோர்த்துக்கொண்டு அல்லது மண்டியிட்டு பிரார்த்தனை செய்வதே எனக்குப் பழக்கம். ஆனால் அகிலத்தைப் படைத்த தனது இறைவனுக்கு முன்னால் ஒரு மனிதன் மிகத் தாழ்மையுடன் நிலத்தில் விழுந்து ஸஜ்தா(சிரவணக்கம்) செய்வது என்பது எப்பேர்பட்ட ஓர் உன்னதமான விஷயம்! அந்தப் பணிவு எனக்கு பெரும் மகிழ்ச்சியைத் தந்தது.

- **இஸ்லாத்தைத் தழுவிய பின் சந்தித்த சவால்கள் என்ன?**

நான் முஸ்லிமான போது மூன்று மிக முக்கியமான சவால்களைச் சந்தித்தேன்:

1. **உலகிற்கு அறிவித்தல்:** நான் பொது வாழ்க்கையில் அரசியல்வாதியாக இருந்த தால் எனது மாற்றத்தைப் பற்றி எனது குடும் பத்திற்கும், இந்த உலகிற்கும் அறிவிப்பது ஒரு பெரும் சவாலாக இருந்தது.

2. **மார்க்க கடமைகளைப் பின்பற்றுதல்:** ஒரு புரோட்டஸ்டன்ட் கிறிஸ்தவராக, மார்க்க ரீதியாகச் செய்ய வேண்டிய கடமைகள் மிகக் குறைவாகவே இருந்தன. ஆனால் ஒரு முஸ்லிமாக ஐவேளைத் தொழுகையை நிலை நாட்ட வேண்டும், உணவில் சில கட்டுப்பாடு களைப் பேண வேண்டும், எண்ணங்களில் எப்போதும் தூய்மையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

3. **இறை நினைவூட்டல்:** ஐவேளைத் தொழுகை என்பது ஒரு மனிதனுக்கு அவனது படைப்பாளனைப் பற்றி தொடர்ந்து நினை வூட்டிக் கொண்டே இருக்கிறது. ஒரு கிறித்த வராக இருந்ததை விட, ஒரு முஸ்லிமாக இப்போது நான் எனது இறைவனைப்

பற்றிய விழிப்பு உணர்வுடன்(Awareness) இருக்கிறேன். தொடக்கத்தில் இதெல்லாம் கடினமாக இருக்குமோ என்று அஞ்சினேன்; ஆனால் இஸ்லாத்தைத் தழுவிய பிறகு இவை அனைத்தும் எனக்கு மிகவும் எளிதாகி விட்டன.

எனது பிள்ளைகளை நான் ஒரு முஸ்லிமாக வளர்க்க முயற்சி செய்கிறேன். உண்மையைச் சொல்லப்போனால், இன்றைய காலகட்டத்தில் பிள்ளைகளைச் சரியான மார்க்கப் பாதையில் வளர்ப்பது என்பது ஒரு கடினமான பணியாகும். நான் திருமணம் செய்தபோது ஒரு முஸ்லிமாக இருக்கவில்லை. எனவே பிள்ளைகளைக் கிறித்தவர்களாக வளர்ப்பேன் என்று எனது மனைவியிடம் அன்று நான் வாக்குறுதி அளித்திருந்தேன்.

ஆனால் நான் முஸ்லிமான பிறகு அவர்களைக் கட்டாயப்படுத்துவதில்லை. அவர்களுக்குக் கிறித்தவம் குறித்து ஐயங்கள் எழுந்தால் அவர்கள் எனது மனைவியிடம் கேட்கிறார்கள்; இஸ்லாம் குறித்து அறிய விரும்பினால் என்னிடம் வருகிறார்கள். பல நேரங்களில் எனது மனைவி, ‘இது குறித்து உனது தந்தையிடமே கேள்’ என்று அனுப்பி வைப்பார்.

மற்றொரு நெகிழ்ச்சியான விஷயம் என்னவென்றால், எனது மனைவி இப்போது எங்கள் இல்லத்தில் அனைவருக்கும் ஹலால் உணவையே சமைக்கிறார். ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக சமைக்க என்னால் முடியாது, நீ முஸ்லிமாக இருப்பதால் இனி அனைவரும் ஹலால் உணவையே உண்போம் என்று அவர் அன்புடனும், பெருந்தன்மையுடனும் கூறுகிறார். இது எங்களது வாழ்வில் ஓர் இயல்பான மாற்றமாக அமைந்துவிட்டது.

- **இஸ்லாத்திற்கு எதிராக நீங்கள் பயன்படுத்திய வார்த்தைகளில், இன்று நீங்கள் அதிகம் வருந்தும் வார்த்தை எது?**

‘இஸ்லாம் ஒரு பொய்’ என்று நான் கூறியதுதான் எனக்கு மிகப் பெரும் வேதனையைத் தருகிறது. அதேபோல், ‘திருக்குர்ஆன் ஒரு விஷம்’ என்றும் நான் கூறி வந்தேன். ஒரு மார்க்கத்தைப் பொய் என்று சொல்வது ஜாஹிலிய்யா(அறியாமை) காலத்தின் உச்ச கட்டமாகும்.

எனது பழைய பேச்சுகள், செயல்பாடுகளுக்காக நான் என்னை இன்றும் நொந்து கொள்கிறேன். எத்தனையோ சாதாரண முஸ்லிம்கள் கூட தங்களது பணிகளைச் சரியாகச் செய்து வரும் நிலையில் நான் அத்தகைய கொடிய வார்த்தைகளைப் பயன்படுத்தினேன். இன்று எனது பழைய கட்சியைச் சேர்ந்தவர்கள் நான் அன்று பேசிய அதே தவறான வாதங்களை முன்வைக்கும் போது, அது எனக்குப் பெரும் மன உளைச்சலைத் தருகிறது.

நான் செய்த தவறுகளுக்குப் பரிகாரமாகவும், இஸ்லாம் குறித்த தவறான புரிதல்களை மக்களிடமிருந்து நீக்கவும் நாங்கள் இஸ்லாமிய அனுபவ மையம்(Islamic Experience Center - IEC) எனும் அமைப்பைத் தொடங்கியுள்ளோம். இதன் மூலம் இஸ்லாத்தின் உண்மையான முகத்தை உலகிற்கு எடுத்துச் சொல்வதையே எங்களது பணியாகக் கொண்டுள்ளோம்.

நாங்கள் தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் என அனைத்துக் கல்வி நிறுவனங்களுக்கும் நேரில் செல்கிறோம். அது மட்டுமன்றி அரசாங்கத்தின் பல்வேறு துறைகள், சமூக அமைப்புகள், தேவாலயங்களுக்கும் சென்று இஸ்லாம் குறித்து மக்களிடையே நிலவும் தவறான புரிதல்களை நீக்கி மார்க்கத்தின் உண்மையான சித்திரத்தை அவர்களுக்கு வழங்குகிறோம்.

இதற்காக நாங்கள் நவீன தொழில்நுட்பமான விர்ச்சுவல் ரியாலிட்டி(Virtual Reality) கண்ணாடிகளைப் பயன்படுத்துகிறோம். இது மக்களுக்கு ஒரு புதிய அனுபவத்தைத் தருவதோடு, இஸ்லாத்தைப் பற்றி எளிதாகப் புரிந்து கொள்ளவும் உதவுகிறது. கடந்த காலத்தில் நான் செய்த தவறுகளையும், நான் பேசிய தவறான வாதங்களையும்

மக்கள் மனதிலிருந்து துடைத்து எறிவதையே எங்களது முதன்மை நோக்கமாக கொண்டுள்ளோம்.

- **இஸ்லாத்தைப் பற்றி அறிய விரும்புபவர்கள் எவ்வாறு ஆய்வு செய்ய வேண்டும்? கூகுள்(Google) தேடுபொறியைப் பயன்படுத்துமாறு நீங்கள் அறிவுறுத்துவீர்களா?**

நிச்சயமாக இல்லை! கூகுளில் இஸ்லாத்தைத் தேடுவதை நான் ஒருபோதும் பரிந்துரைக்க மாட்டேன். நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் தயவுசெய்து உங்களது கணினிகளை மூடி வையுங்கள்! புத்தகங்களை வாசியுங்கள்; தாள்களைக் கொண்டு அச்சிடப்பட்ட உண்மையான புத்தகங்களை வாசிப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல, மார்ட்டின் லிங்க்ஸ்(Martin Lings) எழுதிய நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூலை வாசிக்குமாறு நான் பரிந்துரைக்கிறேன். புதிதாக இஸ்லாத்தைப் பற்றி அறிய விரும்புபவர்கள், ஆரம்பத்திலேயே திருக்குர்ஆனை மட்டும் வாசிக்கத் தொடங்க வேண்டாம் என்பது எனது கருத்தாகும். ஏனெனில் குர்ஆன் என்பது மிகவும் ஆழமான, நுணுக்கமான ஒரு வேதமாகும். உங்களுக்கு அதனை விளக்கிச் சொல்ல ஒரு ஆசிரியர் இல்லையென்றால், அதனைப் புரிந்து கொள்வது கடினம்.

குறிப்பாக இஸ்லாத்தைப் பற்றி அறியாத பெரும்பான்மையான மக்களுக்கு தூய அரபு மொழி(Classic Arabic) தெரியாது. அவர்கள் குர்ஆனின் ஏதேனும் ஒரு மொழிபெயர்ப்பையோ அல்லது விளக்கத்தையோ தான் வாசிப்பார்கள். பல நேரங்களில் அந்த மொழிபெயர்ப்புகள் மூல வேதத்தின் உண்மையான சாரத்தை முழுமையாகத் தந்துவிடுவதில்லை.

எனவே நீங்கள் முதலில் நபிகளாரின் வாழ்க்கை வரலாற்றை(ஸீரா) பயிலுங்கள். அவர்களது புனிதமான குணாதிசயங்களையும், அவர்களின் வாழ்க்கை முறையையும் ஆராயுங்கள். நமது பாரம்பரியம் நமக்கு அதையே கற்றுத் தருகிறது. அண்ணல் நபி(ஸல்) அவர்களது வாழ்க்கையே ‘வாழும் குர்ஆன்’ ஆகத் திகழ்கிறது. அவர்களது அந்த உன்னத வழிமுறைகளை (சுன்னத்) படிப்பதுதான் இஸ்லாத்தைக் கண்டடைவதற்கான மிகச் சிறந்த வழியாகும்.

நான் ஒரு முஸ்லிமாக மாறிய பிறகு, முன்னெப்போதையும் விட மிகவும் மகிழ்ச்சியாகவும், நிம்மதியாகவும் இருக்கிறேன். எனவே உங்கள் ஒவ்வொருவரையும் நான் இஸ்லாத்தின் பக்கம் அன்போடு அழைக்கிறேன். ஏனெனில் இது உங்கள் ஆன்மாவிற்கும், உங்கள் உள்ளத்திற்கும் மெய்யான அமைதியைத் தரும். இதுவே சத்தியம்; இது உங்கள் இதயத்தோடும் ஆன்மாவோடும் நேரிடையாகப் பேசும் வல்லமை பெற்றது.

குறைந்தபட்சம் ஒரு முறையாவது இஸ்லாமியக் கோணத்தில் இந்த உலகைச் சற்று நோக்குங்கள். நபிகளார்(ஸல்) அவர்களின் வரலாற்றை வாசிக்க முயற்சி செய்யுங்கள். முஸ்லிம்கள் எதனை நம்புகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முயலுங்கள்.

இங்கே ஒரு முக்கியமான விஷயம்: இஸ்லாத்தைப் புரிந்துகொள்ள முஸ்லிம்களின் செயல்பாடுகளைப் பார்க்காதீர்கள். ஏனெனில், என்னையும் சேர்த்து இன்று பல முஸ்லிம்கள் இஸ்லாம் சொல்லும் முழுமையான வாழ்க்கை முறையைப் பின்பற்றி வாழ்வதில்லை. நாங்கள் அனைவரும் அவ்வாறு வாழ வேண்டும் என்பதுதான் முறை. ஆனால் நடைமுறையில் பலவீனங்கள் இருக்கலாம். எனவே நீங்கள் மனிதர்களைப் பார்க்காமல், முன்மாதிரிகளுக்கெல்லாம் மேலான முன்மாதிரியாகத் திகழும் அண்ணல் நபி(ஸல்) அவர்களைப் பாருங்கள். அவர்களது புனித வரலாற்றைப் பயின்றால் நிச்சயமாக உங்களை சத்தியத்தை நோக்கி இட்டுச் செல்லும் அந்த நேர்வழியை நீங்கள் கண்டடைவீர்கள்.



LEAD100

Leadership Excellence for Advancement and Development

# எதிர்கால மாற்றத்திற்கான தலைவர்களை உருவாக்குதல்

• M. சாஜித்
இயக்குநர், VISION 2026
பொதுச் செயலாளர், Human Welfare Foundation

இந்தியா இன்று மிகப்பெரிய மாற்றத்தின் ஒரு முக்கியமான கட்டத்தைக் கடந்து வருகிறது. தொழில்நுட்பம், நிர்வாகம், தொழில், சமூக மேம்பாடு, பொது வாழ்க்கை உள்ளிட்ட பல துறைகளில் நாடு வேகமாக மாற்றமடைந்து வருகிறது. இந்த மாற்றத்திற்கு கல்வியறிவும் திறமையும் கொண்டவர்கள் மட்டுமல்லாமல், நெறிமுறை, தன்னம்பிக்கை, திறமை, சமூக அக்கறை கொண்ட தலைவர்களும் தேவை. சமூகத்தின் சிக்கல்களைப் புரிந்து கொண்டு, அதன் எதிர்காலத்தை வடிவமைப்பதில் பங்களிக்கக்கூடிய தலைமைத்துவம் அவசியமாகிறது.

இந்த விரிவான நோக்கத்துடன், Human Welfare Foundation (HWF), Vision 2026இன் கீழ் LEAD 100(Leadership Excellence for Advancement and Development) என்ற நீண்டகாலத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இந்தியா முழுவதிலிருந்தும் அசாதாரண திறமை கொண்ட இளைஞர்களைக் கண்டறிந்து, அவர்களை மெருகேற்றி பொதுக் கொள்கை, சட்டம், சமூகத் தொழில் முனைவு, பெருநிறுவன மேலாண்மை, தொழில்நுட்பம், குடிமைப்பணிகள் ஆகிய ஆறு முக்கியத் துறைகளில் தலைமைப் பொறுப்புகளை ஏற்கத் தயார்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

LEAD 100 என்பது வழக்கமான கல்வி உதவித்தொகை அல்லது கல்வி உதவித் திட்டம் அல்ல. திறமையான மாணவர்கள் தங்கள் கல்வியைத் தொடர உதவுவது அல்லது அவர்களுக்கு நிதி உதவி வழங்கு வது மட்டுமே இதன் நோக்கமல்ல. இதன் பரந்த நோக்கம் அசாதாரண திறமை களை தொடக்க நிலையிலேயே கண்ட றிந்து நீண்ட கால அடிப்படையில் அவர் களை வளர்த்து, அவர்களின் ஆளுமை, தலைமைத்துவப் பண்புகளை உருவாக்கி, சிறந்த அனுபவங்களையும் வாய்ப்புகளை யும் வழங்கி, சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்

**நாடு முழுவதிலிருந்தும் அசாதாரண திறமை கொண்ட மாணவர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்குத் தேவையான கல்வி, அனுபவம், தலைமைத்துவ வளர்ச்சிக்கான வாய்ப்பு களை வழங்குவதன் மூலம், நாட்டின் தலைமைத்துவத் தளங்களிலும் செல்வாக்கு மிக்க நிறுவனங்களிலும் இந்த சமூகங்களின் மிகவும் பயனுள்ள, அர்த்தமுள்ள பிரதிநிதித்துவத்திற்கு LEAD 100 பங்களிக்க விரும்புகிறது.**

தக்கூடிய மாற்றத்தை உருவாக்குபவர்களைக் கொண்ட புதிய தலைமுறையை உருவாக்கு வதாகும்.

இந்தியாவில் திறமையான இளைஞர் களுக்குப் பஞ்சமில்லை. ஆனால் சிறு வயதி லேயே அசாதாரண திறமையை அடையாளம் கண்டு பல ஆண்டுகளாக அவர்களின் வளர்ச்சிக்குத் தொடர்ந்து ஆதரவளிக்கும் ஒரு முறையான அமைப்பு பெரும்பாலும் இல்லாத நிலையே காணப்படுகிறது. அந்த இடைவெளியை நிரப்புவதற்கான ஒரு முயற்சியே LEAD 100.

இந்தத் திட்டத்தின் கீழ், ஐந்து ஆண்டு களில் இந்தியா முழுவதிலிருந்தும் 100 அசாதாரண திறமை கொண்ட மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொரு ஆண்டும் 20 மாணவர்கள் தேர்வு செய்யப்படுவர். இந்தப் பயணம் 10ஆம் வகுப்புக்குப் பிறகு தொடங்கி, பள்ளிக் கல்வியைத் தாண்டியும் தொடரும். தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு மாணவருடனும் நீண்ட கால உறவை உருவாக்கி, அவர்களின் கல்வி, தொழில் வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களிலும் தொடர்ந்து அவர்களுடன் பயணிப்பதே நோக்கமாகும்.

முதல் இரண்டு ஆண்டுகள் குறிப் பாக முக்கியமானதாக இருக்கும். தேர்ந் தெடுக்கப்படும் மாணவர்கள் டெல்லியில் உள்ள முன்னணி பள்ளிகளில் 11, 12ஆம் வகுப்புகளைப் படிப்பார்கள். அவர்களுக்காக ஆண், பெண் மாணவர்களுக்குத் தனித்தனி யான சிறப்பு தங்குமிடங்கள், விடுதிகள் அமைக்கப்படும். சிறந்த உள்கட்டமைப்பு, பொருத்தமான கல்வி, தங்குமிட வசதி களுடன் கற்றல், சிந்தனை, ஆளுமை வளர்ச்சிக்கு ஏற்ற சூழல் உருவாக்கப்படும்.

எனினும் இந்த இரண்டு ஆண்டுகளில் வகுப்பறைக் கல்வி மட்டுமே திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்காது. பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள், சிறந்த ஆளுமைகளுடன் மாணவர்களுக்குக் கலந்துரையாடல், தொடர்பு கொள்ளும் வாய்ப்புகள் வழங்கப்படும். இதன் மூலம் பல்வேறு தொழில்கள், நிறுவனங்கள், பார்வைகளை அவர்கள் புரிந்து கொள்ள முடியும். இத்தகைய தொடர்ச்சியான தொடர்புகள் அவர்களின் பார்வையை விரிவு படுத்துவதோடு, எதிர்காலம் குறித்த சிறந்த முடிவுகளை எடுக்கவும் உதவும்.

தலைமைத்துவத்தை புத்தகங்கள் மூலம் மட்டுமே உருவாக்க முடியாது. அதற்கு அனுபவம், கலந்துரையாடல், வழிகாட்டுதல், நிஜ உலகத்துடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்புகள் தேவை. எனவே தகவல் தொடர்புத் திறன், விமர்சன சிந்தனை, தன்னம்பிக்கை, தலைமைத்துவம், டிஜிட்டல் திறன், சமூக விழிப்பு உணர்வு, நெறிமுறை மதிப்புகள் ஆகியவை இந்தத் திட்டத்தின் முக்கியப் பகுதிகளாக இருக்கும்.

12ஆம் வகுப்புக்குப் பிறகும் இந்தப் பயணம் தொடரும். மாணவர்களின் திறமை, ஆர்வம், அவர்கள் தேர்ந்தெடுக்கும் துறையின் அடிப்படையில் இந்தியாவிலோ அல்லது வெளிநாடுகளிலோ உள்ள முன்னணி கல்வி நிறுவனங்களில் இளங்கலை, முதுகலைக் கல்வியைத் தொடர LEAD 100 தேவையான வழிகாட்டுதலையும் ஆதரவையும் வழங்கும். பொருளாதார அல்லது சமூகச் சூழ்நிலைகள், அசாதாரண திறமை கொண்ட ஒரு மாணவர் சிறந்த கல்வி வாய்ப்புகளைப் பெறுவதற்குத் தடையாக இருக்கக்கூடாது என்பதே இதன் நோக்கம்.

LEAD 100 மாணவர்களின் உயர் கல்விப் பயணம் முழுவதும் அவர்களுடன் தொடர்ந்து

பயணிக்கும். இதில் இளங்கலை, முதுகலை, PhD, Post doctoral கல்வியும் அடங்கும். அவர்கள் இந்தியாவிலோ வெளிநாட்டிலோ தங்கள் கல்வியைத் தொடர்ந்தாலும் இந்த ஆதரவு தொடரும்.

இளங்கலைப் படிப்பிலிருந்து ஒவ்வொரு மாணவரும் ஒரு விரிவான வழிகாட்டல் வலையமைப்பின்(Mentorship Network) ஒரு பகுதியாக இருப்பார். ஒவ்வொரு மாணவருடனும் ஒரு கல்வி வழிகாட்டியும், ஒரு தனிப்பட்ட வழிகாட்டியும் தொடர்ந்து தொடர்பில் இருப்பார்கள். கல்வி வழிகாட்டி அவர்கள் தேர்ந்தெடுத்த துறை, கல்வி வாய்ப்புகள், தொழில் பாதைகள் குறித்து வழிகாட்டுவார். தனிப்பட்ட வழிகாட்டி உயர்கல்வி, தொழில் முறை வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சவால்கள், முக்கிய முடிவுகளில் ஆலோசனை, பார்வை, ஆதரவை வழங்குவார். இந்தத் தொடர்ச்சியான வழிகாட்டலின் நோக்கம், மாணவர்கள் தங்கள் பயணத்தில் ஒருபோதும் தனிமையாக உணராமல் இருப்பதை உறுதி செய்வதாகும்.

ஆனால் ஒரு முன்னணி கல்வி நிறுவனத்தில் சேருவது இந்தப் பயணத்தின் இறுதி இலக்கு அல்ல. LEAD 100இன் உண்மையான வெற்றி, இந்த இளைஞர்கள் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்புகளை எதிர்காலத்தில் எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதில் தான் இருக்கும்.

இந்தத் திட்டத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆறு துறைகளிலும் திறமையான, சமூக அக்கறை கொண்ட தலைமைத்துவம் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்த முடியும். பொதுக் கொள்கையும் குடிமைப் பணிகளும் நிர்வாகம், பொது நிறுவனங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன; சட்டம் நீதி, உரிமைகளை வடிவமைக்கிறது; தொழில் நுட்பம் பொருளாதார, சமூக மாற்றத்திற்கு வேகம் அளிக்கிறது; பெருநிறுவன மேலாண்மை தொழில், வேலைவாய்ப்பைப் பாதிக்கிறது; சமூகத் தொழில் முனைவுகள் நீண்டகால சமூகப் பிரச்னைகளுக்குப் புதிய தீர்வுகளை உருவாக்கும் திறன் கொண்டவை.

இந்த முயற்சிக்கு மற்றொரு முக்கியமான பரிமாணமும் உள்ளது. சிறுபான்மை, பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்த திறமையான இளைஞர்கள், அந்தச் சமூகங்களில் ஏராளமான திறமைகள் இருந்தபோதிலும், பல முக்கிய நிறுவனங்கள், செல்வாக்கு மிக்க பதவிகளில் போதுமான பிரதிநிதித்துவத்தைப் பெறுவதில்லை. நாடு முழுவதிலிருந்தும் அசாதாரண திறமை கொண்ட மாணவர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்குத் தேவையான கல்வி, அனுபவம், தலைமைத்துவ வளர்ச்சிக்கான வாய்ப்புகளை வழங்குவதன் மூலம், நாட்டின் தலைமைத்துவத் தளங்களிலும் செல்வாக்கு மிக்க நிறுவனங்களிலும் இந்த சமூகங்களின் மிகவும் பயனுள்ள, அர்த்தமுள்ள பிரதிநிதித்துவத்திற்கு LEAD 100 பங்களிக்க விரும்புகிறது.

இத்தகைய பிரதிநிதித்துவத்தை வெறும் எண்ணிக்கையின் அடிப்படையில் பார்க்கக் கூடாது. தங்களின் திறமை, நேர்மை, பங்களிப்பின் மூலம் மதிப்பைப் பெறும் தலைவர்களை உருவாக்குவதே நோக்கம். அவர்கள் தங்கள் சமூகங்களின் அனுபவங்களையும் எதிர்பார்ப்புகளையும் இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தின் முக்கிய நீரோட்டத்தில் திறம்பட கொண்டு வரக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

LEAD 100இன் தத்துவம் எளிமையானது, ஆனால் மிகுந்த இலட்சியம் கொண்டது: அசாதாரண திறமைகளை ஆரம்ப நிலையிலேயே அடையாளம் காண்பது, குணநலன், திறமையில் முதலீடு செய்வது, சிறந்த வாய்ப்புகள், அனுபவங்களை வழங்குவது, மேலும் இளைஞர்களைப் பொறுப்புடன் தலைமை ஏற்கத் தயார்படுத்துவது.

இந்தத் திட்டம் ஒரு நீண்டகால முயற்சியாக உருவாக்கப்பட்டுள்ளது. முதல் ஐந்து ஆண்டுகளில் 100 மாணவர்களைக் கொண்ட ஆரம்பக் குழு உருவாக்கப்படும். ஆனால் அவர்கள் உயர்கல்வி, தொழில்முறை வாழ்க்கையில் நுழைந்த பிறகும் அவர்களுடனான தொடர்பு தொடரும். காலப்

போக்கில் இந்த இளம் தலைவர்களின் வலையமைப்பு பல்வேறு துறைகளைச் சேர்ந்த தொழில்முறையாளர்கள், மாற்றத்தை உருவாக்குபவர்களை உள்ளடக்கிய ஒரு சமூகமாக வளர்ந்து, ஒருவருக்கொருவர் ஆதர வளித்து சமூகத்திற்குப் பல்வேறு வழிகளில் பங்களிக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

Human Welfare Foundation கடந்த பல ஆண்டுகளாக கல்வி, சுகாதாரம், சமூக மேம்பாடு, திறன் மேம்பாடு, சமூக அதிகார மளித்தல் போன்ற துறைகளில் விரிவாகப் பணியாற்றி வருகிறது. LEAD 100 அந்தப் பரந்த நோக்கத்தின் மற்றொரு பரிமாண மாகும். பல வளர்ச்சித் திட்டங்கள் உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தும் நிலையில் இந்த முயற்சி எதிர் காலத்திற்கான தலைமைத்துவ திறனை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது.

LEAD 100 மூலம் மேற்கொள்ளப்படும் முதலீடு உண்மையில் மனித ஆற்றலில் செய்யப்படும் முதலீடாகும். 100 இளைஞர்கள் வெற்றிகரமான தொழில் வாழ்க்கையை உரு வாக்குவது மட்டுமே இதன் நோக்கமல்ல. அதைவிடப் பெரிய எதிர்பார்ப்பு என்னவென் றால் அவர்கள் நெறிமுறை, மனவலிமை, தன்னம்பிக்கை, திறமை, சமூக அக்கறை கொண்ட தலைவர்களாக வளர வேண்டும்; பொறுப்பை ஏற்க வேண்டும்; நிறுவனங்களில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த வேண் டும்; மேலும் நாட்டைச் செதுக்கும் பணியில் முன்னணியில் இருந்து பங்களிக்க வேண்டும்.

LEAD 100 என்ற பெயர் ஒரு எண்ணில் தொடங்கலாம். ஆனால் அதன் பார்வை அந்த எண்ணை விட மிகவும் விரிவானது. இந்த 100 இளைஞர்கள் தங்கள் துறைகளில் ஆயிரக் கணக்கான மக்களின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தி, தங்கள் சொந்த பணித் துறைகளில் மேலும் உள்ளடக்கிய, திறன் மிக்க முன்னேற்ற மான இந்தியாவை உருவாக்குவதில் பங்களிப் பார்கள் என்பதே இதன் நம்பிக்கை.

https://www.hwfindia.org/lead100/


# HIJAZ

## LEATHERS PVT. LTD.,

**Tanners & Exporters of Finished Leathers & Fashion Gloves**

**HEAD OFFICE :**
17/7, Wuthucattan Street,
Periamet, Chennai - 600 003.
☎ : +91-44-25615938, 25612969.

**TANNERY :**
#1056/A1, Konamedu,
Vaniyambadi - 635 751.

**GLOVE FACTORY :**
560, National Highway - 46, Girisamudiram
Vaniyambadi - 635 751. ☎ : +91-4174-290590.
E-mail : pmyousuf@gmail.com, hijazleathersindia@yahoo.co.in
Website : www.hijazleathers.com

• K. ஜலாலுத்தீன்

# நானிலத்தின் நன்மாதிரி
# நபிகள் நாயகம்(ஸல்)
# சென்னைப் பேருரைகள்




**நூல்:**
நானிலத்தின் நன்மாதிரி நபிகள் நாயகம் (ஸல்)

**ஆசிரியர்:**
பேரறிஞர் சையத் சுலைமான் நத்வி

**தமிழில்:**
மௌலவி காஞ்சி அப்துர் ரஊஃப் பாகவி,

ஹுஸைனுல் ஆபிதீன்

**வெளியீடு:**
ரஹீமா பதிப்பகம், மஹ்மூத் பந்தர், பரங்கிப்பேட்டை 608 502
அலைப்பேசி: 8870688698

**பக்கங்கள்:**
416

**விலை:**
ரூ. 350/-

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க கால இஸ்லாமிய அறிவுலகில் அழியாச் சுவடுகளைப் பதித்த படைப்புகளுள் முக்கியமான இடத்தைப் பெறுவது பேரறிஞர் சையத் சுலைமான் நத்வி அவர்கள் 1925 ஆம் ஆண்டு அன்றைய மத்ராஸ்(சென்னை) மாநகரில் நிகழ்த்திய எட்டு வரலாற்றுச் சொற்பொழிவுகளாகும். பின்னாளில் 'குத்பாத்தே மத்ராஸ்'(Khutbt-e-Madras) என்ற தலைப்பில் உருது மொழியில் தொகுக்கப்பட்ட இப்பேருரைகள், அண்ணல் நபி முஹம்மது(ஸல்) அவர்களின் ஆளுமையை வரலாறு, பகுத்தறிவு, நாகரிகவியல், சமூகவியல், ஆன்மிகவியல் ஆகிய துறைகளின் ஒளியில் விளக்கும் அரிய ஆய்வு நூலாகப் போற்றப்படுகின்றது.

இப்பேருரைகள் நிகழ்த்தப்பட்ட காலம் மேலைநாட்டு ஓரியண்டலிய ஆய்வாளர்கள் இஸ்லாத்தையும், அண்ணல் நபி(ஸல்) அவர்களையும் குறித்துப் பல்வேறு தவறான கருத்துகளை உலகளவில் பரப்பியிருந்த காலமாகும். இந்நிலையிலே உணர்ச்சிவசப்பட்ட மறுப்புரைகளை முன்வைப்பதற்குப் பதிலாக வரலாற்றுச் சான்றுகளும் பகுத்தறிவும் ஆய்வுமுறையும் சார்ந்த அணுகுமுறையைக் கையாண்டு நபித்துவத்தின் உண்மைத் தன்மையையும், அண்ணலாரின் வாழ்வியல் மகத்துவத்தையும் நிறுவுவதே சுலைமான் நத்வி அவர்களின் உயரிய நோக்கமாக இருந்தது.

முதற் பேருரையில் மனித வரலாற்றில் இறைத்தூதர்களின் பங்கு விளக்கப்பட்டு அவர்களின் தொடர்ச்சியில் இறுதி நபியாக முஹம்மது(ஸல்) அவர்கள் வகிக்கும் தனித்துவமான இடம் தெளிவுபடுத்தப்படுகிறது. மனித சமுதாயம் எதிர்கொண்ட அறச்சிதைவு, ஆன்மிக வெறுமை, சமூக அநீதி ஆகியவற்றிற்கு இறைவன் அருளிய முழுமையான வழிகாட்டுதலாக அவர்களின் தூதுத்துவம் அமைந்தது என்பதை ஆசிரியர் நிறுவுகிறார்.

அடுத்தடுத்த பேருரைகளில் அண்ணல் நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கை உலக வரலாற்றிலேயே மிகத் துல்லியமாகவும் தொடர்ச்சியாகவும் ஆவணப்படுத்தப்பட்ட வாழ்க்கை என்பதைக் கூறுகிறார். நபியவர்களின் பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு நிகழ்வும் நம்பத்தகுந்த அறிவிப்பாளர்களின் தொடர் வழியாகப் பாதுகாக்கப்பட்டிருப்பது மனித வரலாற்றில் ஒப்புயர்வற்ற சாதனையாகும் என்று விளக்குகிறார்.

இப்பேருரைகளின் சிறப்பம்சம் முஹம்மத் நபி(ஸல்) அவர்களை ஒரு சமயத் தலைவராக மட்டும் சித்திரிக்காமல், முழுமையான மனிதர் என்ற உயரிய நிலைக்குக் கொண்டு செல்வதாகும். இறைவழிபாட்டில் திளைத்த ஆன்மிக ஞானியாகவும், அன்பும் அருளும் நிறைந்த குடும்பத் தலைவராகவும், ஒப்பற்ற ஆசிரிய

ராகவும், நீதியை நிலைநாட்டிய அரசியல் தலைவராகவும், கருணையுள்ள நீதிபதியாகவும், தொலைநோக்குடைய நிர்வாகியாகவும், கட்டுப்பாடும் கருணையும் இணைந்த படைத் தலைவராகவும், மனிதகுல நலனையே இலட்சியமாகக் கொண்ட சமூகச் சீர்திருத்த வாதியாகவும் அவர்களின் பன்முக ஆளுமை விரிவாக ஆராயப்படுகிறது.

குறிப்பாக சமூக நீதியை நிலைநாட்டுவதில் அண்ணலாரின் பங்களிப்பை சுலைமான் நத்வி ஆழமாக எடுத்துரைக்கிறார். பிறப்பாலும், இனத்தாலும், செல்வத்தாலும் மனிதன் உயர்வதில்லை; இறையச்சமும் நற்குணமுமே உயர்விற்கான அளவுகோல் என்ற குர்ஆனியக் கொள்கையை வாழ்வில் நடைமுறைப்படுத்திய தலைவராக அண்ணல் நபிகளார் விளங்கினார்கள் என்பதை வரலாற்று நிகழ்வுகளின் வழி நிறுவுகிறார்.

பெண்களின் உரிமைகள், அநாதைகளின் பாதுகாப்பு, ஏழைகளின் நலன், அடிமை முறையை ஒழிப்பதற்கான படிப்படியான சீர்திருத்தங்கள், மதச்சுதந்திரம், மனித மாண்பின் பாதுகாப்பு ஆகிய அனைத்துத் துறைகளிலும் அவர் நிகழ்த்திய மாற்றங்கள் உலக நாகரிக வரலாற்றில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தின என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

அதே போன்று அரசியல் அதிகாரமும் ஆன்மிகப் பொறுப்பும் ஒன்றுக்கொன்று முரண்படாதவை என்பதை நபிகளாரின் வாழ்க்கை நிறுவியதாக ஆசிரியர் வலியுறுத்துகிறார். ஆட்சி என்பது ஆதிக்கத்தின் கருவியல்ல; அறத்தை நிலைநாட்டும் பொறுப்பு என்பதையும், அதிகாரம் என்பது தனிப்பட்ட பெருமைக்காக அல்ல; சமூக நலனுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய இறைநம்பிக்கையின் ஒப்படைப்பு என்பதையும் அவர் எடுத்துரைக்கிறார்.

இப்பேருரைகளின் மற்றொரு சிறப்பியல்பு வரலாற்று உண்மைகளை வெறும் நிகழ்வுகளாக மட்டும் கூறாமல் அவற்றிலிருந்து நாகரிக வளர்ச்சிக்கான பொது விதிகளை ஆசிரியர் வெளிக்கொணர்வதாகும். இஸ்லாம் என்பது குறிப்பிட்ட இனத்தாருக்கோ காலத்திற்கோ உரிய சமயமன்று; மனிதகுலம் முழுவதற்குமான வாழ்வியல் நெறி என்பதை ஆழ்ந்த ஆய்வின் வழி நிறுவுகிறார். எனவே அண்ணல் நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கை முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கும் நிலையான வழிகாட்டி என்ற முடிவை இப்பேருரைகள் வலியுறுத்துகின்றன.

சுலைமான் நத்வி அவர்களின் மொழிநடை ஆய்வின் ஆழமும் இலக்கியத்தின் இனிமையும் சங்கமித்த ஓர் அரிய வடிவமாகும். உரைநடையில் செறிவும், கருத்தில் தெளிவும், மேற்கோள்களில் நம்பகத்தன்மையும், வாதத்தில் தர்க்க நயமும் ஒன்றிணைந்து விளங்குகின்றன. திருக்குர்ஆன் வசனங்கள், நபிமொழிகள், வரலாற்றுச் செய்திகள், முந்தைய நாகரிகங்களின் சான்றுகள், பகுத்தறிவின் ஒளி ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைத்து அறிவார்ந்த வாசகனின் சிந்தனையைத் தூண்டும் உயரிய ஆய்வுக் களமாக இந்நூலை அவர் உருவாக்கியுள்ளார்.

இவ்வகையில் சென்னைப் பேருரைகள் என்பது வெறும் சமயச் சொற்பொழிவுகளின் தொகுப்பன்று; நபித்துவத்தின் வரலாற்று உண்மையை அறிவியல் ஆய்வு முறையில் நிறுவிய மாபெரும் சான்று நூலாகும். அண்ணல் நபி(ஸல்) அவர்களின் ஆளுமையை மனித வரலாற்றின் உச்ச முன்னுதாரணமாக நிலைநிறுத்திய இந்நூல் இன்றும் இஸ்லாமிய ஆய்வாளர்களாலும் ஒப்பீட்டு நாகரிக ஆராய்ச்சியாளர்களாலும் தவிர்க்க முடியாத முதன்மை ஆதாரமாக மதிக்கப்படுகிறது. 1925ஆம் ஆண்டு சென்னையில் ஒலித்த அந்த எட்டு பேருரைகளின் அறிவொளி காலத்தையும் எல்லைகளையும் கடந்து இன்றளவும் அறிவுலகை ஒளிர்வித்துக் கொண்டிருப்பது அவற்றின் நிலையான பெருமைக்கு அழியாத சான்றாகும்.

ரஹீமா பதிப்பகம் அழகுற வெளியிட்ட இந்த நூலை மௌலவி காஞ்சி அப்துர் ரஊஃப் பாகவியும் ஹுஸைனுல் ஆபிதீனும் இனிய தமிழில் மொழிபெயர்த்துள்ளார்கள். அனைவரும் வாசிக்க வேண்டிய நூல்.



# இறுதி முடிவை இனிதே அமைத்துக் கொள்வோம்!

● அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது

நீங்கள் எப்போது மரணிப்பீர்கள்? எங்கு மரணிப்பீர்கள்? என்பது உங்கள் கவலையாக இருக்க வேண்டியதில்லை. ஏன் தெரியுமா? அது உங்கள் கையில் இல்லை! அது பற்றியெல்லாம் அறிந்தவன் இறைவன் மட்டுமே. மாறாக நான் எந்த நிலையில் மரணிப்பேன்? நான் என்ன செய்து கொண்டிருக்கும் போது எனக்கு மரணம் வரும் என்பதே நம் ஒவ்வொருவருடைய மிகப் பெரிய கவலையாக இருக்க வேண்டும்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'ஒவ்வொரு அடியானும் அவன் எந்த நிலையில் மரணித்தானோ அந்த நிலையிலேயே எழுப்பப்படுவான்' (முஸ்லிம், அஹ்மத்)

இறைவனுக்குக் கீழ்ப்படிந்த நிலையில், ஒரு வணக்கத்தில், நற்காரியத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் மரணித்தவர் அதே நிலையில் மீளெழுப்பப்படுவார்; அல்லாஹ்வுக்கு மாறு செய்து, ஒரு பாவத்தில் ஈடுபட்ட நிலையில் மரணித்தவர் அந்த நிலையிலேயே எழுப்பப்படுவார்.

நமது ஆரம்ப கால மனிதர்கள் சொன்ன ஒரு விஷயம் இங்கு குறிப்பிடத்தக்கது. 'நீங்கள் எவ்வாறு வாழ்கிறீர்களோ, அவ்வாறே மரணிப்பீர்கள். நீங்கள் எவ்வாறு மரணிக்கிறீர்களோ, அவ்வாறே எழுப்பப்படுவீர்கள். நீங்கள் எவ்வாறு எழுப்பப்படுகிறீர்களோ, அவ்வாறே (விசாரணைக்காக) ஒன்று திரட்டப்படுவீர்கள்'

இதுவொரு பெரிய உண்மையாகும். இவ்வுலக வாழ்க்கை எவ்வாறு இருக்கிறதோ அதுவே மறுமை நிலையைத் தீர்மானிக்கும் என்பதை இந்தக் கூற்று ஆழமாக விளக்குகின்றது. எனவே எந்நிலையிலும் நல்லது செய்து, நன்மை செய்து வாழும் போதே நாம் நல்ல முடிவைப் பெற முடியுமாக இருக்கும்.

இறைவா! எங்களுக்கு நல்ல முடிவைத் தந்தருள்வாயாக. நீ எங்கள் மீது திருப்தியடைந்த நிலையில் எங்களது உயிர்களைக் கைப்பற்றுவாயாக! ஆமீன்!

# சமரசம் புதிர் போட்டி 19

- இந்தப் பகுதியில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடையை 2026 அக்டோபர் 15 ஆம் தேதிக்குள் கடிதம் மூலமோ, 73050 40386 என்ற வாட்ஸ் அப் எண்ணிலோ, samarasam.article @gmail.com என்ற மின்னஞ்சல் மூலமோ அனுப்பலாம்.
- சரியான விடையை எழுதுபவர்களுக்கு ரூபாய் 200 பரிசுத் தொகையாக வழங்கப்படும்.
- ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் தேர்ந் தெடுக்கப்பட்டு பரிசுத் தொகை வழங்கப்படும்.
- இப்பகுதியில் கேட்கப்பட்டுள்ள கேள்விகள் குர்ஆன், ஹதீஸ், கடந்த சமரசம் இதழ்கள் ஆகிய வற்றிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது.
- போட்டியில் கலந்து கொள்பவர் தங்களின் பெயர், முகவரி, அலைப்பேசி, G Pay எண் ஆகிய வற்றை அவசியம் குறிப்பிட வேண்டும்.

1. ‘ஆண்கள், பெண்களில் எவர்கள் முஸ்லிம்களாகவும், நம்பிக்கையாளர்களாகவும், கீழ்ப்படிபவர்களாகவும், வாய்மையாளர்களாகவும், பொறுமையுடையோராகவும், அல்லாஹ்வின் முன்னிலையில் பணிபவர்களாகவும், தானதர்மம் செய்பவர்களாகவும், நோன்பு நோற்பவர்களாகவும், தங்களுடைய வெட்கத்தலங்களைப் பாதுகாப்பவர்களாகவும் இன்னும் அல்லாஹ்வை அதிகமாக நினைவுகூருபவர்களாகவும் இருக்கின்றார்களோ, திண்ணமாக அவர்களுக்காக அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான கூலியையும் தயார் செய்து வைத்துள்ளான்’ இந்த வசனம் இடம் பெற்றுள்ள திருக்குர்ஆன் அத்தியாயம்

   அ) அல் அஹ்ஜாப ஆ) அந் நூர்

2. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘யார் அல்லாஹ்வுக்காக நேசித்து, அல்லாஹ்வுக்காக வெறுத்து, அல்லாஹ்வுக்காகக் கொடுத்து, அல்லாஹ்வுக்காகத் தடுத்துக் கொண்டாரோ, அவர் ஈமானைப் முழுமைப்படுத்திக் கொண்டார்’ இந்த நபிமொழியை அறிவித்தவர்

   அ) அபூ உமாமா (ரலி) ஆ) அபூதர்(ரலி)

3. ‘அல்லாஹ்வின் தூதரே! குர்ஆனின் வசனங்கள் ஆண்களை நோக்கியே உரையாடுகின்றனவே! பெண்களைப் பற்றி ஏன் குறிப்பிடப்படவில்லை?’ என்று நபி(ஸல்) அவர்களிடம் கேட்டவர்

   அ) அன்னை ஆயிஷா(ரலி)
   ஆ) அன்னை உம்மு ஸலமா(ரலி)

4. ‘முஹம்மத்(ஸல்) அவர்களைப் போன்ற ஒரு தலைவர் நவீன உலகின் ஆட்சியைப் பிடித்தால் உலகின் தற்போதைய பிரச்னைகள் அனைத்தையும் தீர்த்து அமைதியையும், மகிழ்ச்சியையும் கொண்டு வருவார்’ என்று கூறியவர்

   அ) அன்னிபெசண்ட் அம்மையார்
   ஆ) ஜார்ஜ் பெர்னாட்ஷா

5. பசிபிக் பெருங்கடலின் மேற்பரப்பு வழக்கத்தை விட குளிர்ச்சியாக மாறும் நிலை

   அ) எல் நினோ ஆ) லா நினா

6. The Modern Review இதழில் The Rashtrapati என்ற தலைப்பில் சாணக்யா எனும் புனைப் பெயரில் கட்டுரை எழுதியவர்

   அ) மகாத்மா காந்தி ஆ) ஜவஹர்லால் நேரு

7. ஆங்கில மருத்துவத்தில் இஞ்சியைப் பயன் படுத்தும் முறை

   அ) Zingi Beracac
   ஆ) Zinger Officinalai

8. ‘இடைத்தேர்தலில் ராஜினமா செய்தவர்களுக்கு மீண்டும் வாய்ப்பு கொடுத்திருக்கக் கூடாது’ என்று கூறிய தவெக கூட்டணியிலுள்ள காங்கிரஸ் MP

   அ) கார்த்தி சிதம்பரம் ஆ) மாணிக்கம் தாகூர்

## புதிர் போட்டி பதினேழுக்கான விடைகள்

1. அ) அல் பகறா 2. ஆ) இப்னு மாஜா 3. ஆ) டாக்டர் ஜே. சதக்கத்துல்லாஹ் 4. அ) எத்தனால் 5. ஆ) இராஜஸ்தான் 6. ஆ) மொய்சுத்தீன் 7. ஆ) திமாகி நக்சல் 8. ஆ) மேகதாது அணை

### சரியான விடையை எழுதியவர்கள்:

1. முஹம்மது சலீம், புதுச்சேரி 2. G. கிருஷ்ணன், ஆற்காடு 3. சோழா புகழேந்தி, கரியமாணிக்கம் 4. A. ரெஹானா பர்வீன், பொதக்குடி 5. V.S. சம்சுத்தீன் ஃபைஜி, கடையநல்லூர் 6. ஸ்ரீமதி, மஞ்சக்குப்பம் 7. ந.அனிபா, நாமக்கல் 8. G. அன்பழகன், ஆற்காடு 9. இனாயா சபீர் அஹமது, பண்டாரவாடை 10. T.A. அயானா, கடையநல்லூர் 11. முஹம்மத் உவைஸ், ஏர்வாடி 12. H. ஷாகுல், கொரக்கவாடி 13. பிர்தௌஸ், திருநெல்வேலி 14. H. நபிசா, சென்னை 15. P.P. யூசுப் ஹசன், கடையநல்லூர் 16. பர்சானா பர்வீன், ஆழ்வார்திருநகரி 17. A. கவுஸ்மீரான், திருநெல்வேலி 18. R. ஃபாத்திமா பிர்தௌஸ், மயிலாடுதுறை

**பரிசுக்குரியவராகக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்:**

**G. கிருஷ்ணன், ஆற்காடு**

● ஜரினா ஜமால்

# 45 அக்கரைப் பச்சை

இரவு ஆமினா அக்காவுடன் அவளுடைய இரு மகன்களும் வந்தார்கள். சாலிஹாவின் சின்னத்தம்பியும் ரஷிதாவும் பீவி அம்மாவுடன் கலந்தாலோசனை செய்தார்கள்.

எல்லோரும் ஒரே வார்த்தையைச் சொன்னார்கள். இப்போதுள்ள சூழ்நிலையில் எந்த ஒன்றும் ஆரம்பிக்க வேண்டாம். சில ஆண்டுகள் சென்னையில் அந்தப் பிள்ளைகளுடன் தங்கியிருந்து நல்ல அனுபவம் பெறவும். மேலும் வசதியாக நல்ல இடம் அமையும் போது நீ நினைத்தது போல் ஆரம்பிக்கலாம் என்றார்கள்.

சாலிஹா பதிலளிக்கவில்லை. இறுகிய முகத்துடன் அமர்ந்திருந்தாள்.

எல்லோரும் போன பிறகு பீவியம்மா, 'சாலிஹாமா! உங்க மேடம் எனக்குப் போன் போட்டாங்க!'

'என்ன உங்கட்ட பேசினாங்களா? நீங்க வேற வேலய விட்டுடாதேன்னு உபதேசம் பண்ணுறீங்களே, அத எப்படியோ அந்தம்மா மோப்பம் பிடிச்சிருப்பாங்க. எங்க சொன்னா காரியம் நடக்கும்னு உங்கட்ட பேசியிருக்காங்க! ரொம்ப தந்திரக் காரம்மா'

'அப்படியெல்லாம் பெரியவங்களைப் பேசாதே சாலிமா! அவர்களின் படிப்பும், அனுபவமும், எடுத்த காரியத்தைச் சரியாகச் செய்ய வேண்டுமே என்ற வைராக்கியமும் தான் அவங்களுக்குக் கீழே வேலை செய்பவர்களிடம் கண்டிப்பாக நடக்கச் சொல்லுது. கோபம் இருக்கும் இடத்தில் தான் நல்ல குணமும் இருக்கும். உன்னைப்பத்தி எப்படியெல்லாம் பேசுறாங்க தெரியுமா?

பிள்ளைங்களைப் பெற்ற நான் கூட வேலைக்காரங்கட்டத்தான் வளக்கச் செய்தேன். அவர்களைப் பராமரிப்பதை விட கண்டிப்போடு நடந்தேன். ஆனால் உங்க பொண்ணு கணக்கில்லா பிள்ளைகளிடம் அன்பைக் கொட்டி அவர்களை அரவணைத்துப் போவது எனக்கு வியப்பாஇருக்குன்னாங்க. உங்க மகளுக்கு என்மீது நிறைய வருத்தம். அவள் எங்களை விட்டுப் போய்விடக்கூடாது என்றே நான் கடுமையாக நடந்தேன். இனி அப்படி ஏதும் நடக்காது. இப்போது புதுப்புது பிள்ளைகளும் வருகிறார்கள். சாலிஹாவுக்கு ரொம்ப கஷ்டமும் கொடுக்க மாட்டேன். இன்னும் வசதிகளும் செய்து கொடுப்பேன். சம்பளமும் கூட்டி ஆகிவிட்டது. சாலிஹாவை ஒரு வகுப்பிற்கு டீச்சராகவும் போட்டிருக்கிறேன்.

வயிற்று உணவிற்கும், வாழ்க்கையின் உயர்வுக்கு கல்வியும் கிடைக்காமல் கொடுமைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் அந்த குஜராத் பிள்ளைகளுக்காக சாலிஹாவை சமாதானப்படுத்தி அனுப்பிவையுங்கள் அம்மா! பெற்றோர்களை, குடும்பங்களை, ரத்த உறவுகளை இழந்த அந்தக் குழந்தைகள் சீரழிந்து விடக்கூடாது. கல்வியை ஊட்டி உலகத்தில் அவர்களும் ஆரோக்கியமாக வளர வாழ வகை செய்யவே பாடுபடுகிறேன். நீங்க பெரியவங்க உங்க மகளுக்குச் சொல்லுங்கம்மா' என்று சைதா மேடம் போனில் பேசியது எல்லாம் பீவி அம்மா கூறினாள்.

சாலிஹா தன் எண்ணப்படி ஏதும் நடக்க தன் குடும்பத்தினரே தனக்குத் தடையாக இருப்பதை நினைத்து குமைந்தாள்.

'சாலிமா உனக்குச் சொல்ல வேண்டும் என்று கிடையாது உன் வழியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உனக்கு இருக்கு:

'பிள்ளைகளுக்காகப் போகலாம்மா. ஆனால் சைதா மேடத்திடம் வேலை

செய்வது கடலுக்குள் விழுவது போல் மூச்சு முட்டும் போது என் பாடு உங்களுக்குத் தெரியாது புரியாது.'

'கடலுக்குள் விழுந்து விட்டால் நீந்தித் தானேமா கரையை அடைய முடியும்? பயந்து முயற்சி செய்யாமல் விட்டால் கடலில் மூழ்கி இறக்க நேரிடும். முயற்சி செய்வது முக்கியமல்ல! எதற்கு முயற்சி செய்கிறோம் என்பதே முக்கியம். ரோட்டில் பயமில்லாமல் வண்டி ஓட்டும் நாம வாழ்க்கையில் நெரிசலில் படகோட்ட அஞ்சுகிறோம். மனித இனம் ஆற்றல் மிகுந்தது. அதைக் குறுகிய வட்டத்தில் அடைந்தால் நம்முடைய இயலாமை வெளிப்படும். ஒவ்வொரு பிள்ளையையும் செதுக்கு! உன் எதிர்காலத்துக்கு மட்டுமல்லாமல் மறுமைக்கும் அவர்கள் உயர்வில் உன் பங்கு மகத்தானதாக இருக்கும்'

சிறுவயதில் இருந்து பீவி அம்மா கண்ட புத்தகங்களையும் படித்துப் படித்துக் கரைத்துக் குடித்து வைத்திருந்தார். யாரெல்லாம் தங்கள் கவலைகளை வந்து சொல்வார்களோ அவர்களுக்கெல்லாம் அதற்குத் தகுந்தார் போல ஆதரவாகப்பேசுவார்.

தாயார் சொல்லும் சமாதானங்கள் எல்லாம் நன்றாக இருக்கு. ஆனால் சாலிஹாவின் உள்ளம் ஏற்க மறுத்தது. சைதா மேடத்திடம் தோல்வி அடைய மனம் விரும்பவில்லை. இதைச் சொன்னா பீவி அம்மா தோல்விதான் வெற்றியின் முதல் படிக்கட்டு என்பாள். தோற்றவரே வென்றவர் என்று அடுத்த தத்துவத்தைப் பேச ஆரம்பிப்பாள்.

அமைதியாக அங்கிருந்து எழுந்து சென்றாள். எதிரே ஒரு டிரேயைக் கொண்டு வந்து நீட்டினாள் ரஷிதா.

'இளவரசி! இரண்டு நாள்களாக இரண்டு ஓலைகள் வந்து பிரிக்கப்படாமல் உள்ளது'

'நீயும் எங்கம்மாவுடன் சேர்ந்து நெல்லைத் தமிழையும், மதுரைத் தமிழையும் கரைத்துக் குடிக்க ஆரம்பித்து விட்டாய்'

'இதோ படிக்கிறேன். இரண்டு நாளாக நடக்கும் குழப்பப் போராட்டத்தில் நினைவே இல்லாமல் போய் விட்டது'

முதல் கவரை எடுத்துப் பார்த்தாள். அனுப்பியவர் பெயர் இல்லை. கவரைப் பிரித்தாள்.

முத்து முத்தான எழுத்துகள்.

அன்புள்ள சகோதரி! உங்கள் மீதான அக்கறையினால் இதை எழுதுகிறேன். நீங்கள் வசதியும் வாய்ப்பும் உள்ளவர்கள் என்று அறிவேன். நீங்கள் அந்த வழக்கறிஞரிடம் படும் பாட்டை நன்கு அறிவேன். நீங்கள் தயவு செய்து மீண்டும் பராமரிப்புப் பணிக்காக இங்கே வராதீர்கள். உங்கள் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். திரும்பவும் வந்தால் உங்களுக்கு மதிப்பில்லை. மேடத்திற்கு உங்களைப் பார்க்கவே பிடிக்காது. எனவே நீங்கள் உங்கள்



வீட்டிலேயே இருந்து கொள்ளுங்கள். அது தான் உங்களுக்கு நல்லது. இப்படிக்கு உங்கள் நலனில் அக்கரையுள்ள சகோதரி.

இது என்ன மொட்டைக் கடிதம் இறுதியில் கையெழுத்துப் போடும் இடத்தில் முதலெழுத்து எழுதி அடிக்கப்பட்டிருந்தது. உற்று உற்றுப் பார்த்தாள். எழுத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. என்ன ஒரு முட்டாள்தனம். என்னை அழைப்பதற்கும், தடுப்பதற்கும் யாருக்கு உரிமை உள்ளது?

அடுத்த கவரைப் பிரித்தாள் சாலிஹா.

தொடரும்..



சிறார் உலகம்

# பிரார்த்தனை

● சித்தி ரொக்கையா

அடியானுக்கும்
இறைவனுக்கும் இடையேயான
உளப்பூர்வமான உரையாடல்

மனிதனையும் இறைவனையும்
இணைக்கும் ஓர் அழகிய பாலம்

நமக்கு என்ன தேவை என்பது
நம்மைப் படைத்தவனுக்குத்
தெரியாதது அல்ல
நம் உள்ளத்தில்
நாம் சொல்லாமல் வைத்திருப்பதையும்
அவன் அறிந்தவனே

ஆனால்
என்னிடம் கேளுங்கள்
என்று அழைக்கின்றான்
மீண்டும் மீண்டும்
தன்னிடம் கேட்பதை
அவன் விரும்புகின்றான்

அடுத்தவர்களிடம்
கையேந்துவதைவிட
படைத்த இறைவனிடம்
இருகை ஏந்திக் கேட்பதே சிறப்பு

யாரும் அறியாமல்
நாம் சிந்தும் கண்ணீரைக்கூட
அவன் அறிகின்றான்

மனிதர்களிடம் சொல்ல முடியாத
வலிகளையும்
வார்த்தைகளால்

வெளிப்படுத்த முடியாத
வேதனைகளையும்
அவனிடம் சொல்லலாம்

கண்ணீரும் ஒரு பிரார்த்தனை
ஏக்கமும் ஒரு பிரார்த்தனை
நம்பிக்கையும் ஒரு பிரார்த்தனை

உண்மையாகக் கேள்
உறுதியுடன் கேள்
தொடர்ந்து கேள்
கேட்பதில் சலிப்படையாதே

இன்று கிடைக்கவில்லை என்பதற்காக
உன் துஆவை நிறுத்திவிடாதே
தாமதம் என்பது
மறுப்பு என்று அர்த்தமல்ல

சில நேரங்களில்
நாம் விரும்பியதை விடச்
சிறந்ததை வழங்குவதற்காகவும்
இறைவன் காத்திருக்கச் செய்வான்

தாமதமானால்
பொறுமை காக்கத் தவறாதே
கிடைத்தவுடன்
நன்றி செலுத்த மறவாதே

கேட்கும்போது
நம்பிக்கையுடன் கேள்
கிடைக்கும்போது
நன்றியுடன் இரு
தாமதமானால்
பொறுமையுடன் இரு

இரண்டு படங்களுக்கும் இடையே உள்ள
வித்தியாசத்தை கண்டுபிடியுங்கள் குட்டீஸ்





# வார்த்தை விளையாட்டு

சிதறிக் கிடக்கும் எழுத்துகளை ஒழுங்குபடுத்தி சரியான சொல்லைக் கண்டுபிடியுங்கள்.

அடுத்து வட்டத்துக்குள் இருக்கும் எழுத்து களைக் கொண்டு இந்திய நகரங்களில் ஒன்றைக் கண்டுபிடியுங்கள்.

| லா | ல் | மை | க |
|---|---|---|---|
| | | | ● |

| ரி | ன் | சூ | ய |
|---|---|---|---|
| ● | | | |

| ன் | சா | ர் | றோ |
|---|---|---|---|
| | | | ● |

**விடை : அடுத்த இதழில்..**

## சித்திரம் பேசுது..!



M. இலானா, UKG,
வேலம்மாள் நெக்ஸஸ் பள்ளி,
முகப்பேர்



C. ஹாதியா, 6ஆம் வகுப்பு,
இஸ்லாமியா மெட்ரிக்குலேஷன்
மேல்நிலைப்பள்ளி, கோயமுத்தூர்

***அன்புச் செல்லங்களே..!*** இது உங்கள் பக்கம். சிறுகதை, கவிதை, துணுக்கு, விடுகதை என நீங்கள் எதுவும் எழுதலாம்! இங்கு இடம்பெற்றுள்ள அழகிய வண்ண ஓவியங்களைப் போல நீங்களும் ஓவியங்கள் வரைந்து அனுப்பலாம். வாட்ஸ்அப்பில் அனுப்ப: **7305040386**

அனுப்ப வேண்டிய முகவரி : *சிறார் உலகம், சமரசம் மாதமிருமுறை இதழ்*
*IFT லேன், 138 பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 600012*

# ஃபலஸ்தீனுக்கு ஆதரவான யூதர்களின் குரல்







லூயிஸ் ஹாமில்டன்


மேக்கிள்மோர்


ரபி எல்ஹானான் பெக்

இத்தாலியில் 83ஆவது வெனிஸ் சர்வதேசத் திரைப்பட விழா 2026 செப்டம்பர் 2 முதல் 12 வரை நடைபெற்றது. இதில் காஸா இனப்படுகொலையின் போது AI தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பொதுமக்கள் கொல்லப்பட்டதை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்ட NAZA எனும் ஆவணப்படம் சிறப்பு நடுவர் விருதையும்(Special Jury Prize), பார்வையாளர்களிடமிருந்து தொடர்ச்சியான 24.5 நிமிடங்கள் எழுந்து நின்று கைத்தட்டலையும் (Standing Ovation) பெற்று உலக சாதனை படைத்துள்ளது.

இந்த ஆவணப்படம் பத்திரிகையாளர் யுவல் ஆபிரகாம், திரைப்பட இயக்குநர் ரேச்சல் சோர்ஸ் ஆகிய இரு யூதர்களால் இஸ்ரேலில் எடுக்கப்பட்டது. இவர்கள் இதற்கு முன் ஃபலஸ்தீனில் நடத்தப்படும் மீளக்குடியமர்த்தல் தொடர்பாக No Other Land என்னும் ஆவணப்படத்திற்காக ஆஸ்கார் விருது பெற்றிருந்தனர்.

NAZA ஆவணப்படம் இஸ்ரேலிய இராணுவம், உளவுத்துறையைச் சேர்ந்த 24 அதிகாரிகள் வழங்கிய ரகசிய வாக்குமூலங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு வெனிஸ் சர்வதேசத் திரைப்பட விழாவில் துனிசிய திரைப்பட இயக்குநர் கௌதர் பென் ஹனியா இயக்கிய ஃபலஸ்தீனர்களின் வலிகளைப் பேசும் The Voice of Hind Rajab ஆவணப்படம் சிறப்பு நடுவர் விருதையும் (Special Jury Prize), பார்வையாளர்களிடமிருந்து தொடர்ச்சியான 23 நிமிடங்கள் எழுந்து நின்று கைத்தட்டலையும் (Standing Ovation) பெற்றிருந்தது.

அண்மையில் ஏழு முறை ஃபார்முலா 1 (F1) உலக சாம்பியன் பட்டம் வென்ற லூயிஸ் ஹாமில்டன், ‘இக்கட்டான சூழலில் நாம் மௌனமாக இருப்பது சரியான தேர்வு அல்ல. ஃபலஸ்தீனுக்காகக் குரல் கொடுக்க வேண்டும். அங்குள்ள குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்’ என்று சமூக வலைதளப் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

மார்வெல் திரைப்படங்களின் மூலம் ‘ஹல்க்’ அல்லது ‘புரூஸ் பேனர்’ என்று உலகளவில் அறியப்படும் மார்க் ருஃபாலோ ஆகியோர் ஃபலஸ்தீனுக்கு தங்கள் முழு ஆதரவைத் தெரிவித்து உள்ளனர்.

புகழ்பெற்ற அமெரிக்க ராப் பாடகர் மேக்கிள்மோர், பிரபல பாடகர் எட் ஷிரனின் தங்களது இசைப் பயணத்திலிருந்து கிடைத்த 1 மில்லியன் டாலரை ஃபலஸ்தீன மக்களுக்கு உதவும் அமைப்புகளுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

யூத மத குருவான ரபி எல்ஹானான் பெக் ‘இந்த நிலத்தின் முழுமையான உரிமை ஃபலஸ்தீனர்களுக்கே உரியது’ என்று தனது முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

**- ரியாஸ் மொய்தீன்**

Published by H. Abdur Raqeeb on behalf of Creative Communication Chennai, 138 Perambur High Road, Chennai -12.
Printed by : S. Rajan at Bharani Offset Printers, 77, Venkatathiri Street, Chennai - 12. Editor : H. Abdur Raqeeb.

ST COURIER®
The People's Choice

YOUR E-COMMERCE, OUR EXPERTISE

# WE NOW ACCEPT TO PAY & COD BOOKINGS

"A NEW GATEWAY FOR YOUR BUSINESS"




SAFE & SECURE DELIVERY

FAST & RELIABLE

NATIONWIDE NETWORK

TRUSTED BY BUSINESSES

Priority

Follow Us On :

Posted at Egmore RMS - Patrika Channel
SAMARASAM Tamil Fortnightly 01 - 15 October 2026 Registered With the RNI No : 33723/81
Postal Regn. No. TN/CCN/428/2024-2026 WPP No : TN/PMG(CCR)/WPP 450/2024-2026
(Publication Date 1st & 16th of Every Month) Posted on 1-3 & 16-18 of Every Month.

Anywhere - Anytime

- Domestic
- International
- Cargo




Send your documents & Parcels through

THE PROFESSIONAL COURIERS

Pro premium a professional service › DOMESTIC › INTERNATIONAL › CARGO

**BUSINESS ENQUIRY :**
No.32, Thiru-Vi-Ka Salai,
Royapettah, Chennai-600014.
Phone: 044-4555 3222
E-Mail: maaro-mkt@tpcglobe.co.in
Website: www.tpcglobe.com

**SERVICE ENQUIRY :**
No.17, Cathedral Garden Road,
Nungambakkam, Chennai-600034.
Phone: 044-6620 2020
E-Mail: maaro@tpcglobe.co.in
Website: www.tpcglobe.com